கல்கி
KALKI 20.1.2002
ரூ. 6.00
வைரவிழா ஆண்டு



குமுறுகிறார்
நிஷா :

"எங்க பிழைப்பைக் கெடுக்கலாமா?"

Steelwin®

THE RECLINER CHAIR

முழுமையான சுகம்

உங்கள் விரல் முனையில்



Patent No. 178496

Imagine being able to do all this on one chair! Steelwin's amazing Recliner can change from chair to hammock to bed and everything in between, in a trice, at a gentle flick of the elegant arms rest. That's the Recliner. A chair that changes to suit your need.

CHENNAI : Triveni & Co. 5, Raja Street, T. Nagar, Chennai - 600 017. Ph: 4360111.

Siva Sakthi Industries, 100, Menambedu Road, SIDCO IND. ESTATE, AMBATTUR, Chennai - 98. Ph: 623 3957.

BANGALORE : Steelwin, 131, Devatha Plaza, Residency Road, Bangalore - 560 025. Ph: 080 - 2210541, 2221866

DEALERS

• **Purasawalkam :** ○ Sakthivel Enterprises, Ph: 6433556 • **Annanagar :** ○Carrefour, Ph:6210933. ○J.F.A, Ph: 6223377. National Furnitures, Ph:6212666. • **Annasalai :** ○Apollo chairs, Ph:8411960. ○Spencer & Co., Ph: 8523611. ○Chellarams, Ph: 856 3046 • **Royapettah High Road :** ○J.F.A., Ph: 813 1384.○Sathya Furniture Co. Pvt. Ltd., Ph: 4983929. ○ Cyber Cove Furniture Mart. Ph: 8207211. • **Ashok Nagar :** J.F.A. Ph: 3713493. • **Teynampet:** ○Imperial Furniture Co., Ph: 4349644. ○Kapsons, Ph:4339986. • **T.Nagar :** ○Fantasy Furniture Co., Ph : 8234420. ○Gunas Marketing, Ph: 4340083. ○Muthu Furniture, Ph:4344193. ○New Gold House Foams & Furnishers, Ph: 8230375. ○Anush Furniture, Ph: 4338021. • **Lloyds Road :** ○Indroyal Furniture Co., Ph: 826 8966. • **Vadapalani:** ○Palve, Ph: 4840812. • **Egmore:** ○New Foam Palace, Ph : 8250688 • **Kilpauk :**○Seating World, Ph : 6444005 • **Adyar :** ○Deepak Furnitures, Ph: 4465625 ○Maruthi Decors, Ph: 4420783 • **Thiruvanmiyur :** ○Punyas Agencies, Ph: 4481520. ○Jayaraja Furniture, Ph: 4456315 • **Guindy:**○Cybercove Furniture Mart, Ph : 2322111 • **Nanganallur :** ○Balasubramaniam & Co., Ph: 2332425 • **Avadi :** ○Sri Lakshmi Agencies, Ph : 6551549 • **Thiruvottiur:**○Comfort Foams & Furniture, Ph : 5735849

List of Dealers in Tamil Nadu

• **Coimbatore:** Elite Furniture, Ph: 399122. Rexin Land, Ph:233240. Elite Furniture Mart, Ph:236662. Carrefour, Ph: 302303. • **Erode :** A.P. Thomas, Ph: 257471. • **Karaikudi :** Sree Laxmi & Sons, Ph:38286 • **Kumbakonam:** Standard Steel Furniture, Ph: 421846. Bismi Furniture, Ph: 425262. • **Madurai :** Sacs Enterprises, Pvt. Ltd., Ph: 536212. Sri Vinayakam Furniture, Ph: 746746. Sacs & Sons, Ph: 747656. • **Mayiladuthurai:** Bismi Furniture Pvt. Ltd., Ph: 22856. • **Nager Koil:** Rohith Furniture, Ph: 76955. • **Pudukottai:** Mumtaj Furniture Mart, Ph: 22060 • **Ramanathapuram:** Surya Home Applicante, Ph: 21009. • **Salem:** Millennium Neo Furn, Ph: 419145. • **Thanjavur:** Standard Steel Furniture, Ph: 31493. • **Tirunelveli:** Bright Furniture, Ph: 333028. • **Tirupur:** Woodland Furniture works, Ph: 425181. • **Trichy:** Cauveri Furniture, Ph: 764661 - Galaxy Wood House, Ph: 763551 - Vedham Furniture, Ph: 76[illegible]33. • **Tuticorin:** Ganga Rajesh Furniture, Ph: 326245. • **Kovilpatty:** Bharath Furniture Super Market,Ph: 21258. • **Vellore :** T.P.G. & Sons, Ph : 20333. • **Sivakasi :** Bharath Agencies, Ph: 422789. • **Sankaran Kovil :** Rajesh Agencies, Ph:22410

List of Dealers in Kerala

• **Calicut:** ○Ruby Furniture Co., Ph: 721307 • **Cochin:** ○Diwaniya Associates, Ph:330888 ○Manuel Sons Exporters Pvt Ltd, Ph: 366742 ○Comfurn Furnitures & Interior Decorators, Ph : 345688 • **Thiruvananthapuram:** ○Marikar (Motors)Ltd., Ph: 477420 • **Trichur:** ○M.D. Francis & Sons, Ph:420613 ○M.D. Francis & Co., Ph: 212464 ○Furniture Plaza, Phone : 443453

List of Dealers in Andhra Pradesh

• **Hyderabad:** ○Furniture World, Ph: 3353706 ○ Om Prakash Iron Metal Works, Ph : 4602260 - ○Posh Living Furniture, Ph: 6661322 • **Nellore:** ○House Beauty Furniture, Ph: 326586 • **Secunderabad :** ○Aalishaan Furniture, Ph : 7844750 ○Linga Plaza, Ph:7744859 • **Visakhapatnam :** ○Wood Decor, Ph:706752 ○Wood Land, Ph: 552313 ○Buba's Furniture Furnishings, Ph: 516255 ○The Decograph Interiors, Ph: 530770 • **Vijayawada :**○Amulya Steel Wood Furnitures. Ph: 574584 ○Alankar Tubular Furniture Mfg.Co., Ph: 579725

PONDICHERRY: Bismi Furniture Pvt. Ltd., Ph: 346139. Sadhuram Industries, Ph: 338588.





அழகி

படம் தொடங்கின முதல் காட்சியில் மட்டும்தான் 'அழகி என்றொரு சினிமா பார்க்க வந்திருக்கிறோம், நாம் ஒரு ரசிகர்' என்பதெல்லாம் ஞாபகத்தில் இருக்கிறது. அதன் பிறகு நாம் அமர்ந்த திரையரங்க இருக்கையே, கால எந்திரத்தின் இருக்கையாகி, நமது பால்ய காலம், பள்ளிப் பருவம், படிப்புக்காக பட்டணத்திற்குப் புலம் பெயர்ந்த பருவம், நடப்பு வாழ்க்கை என்று நம் கையைப் பிடித்து கூட்டிக் கொண்டு போகிறது. திரையில் நிழலாய் நகரும் பாத்திரங்களை நிஜமாய் வரித்துக்கொண்டு, அவற்றோடு நம்மை, நம் பழைய காதலை, நம் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும் 'கேரக்டர் ஐடென்டிபிகேஷனுக்குள்' மூழ்கடித்து விடுகிறது படம்!

இத்தனைக்கும் தங்கர்பச்சான் எழுதிய 'கல்வெட்டு' சிறுகதைதான், இரண்டரை மணி நேர இருக்கை நுனி திரைக் கதையாகியிருக்கிறது.

பிள்ளைக்காதல், பிறகு பள்ளிக் காதல் என்று அரும்பி, பரஸ்பரம் காதல் இருப்பது தெரிந்தும் அதைப் பகிர்ந்து

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

கொள்வதற்கு முன், வாழ்க்கை வெள்ளம் எங்கோ அடித்துக்கொண்டு போய்விடுகிறது. பழைய காதலை இழந்து தவிக்கும் அந்த தூய உள்ளங்கள் மீண்டும் வேறொரு சூழ்நிலையில் சந்திக்கிறபோது ஏற்படும் வலி நிறைந்த சந்தோஷமும், இழப்புகளும்தான் கதை!

மேக்கப்பும் ஜிகினா உடைகளும், பளபளக்கும் போலி பிம்பங்களும் பார்த்துப் பழக்கப்பட்ட தமிழ் ரசிகர்களுக்கு, இப்படியும் இங்கேயொரு யதார்த்த உலகம் இருக்கிறது என்பதை இனிமை சொட்டச் சொல்லியிருக்கிறார் தங்கர்பச்சான். முந்திரிக் காடுகளும் அதையொட்டிய மக்கள் வாழ்விலுமிருந்து உருவாக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு காட்சியும் ஒரு செம்மண் கவிதை!



"பிசியோதெரபி பண்ணியவர் ஹோட்டல் வைத்தால் என்ன பெயர் வைப்பார்?"
"பசியோதெரப்பி!"
— வெல்ஜீன்

வடக்கிலிருந்து கவர்ச்சிக்காக அழைத்து வரப்படும் நடிகைகளுக்கு மத்தியில், நந்திதாதாஸ், நான் நடிக்கவே வந்தவள் என்பதை நிரூபித்திருக்கிறார். சாலை போடும் தொழிலாளியாக, விபத்தில் சிக்கிய மகனை கைகளில் அள்ளி வைத்துக்கொண்டு நடுரோட்டில் கதறுகிற காட்சி இருக்கிறதே - இதயம் நடுங்குகிறது! பார்த்திபன் மட்டும் என்ன! வழக்கத்திற்கு மாறாக வசனங்களைக் குறைவாகப் பேசி நந்திதாவுடன் நடிப்பில் போட்டி போட்டிருக்கிறார்.

சண்முகம், தனலட்சுமி இருவரின் பால்யம் மற்றும் பள்ளிப் பருவ வாழ்க்கையைக் காட்டும் பிளாஷ்பேக் காட்சிகள்தான் படத்தின் ஆகச் சிறந்த அற்புதம்!

ஒவ்வொரு பருவத்திற்கும், நடிகர்களை, தீவிரமாகத் தேடியலைந்து, மண்ணின் மைந்தர்களையே நடிக்க வைத்து, பொருத்தமாகவும், நேர்த்தியாகவும் வேலை வாங்கியிருக்கும் தங்கர்பச்சானை எவ்வளவு பாராட்டினாலும் தகும். வளர்மதி பாத்திரத்தில் வரும் தேவயானி, காக்கையன் கட்டையன் இப்படி ஒவ்வொரு பாத்திரமும் இரத்தமும் சதையுமாக நம் அருகில் நெருங்கி வருகிறார்கள்.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, கோவை பேச்சுமொழியைக் கேட்டதுண்டு... முதல்முறையாக பண்ருட்டித் தமிழை சிதைக்காமல் பயன்படுத்தியிருக்கிறார்கள். முக்கியமாக நந்திதாதாஸுக்குக் குரல் கொடுத்திருக்கும் சவீதாவை குறிப்பிட வேண்டும்.

மனத்தில் ஆணியடித்த மாதிரி இறங்குகிறது இளையராஜாவின் விஸ்வரூப இசை. 'பாட்டுச் சொல்லி பாடச் சொல்லி' பாடல் இனி பட்டிதொட்டியெங்கும் பயணம் புறப்படும். பள்ளிக் கூரையில் விளையாடும் அணில்களுக்காக காத்திருந்து படம் பிடித்திருக்கும் தங்கர்பச்சானின் கேமரா, ஒவ்வொரு காட்சியிலும் ஓவியமாய் விரிகிறது. கல்லூரி மாணவர்கள், காதலிப்பவர்கள், காதலை இழந்தவர்கள், அம்மாக்கள் அப்பாக்கள் என்று எல்லா தரப்பினரும், எல்லா வயதினரும் பார்த்து பரவசப்பட வேண்டிய அழகியில் விவேக்கின் தனி டிராக் காமெடி, திருஷ்டிப் பரிகாரம் மாதிரி படத்தின் எக்ஸ்பிரஸ் வேகத்தைத் தடுக்க முயல்கிறது. ஆனாலும் இறுதியில் அழகியே வெல்கிறாள். எல்லோர் இதயத்தையும்தான்!

— விஷுவல்தாசன்

○ ஃபெயில் ○ ஜஸ்ட் ஃபாஸ்

○ ஆவரெஜ் ○ அபவ் ஆவரெஜ்

● டிஸ்டிங்ஷன்

கவர்னர் நியமனம் ஜெ. சிபாரிசா?

"அரசியல் ரீதியாக மிக உஷ்ணமான மாநிலம் ஆயிற்றே தமிழ்நாடு. எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?" என்று தமிழக கவர்னராக பொறுப்பேற்கவிருக்கும் பி.எஸ். ராம்மோகன் ராவை தில்லியில் 'ஈநாடு' நிருபர் கேட்டபோது "ரொம்ப சங்கடமான கேள்வி கேட்டு மாட்டி விடப் பார்க்கிறீர்களே!'' என்று சிரித்துக் கொண்டே நழுவினாராம்! ஆனாலும் விடாப்பிடியாக நிருபர் தொடர்ந்த போது "அரசியல் சட்ட அடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட அளவு அதிகாரம் மட்டுமே கவர்னரிடம் விடப்பட்டிருக்கிறது" என்று பதில் சொன்னார் ராவ். அரசியல் மணம் கொண்ட வாணவேடிக்கைகளுக்கு கவர்னர் மாளிகை ஓர் இடமாக இருக்காது என்பதை விளக்கும் பதிலாக அதை எடுத்துக் கொள்ளலாம் என்கின்றனர் சில ஆளும்கட்சிப் பிரமுகர்கள்.



• ராவ்

67 வயதாகும் ராவ் பட்டப்படிப்பையும் பட்ட மேற்படிப்பையும் முடித்தது சென்னை மாநிலக் கல்லூரியில். "சென்னை நகரத்தின் ஒவ்வொரு பகுதியையும் நான் அறிவேன். அழகான அமைதியான நகரம் சென்னை. மீண்டும் அங்கு செல்வதில் இரட்டிப்பு சந்தோஷம்" என்கிறார் ராவ். தமிழைப் புரிந்து கொண்டாலும் பேசுவதில் கொஞ்சம் சிரமம் உண்டு.

பெங்களூர் அறிவியல் கழகத்தில் சிறிது காலம் பணியாற்றிய பின், சிவில் சர்வீஸ் ஆர்வம் அவரைத் தொற்றிக் கொண்டது. அதன்படி ஐ.பி.எஸ் பணியில் சேரும் வாய்ப்பு கிடைத்தது. பயிற்சியின்போது அவரது தோழர், மறைந்த தமிழக போலீஸ் அதிகாரி மோகன்தாஸ். ஆந்திராவில் பல மாவட்டங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்தவர் ராவ். அது தவிர மத்திய புலனாய்வுத் துறையில் கிட்டத்தட்ட பன்னிரண்டு வருட காலம் பணியாற்றியவர். நாட்டிலேயே 51 வயதில் காவல் துறைத் தலைவராக வாய்ப்பு பெற்றவர் ராவ் மட்டுமே. ஆனால் சென்னா ரெட்டி காலத்தில் அதே பொறுப்பில் தொடர்ந்த போது, விஜயவாடாவில் நடந்த கலவரம் காரணமாக போலீஸ் அல்லாத வேறு பொறுப்புக்கு மாற்றப்பட்டார். அப்போது விஜயவாடாவில் கோஷ்டி மோதலில் மோகனரங்கா என்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து கட்டுக்கடங்காத கலவரம் வெடித்தது. கலவரத்தை அடக்குவதில் போலீஸின் பங்கு கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

பொதுவாகவே ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிகளை கவர்னராக போடும் போது, எல்லைப்புறங்களில் உள்ள சிறிய மாநிலங்களுக்குத்தான் போடுவார்கள். ஆனால் அந்த மரபை உடைத்து பெரிய மாநிலமான தமிழ்நாட்டிற்கு கவர்னராக அனுப்பப்பட்டிருக்கிறார் ராவ். காரணம் மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு செய்த பலமான சிபாரிசும், சந்திரபாபு நாயுடுவின் க்ரீன் சிக்னலும்தான். "கவர்னர் நியமன விஷயத்தில் மாறனை மத்திய அரசு கலந்தாலோசித்தது" என்கிறார் ஒரு தி.மு.க. எம்.பி. ஆனால் ஆளும்கட்சிப் பிரமுகர்கள் ஜெயலலிதாவின் சம்மதத்தின் பேரிலேயே ராவ் கவர்னராக நியமிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஹைதராபாத்தில் நீண்ட நாட்களாக ஜெ. தங்கியதன் காரணம் இதுதான் போலிருக்கிறது. தாம் தோழமையுடன் இருக்க விரும்புவதாக சந்திரபாபு நாயுடுவுக்கும் தகவல் அனுப்பி நட்புப் பாலம் கட்டி விட்டாராம் ஜெ.

ராவ் கவர்னர் பொறுப்பேற்றதும் முதல் காரியமாக, கவர்னர் மாளிகையில் நீண்ட காலமாக கோலோச்சிக் கொண்டிருக்கும் அதிகாரி மாற்றப்படுவாராம்!

— ப்ரியன்

ஐயோ, பொதுத் தேர்வா?

"பிளஸ் டூ மற்றும் பள்ளியிறுதி வகுப்பில் கிராமப்புறத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்குப் பாதி தேர்ச்சி பெறாமல் போய், படிப்புக்கே குட்பை சொல்லி விடுவதால் ஐந்தாம் வகுப்பிலிருந்தே அவர்களைப் பொதுத் தேர்வுக்கு உட்படுத்தி, அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு முடிவு செய்திருகிறது" என்று கல்வி அமைச்சர் தம்பிதுரை அறிவித்திருக் கிறார்... அரசின் முடிவு பற்றிய அலசல்...

• ராஜ்மோகன்

அரசுத்திட்டம் அரைவேக்காட்டுத்தனம்!

டாக்டர் ராமதாஸ்: மாணவர்களின் அறிவுத் திறனைப் பரி சோதிக்க தேர்வுகள் நடத்தட்டும்; வேண்டாம் என்று சொல்ல வில்லை. ஆனால் யாரையும் ஃபெயில் ஆக்கக் கூடாது. குறைவான மதிப்பெண் பெறும் மாணவர்களுக்குத் தனிக் கவனம் செலுத்துங்கள். காரணம் இப்போது கல்வித் துறையில் உள்ள அடிப்படைக் கட்டுமான வசதிகள், ஒரு மாணவனுக்கு, குறிப்பிட்ட வகுப்புக்கு ஏற்ப, முழு அறிவையும் போதிப்பதாக இல்லை. இப்போதுள்ள வசதிகளை வைத்துக் கொண்டு தேர்வுகள் நடத்துவது என்பது, ஊனமான ஒருவனை ஓட்டப் பந்தயத்தில், கலந்து கொள்ளச் செய்வதுபோல் ஆகும். இப்போது என்ன நிலை? ஐந்தாம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளில் ஓர் ஆசிரியர். எட்டாம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளில் இரண்டு ஆசிரி யர்கள். ஒவ்வொரு பாடத்துக்கும் தனித் தனி ஆசிரியர்கள் கிடையாது. மரத் தடியில் பள்ளிக் கூடம்; மழை வந்தால் விடுமுறை; கழிப்பறை கிடை யாது. பள்ளியில் இருக்கும் ஆசிரி யரும், அடிக்கடி மட்டம் போடும் நிலை. இந்த நிலை யில் மாணவனுக்கு முழுமையான பயிற்சி கிடைக்குமா?







அப்படி முழு பயிற்சி கிடைக்காத மாணவனைத் தேர்வுக்கு - அதுவும் - பாஸா; ஃபெயிலா என்ற தேர்வுக்கு உட்படுத்துவது எப்படிச் சரியான அணுகுமுறை ஆகும்? அரசு, நகராட்சி, பஞ்சாயத்து பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளைக் கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகளோடு ஒப்பிடக் கூடாது. இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் வாரம், மாதம் ஒரு தேர்வு நடத்துகிறார்களே

என்று கல்வி அமைச்சர் கூறுகிறார். நீங்களும் அது போல் நடத்துங்கள். இறுதித் தேர்வில் மாணவனை ஃபெயில் ஆக்காதீர்கள். முதலில் வசதிகளை உருவாக்குங்கள். கட்டாயக் கல்வி கொண்டு வாருங்கள்.

நமது பாடத் திட்டங்கள்தான் எப்படியிருக்கின்றன? மெக்காலே கல்வி முறை குமாஸ்தாக்களை வளர்க்க உதவுகிறதே தவிர, க்ரியேடிவ்வாக மாணவர்கள் சிந்திக்க உதவுகிறதா? இங்கு மனப்பாடம் செய்து பரீட்சை எழுதி நல்ல மார்க் வாங்கினால் சிறந்த மாணவன் என்கிறார்கள். இது சரிதானா? அறிவு பூர்வமாக சிந்திக்க வைக்கும் பாடத்திட்டங்கள் இல்லை. நிறைய ஆசிரியர்கள், நல்ல பாடதிட்டம், முழுமையான பயிற்சி ஆகியவற்றிற்கு அரசு முன்னுரிமை கொடுக்கட்டும். அப்படிச் செய்யாமல் அரைவேக்காட்டுத்தனமாக இது போன்ற திட்டங்களைக் கொண்டு வந்தால் அது சீரழிவுக்குத்தான் வழி வகுக்கும்.

தோல்விகளை உருவாக்காதீர்கள்

டாக்டர். மா. நன்னன்: அடுப்பில் சாதம் வடிக்கும்போது அரிசி வெந்துவிட்டதா? என்று பார்க்கிறோம். அது போலத்தான் தேர்வுகள். ஒரு ஆசிரியர் போதித்தது மாணவனுக்கு எந்த அளவுக்கு உள்ளத்தில் பதிந்துள்ளது என்பதைத் தெரிவிப்பவைதான் தேர்வுகள். ஆனால் இப்போது அரசு அறிவித்துள்ள பொதுத் தேர்வு திட்டம் நடத்தவே முடியாது; அந்த எண்ணமே அவர்களுக்குக் கிடையாது. சில எரியும் பிரச்னைகளிலிருந்து திசை திருப்ப இது போன்ற அறிவிப்புகளை வெளியிடுகிறார்களோ என்று கூட சொல்லத் தோன்றுகிறது. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை போதித்தவன் என்ற முறையில் சொல்கிறேன்; இப்போது பத்தாம் வகுப்பு, பிளஸ் டூ வகுப்புகள், பொதுத் தேர்வை நடத்தவே கடும் சிரமமாக இருக்கிறது. இந்த நிலையில் மேலும்

• நன்னன்





ஐந்து வகுப்புகளுக்குப் பொதுத் தேர்வு நடத்தினால் வினாத்தான் அச்சடிப்பு, திருத்துவது, திருத்துவதற்கு ஊதியம் என்று கோடிக்கணக்கில் செலவாகும். பஞ்சப்பாட்டு பாடும் அரசுக்கு நிதி எங்கிருந்து வரும்? இப்போது பிளஸ் ஒன் வகுப்பில் தேர்ச்சிப் பரீட்சை கிடையாது. முன்பு இஎஸ்எல்சி என்று எட்டாம் வகுப்பில் பொதுத்தேர்வு வைத்தார்கள். அதையும் ரத்து செய்து விட்டார்கள். ஏனென்றால் பொதுத் தேர்வு நடத்தினால் ஃபெயிலானவர்கள் படிப்புக்கே முழுக்கு போட்டு விடுகிறார்கள். பத்து, பன்னிரண்டு லட்சம் பேருக்குப் பொதுத்தேர்வு நடத்தவே படாதபாடு படும் அரசு, அறுபது லட்சம் பேர்களுக்குப் பொதுத் தேர்வு நடத்த முயற்சிப்பது ஆக்கப்பூர்வமாக

அமையாது. நடைமுறைச் சிக்கல்கள் பல உண்டு.

பாஸா, ஃபெயிலா பார்த்து ஒரு நல்ல மாணவனை உருவாக்க முடியாது. காரணம் இன்று ஆசிரியர்களே கூட தகுதியுடையவர்களாக இல்லை.

இது போன்ற ஒரு திட்டம் கொண்டு வரும் போது சம்பந்தப்பட்டவர்களைக் கலந்தாலோசித்துதான் கொண்டு வர வேண்டும். இவர்கள் யாரைக் கேட்டார்கள்? உடனே கல்வியாளர்கள், பெற்றோர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் கொண்ட குழுவைப்



போட்டு, நன்றாக அலசி, அறிக்கை கொடுக்கச் சொல்லுங்கள். அதைச் சட்டப் பேரவையில் விவாதம் செய்யுங்கள். அதன்பிறகு அமல்படுத்துங்கள். இதையெல்லாம் 'செய்யாமல் எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று இது போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தினால், கல்வித் துறையில் 1945க்கு முன்பிருந்த நிலைதான் உருவாகும்; தன்னம்பிக்கையற்ற கோழைகளாக மாணவர்கள் உருவாகி விடுவார்கள். குழந்தை தொழிலாளர்கள் அதிகரிப்பார்கள்.

பாஸா, பெயிலா பார்க்காதே!

ராஜ்மோகன் (தலைவர், த.மா.கா ஆசிரியர் பிரிவு): ஓய்வு பெற்று விட்ட கல்வியாளர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் ஏன் கல்வி அமைச்சருக்குமே கூட இந்த விஷயம் தெரியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இப்போது இருக்கும் பாடத் திட்டமே, மாணவனின் திறனை (skill) பரிசோதிக்கும் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பரீட்சை என்றால்தான் மாணவர்கள் படிப்பார்கள் என்பதால், காலாண்டு, அரையாண்டு, முழுத் தேர்வை பள்ளியில் நடத்துகிறார்கள். எனவே தற்போது கல்வியின் நோக்கம் மாணவர்களின் திறனை வளர்ப்பதுதான்; தேர்வு நடத்தி பாஸா, ஃபெயிலா என்று பார்ப்பது அல்ல; இது தெரியாமல் அமைச்சர் ஐந்தாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை பொதுத்தேர்வு என்கிறார். ஒரு வகுப்பில் மாணவர்களை நீங்கள் எதைக் கண்டு பயப்படுவீர்கள்?' என்று கேட்டபோது முப்பது பேரில் 29 பேர் பரீட்சை என்று தான் சொன்னார்கள்.

பத்து பன்னிரண்டாவது வகுப்புக்குப் பொதுத்தேர்வு நடத்துவதற்கே அரசுக்கு "உன்னைப் பிடி, என்னைப் பிடி" என்றாகி விடுகிறது. இந்த நிலையில் 60 லட்சம் மாணவர்களுக்குப் பொதுத் தேர்வு என்றால் ஆண்டு முழுவதும் அதுவே வேலையாக இருக்குமே தவிர, வேறு எதுவும் செய்ய முடியாது. ஆசிரியர்களை இன்னமும் தீவிரமாக கண்காணித்து மாணவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பதை விட்டு விட்டு பொதுத் தேர்வு நடத்தி ஃபெயிலாக்கினால் பள்ளியை விட்டு நிற்பவர்கள் எண்ணிக்கைதான் அதிகமாகும். கல்வியின் தரத்தை உயர்த்தாமல், பாஸா, ஃபெயிலா பார்ப்பது பிஞ்சு உள்ளங்களில் ஏமாற்றத்தைத்தான் உருவாக்கும்.'

(அரசின் திட்டத்துக்கு அனைத்து தரப்பிலும் எதிர்ப்புதான்! பயந்து போய் திட்டத்தை ஒத்தி வைத்துள்ள அரசு, வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவே வாய்தா வாங்கியிருப்பதாகச் சொல்கிறது. குப்புற விழுந்தாலும்...!)

- ஸ்ரீநிவாசன்

படங்கள்: சௌரா



பக்கம் 511 ரூ.45.00

வர்த்தமானன் பதிப்பகம் வழங்கும் கையடக்கப் பதிப்பு

சிலப்பதிகாரம் மணிமேகலை

மூலமும் தெளிவுரையும்

'இரட்டைக் காப்பியங்கள்' எனப் போற்றப்படும்
சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
ஒரு பக்கம் மூலம் - எதிர்ப்பக்கம் உரை என்னும் அமைப்பில்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இவ்விரு காப்பியங்களும் தமிழர் நாகரிகத்தின் சின்னமாகத் திகழ்கின்றன. தமிழில் தோன்றிய ஆதி காவியங்கள் என்னும் பெருமை இவ்விரு காப்பியங்களுக்கும் உண்டு.

சிலப்பதிகாரம் : தன்னுணர்ச்சிப் பாடல்களையே கொண்டு திகழ்ந்த சங்க இலக்கியப் போக்கை மாற்றிப் புரட்சி செய்தவர் இளங்கோவடிகள். தனிப்பாடல்களிலேயே தங்கியிருந்த தமிழ்த் தாயைக் காப்பிய மாளிகையில் குடியேறச் செய்த பெருமை இளங்கோவையே சாரும்.

கண்ணகி புகாரில் அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரம் விளைத்து, வஞ்சியில் வானவர் வாழ்வு பெறுகிறாள். கண்ணகி சாதாரணக் குடியில் பிறந்தவளே யாயினும் காப்பியத் தொடக்கம் முதல் முடிவுவரை தெய்வமாகவே அனைவராலும் போற்றப்படுகிறாள். சேரன் கல்லை அடுக்கிக் கண்ணகிக்கு அமைத்த கற்கோயில் இன்றில்லை. ஆனால் இளங்கோவடிகள் சொல்லை இழைத்து அமைத்த சுந்தரமாம் ஒரு காப்பியக் கோயிலில் கண்ணகியைக் கண்டு வழிபடலாம்.

மணிமேகலை : தந்தை கோவலன் கதையைச் சிலம்பு சித்திரிக்க, மகள் மணிமேகலையின் மாண்பை 'மணிமேகலை' கூறுகிறது. தன் வயிற்றில் பிறந்த மணிமேகலையை மாதவி, மாபெரும்பத்தினி (கண்ணகி)யின் மகள் என்று கூறி மகிழ்ச்சி அடைகிறாள். மணிமேகலை பருவப் பெண்ணாகச் சிலம்பில் விளங்குவதைத் தொடர்ந்து மணிமேகலைக் காப்பியம் கதையைக் கூறிச் செல்கிறது.

சாத்தனார் பசி எங்கெல்லாம் தோன்றுகிறதோ அங்கெல்லாம் சென்று அமுதசுரபியைக் கொண்டு அறப்பணி செய்யும் அறச் செல்வியாக மணிமேகலையைக் காட்டியுள்ளார். மணிமேகலை பசிக் கொடுமையைத் தொலைக்கிறாள்; சாதுவன் மதுவை ஒழிக்கிறான்; ஆபுத்திரன் சாதியைச் சாடுகிறான். இவ்வாறு காப்பியத்தில் பல மாந்தரை உலவ விட்டுத் தம் காப்பியத்தையே ஒரு புரட்சிக் காப்பியமாக அமைத்துள்ளார், சாத்தனார்.

நூல்களைப் பெறக் கடிதம் எழுதுக. இரு நூல்களையும் V.P.P. யில் அனுப்புகிறோம். நூல்கள் விலை, தபால் மற்றும் கட்டுச் செலவு சேர்த்து ரூ.**106** மட்டும் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடிதம் எழுத வேண்டிய முகவரி :

வர்த்தமானன் பதிப்பகம்
15, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை-17.
(உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்) ☎ : 435 0561.

நேரில் : ரூ.90 மட்டும் செலுத்தி நூல்களை உடனே பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை. இடைவேளையின்றி. ஞாயிறு வார விடுமுறை.



பக்கம் 437 ரூ.45.00

போர் வேணுமா? வேண்டாமா?

இந்தியா – பாக் இடையே எந்த நேரத்திலும் போர் வெடிக்கலாம் என்ற சூழ்நிலையில் இந்தியா எடுக்கப்போகும் முடிவு எப்படியிருக்க வேண்டும்? ப்ருத்வி ஏவுகணைகளைப் போல துல்லியமான கருத்துக்களால் பரஸ்பரம் விவாதத் தாக்குதல் தொடுக்கிறார்கள் இந்த வாரத்தின் கல்லூரி வைரங்களான, சென்னை குரோம்பேட்டை தாகூர் கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள். விவாதம் தொடங்கும் முன் வைரங்கள் குறித்து சின்ன அறிமுகம்!

எஸ்.விவேகானந்தன்: பி.எஸ்சி. கணினியியல் இரண்டாமாண்டு மாணவர். கணிப்பொறி தொடர்பாக தமிழில் எழுதி வரும் இவரது கட்டுரைகள் பல முன்னணி இதழ்களில் பிரசுரமாகியுள்ளன. தவிர மாணவ பத்திரிகையாளர்.

ஆர்.எம்.ஸ்ரீராம்: பி.எஸ்சி. கணினியியல் இரண்டாமாண்டு மாணவர். கல்லூரி கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர்.

ஜி.பி. தீபக்குமார்: பி.எஸ்.சி. கணினியியல் இறுதியாண்டு மாணவர். கல்லூரியின் சிறந்த என்டெர்டெயினர் என்று பாராட்டப்படுபவர். நடனம், நாடகம், பாட்டுப் போட்டிகளில் பரிசுகளை அள்ளி வந்திருக்கும் வளரும் கலைஞர்.

ஏ.ஷமீரா பேகம்: பி.எஸ்சி. நுண்ணுயிரியல் மாணவி. மாவட்ட, மாநில அளவிலான பேச்சுப் போட்டிகளில் பரிசுகளை வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருப்பவர்.



• அனிதா





• சந்தான லட்சுமி



• ஸ்ரீராம்

கே. துர்கா: நுண்ணுயிரியல் இரண்டாமாண்டு மாணவி. கல்லூரி அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் முன்னணியில் இருப்பவர்.

வி. சந்தானலட்சுமி: கணிவி யியல் இரண்டாமாண்டு மாணவி. கல்லூரியின் ஆஸ்தான கவிதா யினி.

ஏ. அனிதா: வணிகவியல் இரண்டாமாண்டு. கல்லூரி அளவில் படிப்பில் முன்னணி.

விவாதம் இனி....

அனிதா : தீவிரவாதம், பயங்கர வாதம் இதெல்லாம் நம்ம நாட்டுக்கு புதுசு இல்லே.... நம்மகிட்ட வலுவான உளவு அமைப்பு இருக்கு. இதைப் பயன்படுத்தி, நம்ம இந்திய இறையாண் மைக்குத்தீங்கு செய்ய நினைக்கிற தீவிர வாதிகளைப் பற்றி அவங்க சதித்திட்டங் களைப் பற்றி முன்னதாக தெரிஞ்சுகிட்டு அதை முறியடிக்க, நம்ம இராணுவத் தையும், போலீசையும் பயன்படுத்தணுமே தவிர, அவசரப்பட்டு போர்லே இறங்கி னால் நம்ம பொருளாதாரம் அவுட்!

• விவேக்





• ஷமீரா





• தீபக்



• துர்கா

விவேக் : இதை நான் துளிகூட ஏத்துக்க மாட்டேன். வாஜ்பாய் மாதிரி பெரிய தலை வர்களை இழந்துவிட்டால் அந்த இடத் தையும், இழப்பையும் நிரப்ப முடியாது. ஆனால் நம்ம பொருளாதாரத்தை மறுபடியும் மீட்க முடியும். பாராளுமன்றம் வரைக்கும் வந்து தாக்கினவங்க கூட இவ்வளவு நேரம் கொஞ்சிகிட்டு இருந்ததே பெரிய தப்பு!

ஷமீரா : விவேக் நீ ரொம்ப உணர்ச்சிக் கொந்தளிப்புலே பேசுறே! போரால் நசிந்து போய் முதுகெலும்பு உடைஞ்சு எழ முடி

கல்லூரி வைரம்

கல்கி-60

யாமல் நம்ம பக்கத்திலேயே இலங்கைன்னு ஒரு நாடு இருக்கு. அதை மறந்துட்டியா. சுதந்தரம் வாங்கி ஐம்பத்தி ஐந்து வருஷம் முடியப் போகுது. ஆனால் இன்னும் நம்மால வறுமையை ஒழிக்க முடியலே. அதுமாதிரி விளக்கெண்ணெய் பொருளாதாரம் நம்மது. ஏற்கெனவே கார்கில் தாக்குதல் செலவு அத்தனையும், மறைமுகவரியா, விலைவாசி உயர்வா யார் தலையிலே விடிஞ்சது? இதே ஏழை, கீழ்த்தட்டு மக்கள் தலையிலேதானே! போர்ச் செலவு என்பது, நாட்டோட நேரடி பொருளாதார வளர்ச்சியை நேரடியா பாதிக்கிற விஷயம்! இந்தியா கட்டாயம் நூறு முறை யோசிக்க வேண்டும்!

ஸ்ரீராம் : இதைவிட பெரிய பிரச்னைகளையெல்லாம் பலநாடுகள் பேச்சு வார்த்தை மூலமாக தீர்த்திருக்காங்க. பேச்சு வார்த்தைங்கிறது, இரண்டு தரப்பிலுமே ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். ஆனால் நீண்டகால அமைதியைக் கருத்தில் கொண்டு முஷாரஃபும் பேசுவது கிடையாது. பாகிஸ்தான் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு, உள்நாட்டுக் குழப்பம் இதெல்லாம் தன்னோட பதவி, அரசியல் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்ற உள்நோக்கத்தோடு பேச்சு வார்த்தையை ஒரு ஆயுதமா பயன்படுத்துறார் முஷாரஃப். அதேமாதிரி இந்தியா தரப்பில் முதல்லே எல்லைக் கட்டுப்பாடு கோடு பத்தி மட்டுமே பேசு! காஷ்மீர் பத்தி இப்போ மூச்சுவிடாதேன்னு ரொம்ப பிடிவாதமாக இருக்காங்க.. இரண்டு தரப்பிலுமே குறைந்த பட்ச நிபந்தனைகளோட பேசணும். எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை இராணுவத்தைக் கொண்டு ஒடுக்க வேண்டும்! போர் தொடுக்குற அளவுக்குப் பெரிய நெருக்கடியெல்லாம் இந்தியாவுக்கு இல்லே!

துர்கா : ஸ்ரீராம் சொல்றதுதான் கரெக்ட்! காஷ்மீர் மக்கள்கிட்டே வாக்கெடுப்பு மாதிரி பொது கருத்துக் கணிப்பு நடத்தணும்னு வருஷக் கணக்கிலே பேசிக்கிட்டே இருக்கோமே தவிர அதைச் செய்யற துணிச்சல், மத்தியிலே ஆட்சிக்கு வர்ற எந்த தேசியக் கட்சிக்கும் இல்லே. எல்லாருக்கும் வோட்டு மேல பயம்.


தீபக் : இப்போ இருக்கிற நிலையிலே

அதெல்லாம் காஷ்மீர்லே சாத்தியமே இல்லை! பாராளுமன்ற தாக்குதலுக்குப் பிறகு மத்திய அரசு இந்த விஷயத்திலே என்ன நடவடிக்கை எடுத்தாலும் காங்கிரஸ் அதை ஆதரிக்கும்னு சோனியா சொல்றாங்க. இதுவே 'வார் டிக்ளேர்' பண்ண நல்ல சிக்னல். இதை விட்டுட்டு, கருத்துக் கணிப்புன்னு இறங்கினா காங்கிரஸ் கூட அதை ஏத்துப்பாங்களாங்கிறது சந்தேகம். கருத்துக் கணிப்பு விஷயத்துல நம்ம அரசியல் கட்சிகள்கிட்டே ஒருமித்த கருத்து வர்றது குதிரைக்குக் கொம்பு முளைச்சமாதிரி.

ஷமீரா : இது உன்னோட சொந்தக் கருத்து தீபக்! எங்கே காஷ்மீர் மக்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவா சொல்லிடுவாங்களோங்கிற சந்தேகக் குணம். மாணவிங்கிறதுக்கு அப்பால் ஒரு இஸ்லாம் குடிமகளா சொல்றேன்; காஷ்மீர் மக்கள் அத்தனை பேரும் இந்தியர்கள். அவங்க ஒரு போதும் பாகிஸ்தான்கிற ஒரு அந்நிய மண்ணுல வாழச் சம்மதிக்க மாட்டாங்க. அங்கே கருத்துக் கணிப்பு நடத்தணும்னா, பதற்றமில்லாத அரசியல் சூழல் வரணும். அங்கேயிருக்கிற தீவிரவாதிகளை முதல்லே முழுசா விரட்டி அடிக்கணும். நம்ம இராணுவம் செய்ய வேண்டியது இப்போ இதுதான்!

அனிதா : இன்னொரு முக்கியமான விஷயம். கைது செய்யபடுற தீவிரவாதிகளுக்கு உடனே தண்டனை வழங்காமல், விசாரணைக் கைதிகளாகவே பத்து வருஷம், இருபது வருஷம்ன்னு கூலா சகல வசதிகளோட முதல் வகுப்பிலே வச்சிருக்காங்க. இந்த நிலைமை மாறணும். தீவிரவாதிகள் மீதான வழக்கை ஒரு வருஷ காலத்துக்குள்ள முடிக்கிற மாதிரி விசேஷ நீதிமன்றங்கள் வரணும்! அதுக்கு விடுமுறை விடக் கூடாது. இப்படிப் பண்ணினாலே தீவிரவாதத்தைப் பாதி ஒழிச்சுடலாம். போர் வெட்டிச் செலவு!

சந்தான லட்சுமி : நீ சொல்றது நல்ல பாயிண்ட்தான்! அதுக்காக இப்போ போர் வேண்டாம்னு சொல்றது முட்டாள்தனம். ஏற்கெனவே காலம் கடந்துருச்சு. பாகிஸ்தானை அடிச்சமா காலை ஒடிச்சமான்னு இருக்கணும். டுவின் டவருக்கு அமெரிக்கா கொடுத்த பதிலடியிலே ஒசாமாவும், ஓமரும் துண்டைக் காணோம்னு ஓடலியா... அடி உதவுறமாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டாங்க!



''நாட்டு வைத்தியர் மகளைக் காதலிச்சது தப்பாப் போச்சு..''
''ஏன்?''
''உன் சமையலறையில் நான் சுக்கா திப்பிலியா?''ன்னு கவிதை எழுதி அனுப்பியிருக்கிறா!''
— பாளை பசும்பொன்

விவேக் : நெத்தியடியாச் சொன்னே! அமெரிக்காவோட நிர்ப்பந்தத்திற்குப் பணிஞ்சு, தாலிபானை முஷாரஃப் கைவிட்டார். இப்போ காஷ்மீர் தீவிரவாதிகளையும் கைவிட வேண்டிய கட்டாயத்துக்கு முஷாரஃப் வந்தாச்சு.. அடிக்கிறதுக்கு இதுதான் சரியான நேரம்.. பொருளாதாரம் அது இதுன்னு புலம்பிக்கிட்டு இருக்க இது நேரமில்லே!

துர்கா : ரொம்ப விவேகமாகப் பேசுறதா நினைச்சுகாதே விவேக்! போர் நடத்தித்தான் ஆகணும்னு நினைச்சா முதல்லே அரசியல்வாதி பாக்கெட்ல கோடி கோடியா இருக்கிற பணத்தை எடுத்து செலவு பண்ணுங்க. அதே மாதிரி நாட்டுக்கோ மக்களுக்கோ பயன்படாமல் இணைத்துலே போட்ட கல்மாதிரி அறநிறுவனங்கள், ஆலயங்கள், தேவாலயங்கள்கிட்டே குவிஞ்சுகிடக்கிற சொத்துலேர்ந்து ஒரு பத்து சதவீதம் பிடுங்கினா பல போர் நடத்தலாம். அது முடியுமா நம்ம அரசாங்கத்தாலே?

ஷமிரா : ஐய்யோ! நீயே தீவிரவாதி மாதிரி பேசுறே, போதும் கலந்துரையாடலெல்லாம்!

தொகுப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் : ராஜன்





ஸ்டோனி ப்ளேயரு?!

நாலு மணி நேர விஸிட் தான் என்றாலும், நாயுடு தூள் கிளப்பிவிட்டார் என்று ஆந்திராவே பெருமைப்பட்டுக் கொள்ளுகிறது. பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர், அவரது மனைவி செர்ரி இருவரையும் வரவேற்று வழி நெடுக பிரிட்டிஷ் மற்றும் இந்தியக் கொடி கட்டிய தோரணங்கள், கம்பங்களில் ஒரு பக்கம் பிளேர், இன்னொரு பாதியில் நாயுடு சிரிக்கும் போஸ்டர்கள் என்று ஆந்திரா கலக்கலாக இருந்தது.

விஸிட்டின் ஹைலைட்டே மெகபூப் நகர் மாவட்டத்தில் உள்ள 'வட்டம்' என்ற கிராமத்துக்கு விஜயம் செய்ததுதான். அங்கே உள்ள ஒரு பள்ளி பிரிட்டிஷ் அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படுகிறது. அங்கே பள்ளிக் குழந்தைகளுடன் சிறிது நேரத்தைச் செலவிட்டார்கள் பிளேர் தம்பதிகள். குழந்தைகள் மற்றும் ஊர்ப் பெரிசுகள் தெலுங்கில் சொன்னதை, பிளேருக்கு ஆங்கிலத்தில் தாமே மொழி பெயர்த்துச் சொன்னார் நாயுடு.

'நீங்கள் எல்லாம் பெரியவர்களானால் என்னவாக ஆசைப்படுகிறீர்கள்?'' என்று ப்ளேர் கேட்க, சரிதா, மம்தா என்ற இரண்டு சிறுமிகளும் 'டீச்சராக வர வேண்டும்' என்றார்கள். சிவகுமார் என்ற பையன் 'டாக்டராக வேண்டும். மக்களுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும்' என்றதும் பிளேர் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தார்.

'டோனி பிளேர் யார் தெரியுமா?' என்று நாயுடு ஒரு சிறுமியிடம் கேட்க, 'இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறார்' என்று மட்டும் தெரியும்' என்றாள் அந்தச் சிறுமி. ''இவர் பிரிட்டிஷ் பிரதமர்'' என்று விளக்கினார் நாயுடு.

வயதான பெண்மணி ஒருவரிடம் யார் இவர்? என்று கேட்டபோது, 'ஸ்டோனி பிளேயரு'' என்றார். சுற்றி இருந்தவர்கள் சிரித்து விட்டனர்.

செக்யூரிட்டி ஏற்பாடுகள் பலமாக இருந்தும், பள்ளிக் குழந்தைகளுடனும், கிராமத்து மக்களிடமும் சகஜமாய் கலந்து பேச, எந்தவித குறுக்கீடும் இல்லை.


கிராமப் பெண்கள் குழு ஒன்று தாங்கள் தயாரித்த பலவிதமான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தார்கள். ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கொண்டே வந்த செர்ரி பிளேருக்கு, அங்கே இருந்த லம்பாடி உடையைப் பார்த்தவுடன் சட்டென்று ஆர்வம். அந்த உடையைக் கையில் எடுத்துப் பார்த்தார். அருகில் இருந்த பெண்மணி, ''ஆல் மிரர் ஒர்க்'' என்றவுடன், 'வெரி நைஸ்' என்றார்.

''இது என்ன விலை?'' என்று செர்ரி பிளேர் கேட்க, ''பதிஹேனு வன்டலு'' (ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்) என்றார் அந்தப் பெண்மணி.

அப்புறம் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை செர்ரி பிளேர், ''லம்பாடி உடையின் பாவாடை பகுதியைத் தவிர்த்து, 'சோளி'யை மட்டும் வாங்கிக் கொள்ளுவதாகக் கூறினார். அதன் விலை எண்ணூறு ரூபாய் என்றவுடன், இருபது பவுண்டு நோட்டை எடுத்துக் கொடுத்தார். (அதன் மதிப்பு சுமார் ரூ.950)

பேரம் பேசாமல், கேட்ட பணம் கிடைத்து விட்டதில் விற்பனைப் பெண் மணிகளுக்கு ஏக சந்தோஷம்!

- பாரதி



2002 ஜனவரி 20
விஷு தை 7
மலர் : 60
இதழ் : 25

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



புலிகளுக்குப் புகலிடமா?

நார்வே நாட்டின் முயற்சியால் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்திருப்பது மிக நல்ல விஷயம்தான். ஆனால், அந்த பேச்சுவார்த்தைக்கு உதவ லண்டனிலிருந்து வருகிற ஆன்டன் பாலசிங்கம், சென்னையில் தங்கிச் செயல்பட அனுமதி கேட்டிருப்பது அதிர்ச்சியூட்டுகிறது.

நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைக்கும் இந்தியாவுக்கும் எவ்வித நேரடித் தொடர்பும் இல்லை. விடுதலைப் புலிகளோ இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பு. ராஜீவ்காந்தி கொலை வழக்கின் பிரதம குற்றவாளியென்று குற்றம் சாட்டப்பெற்ற புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்குத் தருவித்து நீதி விசாரணை நடத்த இலங்கை அரசிடம் நாம் விண்ணப்பித்துள்ளோம்.

நிலைமை இவ்வாறிருக்க, பாலசிங்கம் சென்னையை முகாமாகக் கொள்ள முடிவெடுத்தது எந்தத் தைரியத்தில்...? சில தமிழக அரசியல்வாதிகள் புலிகள் அமைப்புக்குக் காட்டிவரும் அனுதாபமே இப்படியொரு விண்ணப்பத்தை முன் வைக்க அவருக்குத் துணிவு தந்திருக்கிறது.

இந்தச் செய்தி வெளியான பிறகு, த.மா.கா, சுப்ரமணியம் சுவாமி ஆகிய இரு தரப்பினர்




மட்டுமே வன்மையாக அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். 'மத்திய அரசு எடுக்கும் முடிவே இறுதியானது' என்று இதர கட்சியினர் கூறிவர, கி. வீரமணியும், தமிழர் விடுதலை அமைப்புகளும் பாலசிங்கத்தின் கோரிக்கையை பகிரங்கமாகவே ஆதரிக்கின்றனர்.

பாலசிங்கத்தைச் சென்னையில் அனுமதிப்பது பாம்புக்குப் பால் வார்க்கும் செயலாகத்தான் முடியும். புலிகள் அமைப்பைச் சேர்ந்த வேறு சிலர், அவரது அங்கீகரிக்கப்பட்ட உதவியாளர்களாக, அல்லது தூதர்களாக வந்து சேருவார்கள். அனுமதியோ, அங்கீகாரமோ இல்லாமல் வேறு பலர், நவீன ஆயுதங்களுடன் சென்னையையும் தமிழகத்தின் இதர பகுதிகளையும் ஊடுருவி கைவரிசையைக் காட்ட ஆரம்பிப்பார்கள்.

வேறு பயங்கரவாத அமைப்புகள் நம் நாட்டின் வடக்கு எல்லையைக் கடந்து உள்ளே ஊடுருவி ஏற்கெனவே நாசம் விளைவித்து வருகின்றன. கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்தை நாம் இலேசில் மறந்துவிட முடியாது. போதாகுறைக்கு விடுதலைப்புலிகளையும் நாம் அனுமதித்தால், தென்னகம் - குறிப்பாக தமிழ்நாடு - பல நெருக்கடிகளையும் தொல்லைகளையும் சந்திக்கும். அமைதியான சகஜ வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படும்.

மத்திய அரசு, இந்தோ - பாக் எல்லை பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் பிரச்னையில் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்க, மாநில (தமிழக) அரசு சரியான தலைமை இன்றி, செயலற்ற அரசாகவே விளங்கி வருகிறது. இந்தச் சூழலில் புலிகள் ஊடுருவல் நிகழ்வது மிகச் சுலபம். எனவே அதனை அனுமதிக்கக்கூடிய சிறு சந்தர்ப்பம்கூட உருவாகிவிடக் கூடாது.

தமிழகத்தின் எல்லா கட்சிகளுமே இந்நேரம் பாலசிங்கத்தின் கோரிக்கைக்கு எதிராக ஒருமித்துக் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் தவறிவிட்டன. தமிழக அரசும் அவரது கோரிக்கையை உடனே வன்மையாக எதிர்த்திருக்க வேண்டும். 'பாலசிங்கத்தின்



கோரிக்கையை ஏற்க வேண்டாம்' என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப் போவதாக இரண்டு நாள் யோசனைக்குப் பிறகே அறிவித்துள்ளார் தமிழக முதல்வர்.

இவ்விஷயத்தில் தமிழக அரசியல் கட்சிகள் பல, பேச்சுக்கும் விவாதத்துக்கும் இடம் கொடுத்ததன் மூலம் புலிகள் பக்கம் பலம் சற்று கூடியிருக்கிறது.

அரசியல் நிர்ப்பந்தங்களினால் பாதிக்கப்படாமல் தேச நலனை மட்டும் மனத்தில் கொண்டு தமிழக கட்சிகளும் மத்திய அரசும் சிந்திக்க வேண்டும்; செயல்பட வேண்டும்.

விடுதலைப் போராட்டமாக ஆரம்பித்து பயங்கரவாதமாக மாறிய முன்னணி இயக்கம் விடுதலைப்புலிகள் அமைப்பு. உலகின் வேறு பல பயங்கரவாத இயக்கங்களுக்கு அது தவறான முன்னுதாரணம்.

அவ்வமைப்பை எவ்வகையிலும் ஆதரிப்பதோ நம் நாட்டுக்குள் அனுமதிப்பதோ அறிவீனம்.

பாகிஸ்தானின் ராணுவ ஆட்சி பயங்கரவாதத்தை ஆதரிப்பதை நாம் வன்மையாகக் கண்டனம் செய்து வருகிறோம். பாலசிங்கத்தை அனுமதித்தால் நாமும் அதே தவறைச் செய்தவர்களாகி விடுவோம்.

சற்றுத் தாமதமாக அறிவித்தாலும் தமிழக அரசின் கோரிக்கை அர்த்தமுள்ளது. மத்திய அரசு அதனை உடனடியாக ஏற்று, மௌனத்தைக் கலைத்து, விடுதலைப் புலிகளுக்கு இங்கு புகலிடம் இல்லை என்று உறுதியாகவும் பகிரங்கமாகவும் அறிவிக்கட்டும். பட்டும் படாமலும் பேசுவதில் அர்த்தம் இல்லை. பாகிஸ்தானின் இரட்டை வேடத்தை எதிர்த்து எவ்வளவு உறுதியாக அத்வானி குரல் கொடுக்கிறாரோ அதே உறுதியை விடுதலைப்புலிகள் விஷயத்திலும் புலிகளைத் தமிழகத்தில் ஆதரிக்கும் அமைப்புகள் விஷயத்திலும் அவர் காண்பிக்க வேண்டும். ○





ஜிப்பா போட்ட ரமணர்!

இளையராஜா எழுதிய 'பால்நிலா பாதை, 'துளிக் கடல்' நூல்கள் வெளியீட்டு விழாவில்...

"வயலின் இசையை வயலின் வாசிப்பவர்களுக்குக் கற்றுத் தந்தவர்" என்று முன்பொரு முறை இளையராஜாவைப் பாராட்டிய கவிஞர் வாலிதான் இந்த மேடையில் "இளைய ராஜாவை என்னால புரிஞ்சுக்க முடியலே" என்றார். ஏனாம்? மதுரையில் பெண்களைப் பற்றியெல்லாம் எப்படி எப்படியோ கமெண்ட் அடித்த தன்னோடு, ஒரு காலத்தில் சேர்ந்து மது அருந்திய இளையராஜா இப்போது இப்படி ஒரு ஞானியானதைத்தான் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று குறிப்பிட்டார்!

இளையராஜாவை "ஜிப்பா போட்ட ரமணர்" என்று வாலி கூற, வலம்புரி ஜானும் "தெய்வ வடிவும் தரும்" என்ற அபிராமி அந்தாதியில் வந்தது போல் இப்படி நடந்திருக்கலாம் என்றார். பாவம் (அல்லது நல்லவேளை) கமல ஹாசனால் இப்படியெல்லாம் பேசமுடியாத நிலை.

கமல், இலக்கணமாகப் பேசியதில் வியப்பில்லை. இயல்பான குரலிலும் பேசினார்! "நான் என் பேச்சைத் தயார் செய்யவில்லை. நிஜம்பேச எதற்கு ஒத்திகை?" என்றார். (அப்படியானால் பிறர்?) விழாவுக்கென்றில்லை முன்பே பலமுறை இளையராஜாவைப் பெரிதும் வியந்து பாராட்டியவர்தான் கமல். 'இளையராஜாதான் உலகின் தலைசிறந்த இசையமைப்பாளர் என்று கூறியதை மாற்றிக் கொள்கிறேன். நூற்றாண்டுக்கு ஒருவர் இளையராஜா போல் தோன்றத்தான் செய்கிறார்கள்" என்றார்!

பாலுமகேந்திரா இயக்கிய அத்தனை படங்களுக்கும் இளையராஜாதான் இசையமைப்பாளர் என்பது சிலருக்குப் புதுத் தகவலாக இருக்கலாம். இளையராஜாவின் பின்னணி இசையை ஒரு நதியோடு ஒப்பிட்ட போது உண்டாகாத வியப்பு "அருவி, அமைதியான நீரோட்டம் என்று பலவிதமாகச் சென்றாலும் அதைத் தீர்மானிப்பது நதியல்ல. பூமிதான்" என்றபோது ஏற்பட்டது. தேடல், எதையாவது நிரூபிக்க வேண்டுமென்ற வெறி இவற்றைக் கொண்டவராக இளையராஜாவை வர்ணித்தார் பாலுமகேந்திரா.

கறுப்பாக்கப்பட்ட தலை, கறுப்பு சட்டை பேண்ட் என்று காட்சி தந்த பாரதிராஜா 'தாடியும், வெள்ளையுமா இருக்கிற இவங்க என்னைவிட சின்னவங்க' என்று வியந்தார். அந்தச் சின்னவர்கள் இளையராஜாவும் கங்கை அமரனும். (விழா முழுதும் கங்கை பேசவில்லை. மௌனவிரதமோ?)

மிகப் பெரிய பென்சில் வடிவத்தில் செதுக்கப்பட்ட மரக்கிளை ஒன்றை இளையராஜாவுக்கு வழங்கினார் 'வித்தியாச பார்த்திபன்.' ("டமடமன்னு எதையோ பேசி கைதட்டலை அள்ளிக்கிட்டான்" என்று பின்னால் பாரதிராஜா குறிப்பிட்டார்.)

"எழுதிய எழுத்தில் பிழை வரலாம். எழுதா எழுத்தில் ஏது பிழை?" என்றும் "தன்னை அறியாது இறத்தல் தற்கொலை" என்றும் இளையராஜா எழுதியதைக் குறிப்பிட்டார். "இங்கே ஆளாளுக்கு அவரை உச்சத்துக்குத் தூக்கி நிறுத்தும்போது, அவர் எந்த அளவுக்குக் கூனிக் குறுகிப் போயிருப்பார் என்பது அவர் உட்கார்ந்திருக்கும் நாற்காலிக்குத் தான் தெரியும்" பார்த்திபன் கூறியபோது இளையராஜா "ஆமாம் ஆமாம்" என்பதுபோல் பலமாகத் தலையசைத்தார். இப்படி ஒரு விழாவில் இளையராஜாவின் படைப்புகளும், சாதனைகளும் அதை மறக்கடித்தன. முக்கியமாக ஏற்புரையில் அவர் கடவுளுக்கு மட்டுமே (நான் எழுதிய நீண்ட பாடலால்) நன்றி தெரிவித்த விதம் அற்புதம். "எல்லாப் புகழும் இறைவனுக்கே." என்பதுதான் அதன் சுருக்கம்.

- ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : யோகா

சிறப்புத் தள்ளுபடி 10%

BAPASI

பிரம்மாண்டமான

25–வது சென்னை

புத்தகக் கண்காட்சி

ஜனவரி – 5ம் தேதி முதல் 19 வரை

இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி, சென்னை – 2

நேரம் :

வேலை நாட்களில் – மாலை 2.30 முதல் இரவு 8.30 வரை
7, 8, 9, 10, 11, 17, 18 தேதிகளில்

விடுமுறை நாட்களில் – காலை 11.30 முதல் இரவு 8.30 வரை
6, 12, 13, 14, 15, 16, 19 தேதிகளில்

நுழைவுக் கட்டணம் ரூ. 2.00 மட்டும்

தினமும் மாலை 6.00 முதல் 7.30 வரை – சிறப்புப் பேச்சாளர்கள்


தேதி	தலைப்பு	பேச்சாளர்
6.1.2002	பாதை மாறி - படிக்கும் பறவைகள்	ராதாகிருஷ்ணன் IPS
7.1.2002	தமிழர் சரித்திரம்	வலம்புரி ஜான்
8.1.2002	தமிழில் கிரேஸி கிண்டல்கள்	கிரேஸி மோகன்
9.1.2002	அரசியல், இலக்கிய, சினிமா - பார்வை	ஜெயகாந்தன்
10.1.2002	காலம் நமக்குத் தோழன்	லேனா தமிழ்வாணன்
11.1.2002	சிரிப்பேன், சிந்தித்து சிரிப்பேன்	தென்கச்சி சுவாமிநாதன்
12.1.2002	தமிழ் சினிமாவில் தமிழ்	நடிகர் சிவகுமார்
13.1.2002	எங்கேயோ கேட்ட ஒலி, ஒளி - அலைகள்	பால.இரமணி
14.1.2002	'வல்லவர்' குரலுக்கு மதிப்பு இருக்கும்	இறையன்பு IAS
15.1.2002	அன்பிற் சிறந்த தவமில்லை	தமிழருவி மணியன்
16.1.2002	முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்	சுதாங்கன்
17.1.2002	'அம்மி குத்த சிற்பி எதற்கு'	அப்துல் ரகுமான்
18.1.2002	'இள'மை இதோ ! இதோ !	இளம்பிறை மணிமாறன்
19.1.2002	'கள'வழி நாற்பது	கா. காளிமுத்து (சபாநாயகர்)

Programmes Sponsored by Eagle Diaries, Chennai

அறுசுவை அரசின் சிற்றுண்டி உண்டு

THE BOOK SELLERS' AND PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA, CHENNAI - 600 006.

TAMILNADU BOOK HOUSE, Chennai-5



மாங்கொட்டை மகாத்மியம்!

கொஞ்சம் புத்திமட்டாய் இருக்கிற பேர்வழிகளை 'மழுங்குணி மாங்கொட்டை' என்பார்கள். ஆனால் மாங்கொட்டையின் உணவு, மருத்துவப் பயன்களைத் தெரிந்தவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

தென் மாவட்டங்களில் மாங்கொட்டையை உடைத்து அதன் பருப்பை வேகவைத்துத் தின்பது உண்டு. துவர்ப்பும் இனிப்பும் கலந்த ஆரோக்கியமான உணவு அது. மாங்கொட்டைப் பருப்பில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நச்சுப் பொருள் எதுவுமே இல்லை. கால்நடைத் தீவனத்தில் ஐந்தில் ஒரு பங்கு மாங்கொட்டைப் பருப்பைச் சேர்க்கலாம் என்கிறார்கள். கோழித் தீவனத்திலும் கால் பங்கு சேர்க்கலாம்.

கால்சியமும், புரொட்டீனும் கொழுப்புச் சத்தும் இதில் கூடுதலாய் உள்ளன.

மாங்கொட்டைக் கொழுப்புச் சத்து சூரிய காந்தி எண்ணெய்க்குச் சமமாக உள்ளது. இந்தக் கொழுப்பு இதய நோய் உண்டாக்குவதில்லை என்கிறார்கள்.

இந்தியாவின் பழவகை உற்பத்திப் பகுதிகளில் அறுபது சதவிகிதம் மாம்பழத்துக்கே போகிறது. ஆண்டு தோறும் இருபது லட்சம் டன் மாங்கொட்டை கிடைக்கும் என்றும், பத்தாயிரம் டன் அளவு மட்டுமே சேகரிக்கப்படுகிறது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். பருப்பை, உணவு, தீவன வகைகளுக்கும், கொட்டையின் வெளிப்புற ஓட்டுப் பகுதியை நல்ல எரிபொருளாகவும் திட்டமிட்டால், பயன்படுத்தலாம்.

ஊட்டச் சத்துக்குத் தேவையான அமினோ அமிலங்களில் பெரும்பகுதி மாங்கொட்டையில் உள்ளன.


மாங்கொட்டையை வெய்யிலில் உலர்த்திப் பருப்பைப் பிரித்தெடுக்கிறார்கள். பருப்பின் தோல் துவர்ப்புச் சுவையுடையது. அதைக் களைந்து மாவாக்குகிறார்கள். இந்த மாவை மைதா, கடலை மாவு, கோதுமை மாவுடன் கலந்து பரோட்டா, ரொட்டி போன்ற உணவுப் பொருள்களில் பயன்படுத்தலாம். மொத்தக் கலவையில் இருபது - முப்பது சதவிகிதம் மாங்கொட்டை மாவு சேர்க்கலாம். நல்ல மணமாகவும் சுவையோடும் உணவுப் பொருள்கள் இருக்கும்.

கொக்கோக் கொழுப்பைவிட மாங்கொட்டைப் பருப்பிலிருந்து கிடைக்கும் கொழுப்பு உயர்த்தரமானது. தின்பண்டத் தயாரிப்புக்கு ஏற்றது. மாங்கொட்டைப் பருப்பிலிருந்து முப்பதாயிரம் டன் அளவு எண்ணெய் எடுக்க முடியும் என்று சில ஆண்டுகளுக்கு முன்னால் மதிப்பிட்டார்கள்.

ஹைதராபாத்திலுள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் மாங்கொட்டைக் கொழுப்பைப் பற்றி ஆராய்ந்து, அது மிகவும் பாதுகாப்பானது மட்டுமின்றி மிட்டாய்த் தொழிலுக்குக் கொக்கோவைவிட மிகவும் நல்லது என்று சான்றளித்தது.

இப்போதெல்லாம் பெரும்பாலானவர்கள் மாங்கொட்டையைக் கடைசிவரை சப்பிப் போட்டு விடுகிறோம். முறையாகவும் சுத்தமாகவும் (எச்சில்படுத்திச் சப்பிப்போடாமல்) மாங்கொட்டைகளைச் சேகரிக்க ஊக்கமளித்தால், மாங்கொட்டைப் பருப்பு மாவு, நல்ல உணவுப் பொருளாகப் பயன் தரக்கூடும்.

யாராவது இதில் ஆர்வம் காட்டி, ஒரு நல்ல தொழிலைத் தொடங்கலாமே. தமிழ் நாட்டில் கிடைக்காத மாங்கொட்டைகளா?




- சுப்ர. பாலன்

தமிழக பா.ஜ.கவுக்கு மேலிடம் போட்ட தடை!

காதில் விழுந்தவை:

● அ.தி.மு.க.வை நோக்கி ஆர்வத்துடன் விரைந்த ஒரு பகுதி தமிழக பா.ஜ.க.வுக்கு, மேலிடம் தடைக்கற்களைப் போட்டு விட்டது. "நாடு மிக சிக்கலானச் சூழ்நிலையைக் கடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் அ.தி.மு.க போன்ற மண் குதிரைகளை நம்பி, அரசியல் நடத்த முடியாது. தத்துவார்த்த ரீதியாக சில அம்சங்களில் தி.மு.க மாறுபட்ட கருத்து கொண்டிருந்தாலும், அரசியல் நெருக்கடி என்று வரும்போது தி.மு.கவைத் தைரியமாக நம்ப முடியும்" என்று பா.ஜ.க மேலிடம் தெளிவாகச் சொல்லி விட்டதாம். உ.பி தேர்தலுக்குப் பிறகே அணி மாற்றங்களைப் பற்றி பரிசீலிக்க முடியும் என்றும் சொல்லப்பட்டு விட்டதாம்... இதற்கிடையில் தி.மு.க சார்பாகச் சொல்லப்பட்ட சில காரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக சசிகலா மற்றும் தினகரன் மீதான அமுலாக்கப் பிரிவு வழக்குகள் நீதிமன்றங்களில் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிற நிலை மாறும் வண்ணம், அவற்றை விரைவு படுத்தும் வகையில் பட்டி ஜெகந்நாதன் என்ற வழக்கறிஞர் அமுலாக்கப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முரசொலி மாறனால் பரிந்துரை செய்யப்பட்டவராம்! அதேபோல், சி.பி.ஐ, ஜெ. மீது போட்டுள்ள மூன்று லட்சம் அமெரிக்க டாலர் வழக்கிலும் மத்திய அரசுக்காக பட்டி ஜெகந்நாதனே ஆஜராக இருக்கிறாராம்!



• பாலகங்கா



• சைதை துரைசாமி



• கராத்தே

● சென்னை மாவட்ட அ.தி.மு.கவில் கோஷ்டி மனப்பான்மையும், அதிகாரப் போட்டியும் தலை விரித்து ஆடுகின்றன. வடசென்னை மாவட்டச் செயலாளர் சேகர் பாபுவுக்குத் தெரியாமல் அமைச்சர் ஜெயக்குமார் ஆதரவாளர்கள் கூட்டம் போடுகிறார்கள். மேயர் தேர்தலில் போட்டியிட்ட பாலகங்கா தோற்றாலும் குடிசை மாற்று வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் மத்திய சென்னை செயலாளராக இருந்தும், மத்திய சென்னையில் குடியிருக்கும் சேகர்பாபு உள்ளே புகுந்து குழப்பங்கள் உண்டாக்குகிறாராம். அதேபோல் தென் சென்னையில் மாவட்டச் செயலாளராக உள்ள சைதை துரைசாமி எல்லோரையும் அணைத்துக் கொண்டு போக முயன்றாலும் பழைய மாவட்டச் செயலாளர்கள் கூட்டணி அமைத்து சவால் விடுகிறார்களாம். கராத்தே தியாகராஜன் தனி ஆவர்த்தனம் வாசிக்கிறார். ஆனால் 'அம்மாவின் கடைக்கண் பார்வை அனைவரையும் ஒன்றாக்கி விடும்' என்கிறார்கள்!

- சஞ்சயன்



கரும்பிலிருந்து சர்க்கரை மட்டும் தான் நமக்குக் கிடைக்கிறது என்று எண்ண வேண்டாம். மதுபானம், நியூஸ் பிரின்ட் எல்லாம்கூடக் கரும்பிலிருந்து கிடைக்கும் மற்ற பொருட்கள். இன்னொரு முக்கியமான பொருள், எத்தனால்.

இந்த எத்தனாலை வைத்து கார் ஓட்டலாம் என்று நிகலஸ் ஓட்டோ என்ற எஞ்சினீயர் 15 வருடங்களுக்கு முன்பு கண்டு பிடித்தார். ஆனால் பிரேஸில் நாட்டில் 1920லேயே இதைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். என்றாலும் 1970க்குப் பிறகுதான் எத்தனால் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தது. 1988ல் பிரேஸில் நாட்டின் சுமார் ஒன்றரைக் கோடி கார்களுக்கு மேல், 13 பிலியன் லிட்டர் எத்தனால் உபயோகித்து ஓட்டியிருக்கிறார்கள். இதில் 42 சதவிகிதம் பெட்ரோலுடன் எத்தனால் கலந்து ஓட்டியவை. மீதி 58 சதவிகிதம் கார்கள், இந்த எத்தனாலின் உடன்பிறப்பான ஆல்கஹாலைப் போட்டு ஓட்டப்பட்டன! (கார்கள் ஒழுங்காகப் போயிற்றா, இல்லை தள்ளாடித் தள்ளாடி ஓடினவா என்ற விவரம் மிஸ்ஸிங்!)

பெட்ரோலுடன் 5 சதவிகித எத்தனால் கலந்து கார் ஓட்டினால், இஞ்சினில் எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லை. 10 சதவிகிதத்துக்கும் மேல் கலந்தால் சிறிய மாற்றம் தேவைப்படும். ஸ்டார்ட் பண்ண மட்டும் கொஞ்சமே கொஞ்சம் பெட்ரோல் வைத்துக் கொண்டு காரையே முழுக்க எத்தனால் போட்டு ஓட்டியிருக்கிறார்கள் பிரேஸிலில். கார்புரேட்டர், மற்றும் சில பகுதிகளில் மாறுதல்களைக் கொண்டு வந்த பிறகே இது சாத்தியமாயிற்று. ஸ்டார்ட் செய்யத் தேவையான கொஞ்சம் பெட்ரோலுக்கு தனியே ஒரு குட்டி டாஸ்க்.

பிரேஸில் நாட்டில் கரும்பு விளைச்சல் அதிகம். எனவே ஒவ்வோர் ஆண்டும் 14 பிலியன் லிட்டர் எத்தனால் தயாரித்திருக்கிறார்கள். இது ஒரு நாளைக்கு சுமார் 2 லட்சம் பீப்பாய் பெட்ரோலுக்கு ஈடானது. எண்பதுகளில் ஒரு லிட்டர் எத்தனால் 32 ரூபாய் இருந்தது. இப்போது 13 ரூபாயாக குறைந்துவிட்டது. அது மட்டுமல்ல. பிரேஸிலில் தனி பெட்ரோல் விற்கப்படுவதில்லை. 20 - 24 சதவிகித எத்தனால் கலந்த பெட்ரோல்தான் விற்கப்படுகிறது. தனி ஆல்கஹால் போட்டு ஓடும் கார்களும் இருப்பதால், இரண்டு வகை விற்பனை நிலையங்களுமாகச் சேர்த்து 26,000 வரை இருக்கின்றன!

'அதெல்லாம் பிரேஸில் நாட்டில். இந்தியாவுக்கு என்ன லாபம்?' - கேட்கலாம்.

பிரேஸில் போலவே நம் நாட்டிலும் ஏராளமான அளவுக்குக் கரும்பு பயிராகிறது. பிரேஸில் 14 பிலியன் லிட்டர் எத்தனால் தயாரித்தால், நாம் 1.3 பிலியன் லிட்டர் எத்தனாலை, (மெலாஸஸ் எனப்படும் கரும்புக் கழிவிலிருந்து) தயாரிக்கிறோம். இதை இன்னும் அதிகரிக்க முடியும். பிரேஸில் அளவை எட்ட வாய்ப்பும் இருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற மதுபானத் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தியோ, புதிதாகச் சில தொழிற்சாலைகளைத் தொடங்கியோ இதைச் செய்ய முடியும். இத்தனை லிட்டர் எத்தனால் எடுத்துக் கொள்ளுகிறோம் என்று அரசு உறுதியளிக்க வேண்டும். பெட்ரோலை விட எத்தனாலைக் குறைந்த விலைக்கு



கார் ஓட்ட உதவும்!

விற்கும்போது, விவகாரம் ஆகிவிடாமல் இருக்க, இரண்டையும் கிட்டத் தட்ட ஒரே விலைக்கு விற்க வேண்டும்.

பிரேஸில் 22 சதவிகித எத்தனால் கலக்கலாம் என்று இப்போது முடிவு எடுத்திருக்கிறது. அதுபோல நாமும் ஓர் அளவை நிர்ண யித்துக் கொள்ளலாம்.

அமெரிக்காவில் 6.6 பிலியன் லிட்டர் எத்தனால் தயாரித்தாலும், 5 பிலியன் லிட்டர்தான் பெட்ரோலுடன் கலக்கப்படுகிறது. பெட்ரோல் உபயோகத்தைக் குறைப்ப தோடு, சுற்றுச்சூழல் பாது காப்புக்கும் இது உதவுகிறது என்பதே அமெரிக்கா பார்க்கும் கோணம்.

'அப்போ என்ன, நாமும் ஆரம்பிக்க வேண்டியதுதானே?' என்று கேட்கலாம். மகாராஷ்டிரா வில் மிராஜ் மற்றும் மன்மாட் நகரங்களிலும், உத்தரபிரதேசத்தில் பெரய்லியிலும் இந்த வருடம் ஏப்ரலில் பரிசோதனை அடிப் படையில் நாமும் இதே மாதிரி திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். இதன் முடிவுகள் சாதகமாக இருக்கும் பட்சத்தில், நாமும் கரும்பு ஆலைக்காரர்களிடம் 400 மிலியன் லிட்டர் ஆல்கஹாலை ஒவ்வொரு வருடமும் தரச் சொல்லலாம். இது



பிரேஸில் போலவே பெட்ரோலுடன் 5 சதவிகித எத்தனால் கலக்கப் போதுமானதாக இருக்கும். இதற்குப் பெட்ரோலியத் துறையும் சர்க்கரை ஆலைத் துறையும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். என்ன விலைக்கு எத்தனால் தருவார்கள் என்பது மிக முக்கிய அம்சம். இரண்டாவதாக, இந்திய தரக் கட்டுப்பாட்டு நிர்ணய அமைப்பு, பத்து சதவிகிதம் வரை எத்தனால் கலக்கலாம் என்று விதிகளை மாற்றியமைக்க வேண்டும்.

மத்திய அரசு இது விஷயம் குறித்துத் தீவிரமாக விவாதிக்க அமைச்சரவைக் குழு நியமித்திருக்கிறது. பிரேஸிலுடன் தொழில் நுட்பப் பகிர்வுக்கும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளவிருக்கிறது.

மூன்றாவதாக, டீசலுடன் எத்தனாலைக் கலந்து உபயோகிக்க முடியுமா என்றும் ஆராய வேண்டும். ஏனென்றால் பெட்ரோல் உபயோகத்தைப் போல ஏழு மடங்கு டீசலை நாம் உபயோகிக்கிறோம்.

பெட்ரோலியத் துறை எத்தனாலை பெட்ரோலுடன் கலந்து பயன்படுத்த முடிவு செய்துவிட்டது. இதனால் பெட்ரோலியத் துறைக்கு மட்டுமல்ல, விவசாயிகளுக்கும் நிச்சயம் லாபம் கிடைக்கும்.

இப்படி எல்லாம் எழுதிவிட்டு, இந்த விவரங்களைத் தந்தவர் யார் என்று சொல்லாவிட்டால் எப்படி? சாட்சாத் பெட்ரோலிய அமைச்சர் ராம் நாயக்கேதான். அதனால் தாராளமாக நம்பலாம்.

ஐம்பது வருடங்களுக்கு முன் 11 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து வந்தோம். இப்போது 185 லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம். உள்நாட்டுத் தேவை 165 லட்சம் டன்தான். மீதி 20 லட்சம் டன் ஏற்றுமதி செய்யலாம் என்றால் சர்வதேச விலை நம் நாட்டு விலையை விட டன்னுக்கு 3000 ரூபாய் குறைவாக இருக்கிறது. அப்படியும் சில சர்க்கரை ஆலைகள், ஏதோ கையில் கொஞ்சம் பணம் கிடைக்கும், குடோனும் காலியாகும் என்று நஷ்டத்துக்கு ஏற்றுமதியும் செய்கிறார்கள்!

பிரேஸிலைப் போல நாமும் எத்தனால் கலந்து பெட்ரோல் உபயோகிக்கலாமே என்று சக்தி சர்க்கரை ஆலை முதலிய வற்றைத் திறம்பட நடத்தி வரும் தொழிலதிபர் நா. மகாலிங்கம், முப்பது ஆண்டுகளாக இடைவிடாமல், சலிப்பின்றி எடுத்துக் கூறி வருகிறார். மற்ற பயிர்களைப் பாதிக்காத வண்ணம், 192 பிலியன் லிட்டர் ஆல்கஹால் நாமும் தயாரிக்க முடியும் என்கிறார். இதை பெட்ரோலுக்குப் பதிலாக உபயோகித்தால், கார்பன் மோனாக்ஸைடு புகை இன்றி, சுற்றுச் சூழல் சுத்தமாக இருக்கும். பெட்ரோலியப் பொருட்களை ஒரு லட்சம் கோடி ரூபாய் கொடுத்து இறக்குமதி செய்யவும் வேண்டியிருக்காது! சென்ற ஆண்டு மட்டும், நம் நாட்டின் மொத்த க்ரூட் தேவையான 107 மிலியன் டன்னில், 70 சதவிகிதம் போல இறக்குமதி செய்திருக்கிறோம். (பெட்ரோல், டீசல் முதலியவற்றுக்கான கச்சா மூலப் பொருள்கள் க்ரூட்.) ஒரு பீப்பாய் க்ரூடின் விலை 25 - 30 டாலர்களிலிருந்து 37 டாலர் வரை இருந்திருக்கிறது. இதற்காக நமது அந்நியச் செலாவணியில் 80,000 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம்.

எதனாலுக்கு மாறினால் 136 மில்லியன் மக்களை, பசியிலிருந்தும் வறுமையிலிருந்தும் மீட்க முடியும். பெட்ரோலிய நிறுவனங்களுக்குக் கொடுக்கும் பணம், நம் நாட்டிலேயே கிராமப்புற வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டால், நமது பொருளாதாரமும் மேம்பாடு அடையும்.

- சித்தார்த்

(ஆதாரம் : கிஸான் வேர்ல்ட்)

படம் : யோகா



புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும் ?



மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் சூரிய பகவான்.

ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் சூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர் : ஸங்கராந்தி சமயம் சூட்க்ஷமமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷு	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷு	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

வந்தாச்சு ப்ளாட்டினம்!



ஹாலிவுட் ஹீரோ(க்கள்)யின்கள் பலர் காதலர் தின ஸ்பெஷலாக இதய வடிவிலான டாலர்களை வடிவமைக்க இருக்கிறார்கள். இந்த டாலர்களை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைக்கும் பணத்தைச் சமூக சேவைக்குப் பயன்படுத்த இருக்கிறார்கள். 'அதுக்கென்ன?' என்கிறீர்களா? இந்த நட்சத்திரங்கள் செய்யும் டாலர்கள் தங்கமோ வைரமோ அல்ல. ப்ளாட்டினம்! ஆமாம். அங்கெல்லாம் மற்றதைவிட ப்ளாட் "டனத்துக்குத்தான் /கு.

மேற்கொண்டு வருகிறது.

அதன் விளைவாக, இந்தியாவெங்கும் உள்ள பல்வேறு நகரங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட நகைக் கடைகளில் ப்ளாட்டினம் நகைகள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் உள்ள சுமார் அரை டஜன் பெரிய நகைக் கடைகள் ப்ளாட்டினம் நகைகளுக்கென பிரத்யேக விற்பனைப் பிரிவைத் துவக்கியுள்ளன.

பிளாட்டினம், தங்கம் வைரத்தைவிட அரியதொரு உலோகமாகக் கருதப்படுகிறது. இதற்கு என்ன காரணம்?

உலகில், மிகச் சில இடங்களில் மட்டுமே னத் தாது பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டால், கடையியில் அதிலிருந்து மிஞ்சுவது வெறும் இருபத்தி எட்டு கிராம் சுத்த ப்ளாட்டினம் மட்டுமே! இதனால், உலகில் ஓர் ஆண்டுக்கு நகைகள் செய்ய மூவாயிரத்து முந்நூறு டன் தங்கம் பயன்படுத்தப்பட்டாலும், நூறு டன் ப்ளாட்டினம் மட்டுமே பயன்படுத்த முடிகிறது.

ஆக, அரிய உலோகம் என்பதாலேயே இதற்கு உலகெங்கும் ஏக கிராக்கி.

"ப்ளாட்டினம் 1700°C வெப்ப நிலையில்தான் உருகும் என்பதால், ப்ளாட்டினத்தில் நகைகளைச் செய்வது என்பது மிகவும் கடினம். சாதாரணமாக, தங்க நகை உற்பத்தியாளர்களால், ப்ளாட்டின நகைகளைச் செய்துவிட முடியாது. இதற்கு அதி நவீன தொழில் நுட்ப இயந்திரங்களும்,

இந்தியாவில் பிளாட்டினம் நகைகள் சில வருடங்களாகத்தான் பரவலாக அறியப்படுகின்றன. அகில உலக அளவில், பிளாட்டினம் தொடர்பான விவகாரங்களைக் கவனித்துவரும் ப்ளாட்டினம் கில்டு இண்டர்நேஷனல் அமைப்பின் கவனம் இப்போது இந்தியாவின் பக்கம் திரும்பியுள்ளது. ப்ளாட்டினம் பற்றிய விழிப்புணர்வை நகை வாங்குவோர் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை

ப்ளாட்டினம் கிடைக்கிறது. குறிப்பாக, ஆப்ரிக்கா மற்றும் ரஷ்யாவில்தான் மொத்த உற்பத்தியும் நடைபெறுகிறது. பூமியின் உள்ளே ஆயிரம் மீட்டர் ஆழத்துக்கும் அதிகமாக தோண்டினால்தான் ப்ளாட்டினத் தாது கிடைக்கிறது. பத்து டன் ப்ளாட்டி

மிகவும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களும் அவசியம். ப்ளாட்டின நகைகளின் அதிகப்படியான விலைக்கு இதுவும் காரணம். தங்கத்தின் விலை கிராம் நாநூற்றுச் சில்லறை என்றால், ஒரு கிராம் ப்ளாட்டினம் ஆயிரத்து ஐம்பது

ரூபாய் வரை விலையா கிறது'' என்கிறார் ப்ளாட் டின நகைகள் விற்கும் ஜீதேந்திரா.

"சுத்த தங்கத்தில் நகை செய்ய முடியாது என்பதால் அதனுடன் செப்பு, சேர்ப்பது போலவே, சுத்தமான ப்ளாட்டினத்திலும், நகைகள் செய்ய முடியாது. அதனுடன் கேடியம், கோபால்ட் போன்ற உலோகங்கள் ஐந்து சதவீதம் வரை சேர்க்கப்படுகின்றன" என்கிறார்.

"சமீபத்தில்தான் பரவலாக ப்ளாட்டினம் நகைகள் அறிமுகமாயின என்றாலும், இதற்கு வரவேற்பு நன்றாக இருக்கிறது'' என்கிறார் ஜி.ஆர். தங்கமாளிகையின் ராஜேந்திரன். ''இளைய தலைமுறையினர் ப்ளாட்டின நகைகளை விரும்பி வாங்குகிறார்கள்! இப்போது மோதிரம், கழுத்து செயின், டாலர்கள்தான் அதிகமாக விற்பனையாகின்றன."

பெண்கள் மத்தியில் இதற்கு வரவேற்பு எப்படி?

"பெண்களிடையே வாங்குவதற்குப் பொதுவாகவே ஒருவித தயக்கம் இருப்பதைக் காண முடிகிறது." என்கிறார் ஜீதேந்திரா. "இதற்கு என்ன காரணம்? ப்ளாட்டினம் பார்க்க வெள்ளி போலவே இருக்கிறது என்பதாலா?" என்று கேட்டால், ''ஆமாம்! தவிரவும், இன்னமும் தென்னிந்தியாவில் தங்கம், வைரம் மீதுதான் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். பிளாட்டினம் பற்றி விழிப்புணர்வு குறைவாக இருக்கிறது!" என்கிறார் அவர்!

— மௌலி



மறக்க முடியாத இடைத்தேர்தல்கள்!

"நீதியை நிலைநாட்டி மீண்டும் வெற்றிவாகை சூட வருகிறார் புரட்சித்தாய்" என்றெல்லாம் அ.தி.மு.க.வினர் இடைத்தேர்தல் பிரசாரத்திற்குத் தயாராகிவிட்டனர். "எங்களைப் பொறுத்தவரை இந்த இடைத்தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மறக்க முடியாத தேர்தல்" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டனர். இது மட்டும்தான் மறக்க முடியாத தேர்தலா? கேட்டோம் பத்திரிகையாளர் சின்னக்குத்தூசியிடம்.



இந்தியா சுதந்திரம் பெற்ற பின் நடந்த முதல் தேர்தல் 1952ம் ஆண்டு நடந்தது. ராஜாஜி முதல்வரானார். 1954-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு அதிகமாகிவிட்டது. இதையடுத்து தமது பதவியை ராஜினாமா செய்தார் ராஜாஜி. பின்னர் எம்.பியாக இருந்த காமராஜர் முதல்வரானார்.

ஆறு மாதத்துக்குள் ஏதாவது ஒரு சட்டமன்ற தொகுதியில் நின்று ஜெயிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு வந்தது. குடியாத்தம் தொகுதி அவருக்கு ஒதுக்கப்பட்டது. காமராஜரை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக கோதண்டராமன் என்பவர் போட்டியிட்டார். இந்த இடைத்தேர்தலில், நீண்டநாட்களாக காங்கிரசை எதிர்த்துக் கொண்டிருந்த பெரியார், முதன்முறையாக ஆதரித்துப் பிரசாரம் செய்தார். காங். அழைக்காமலேயே திமுகவும் அவரை ஆதரித்தது. இந்த இடைத்தேர்தலில் ஒன்றையொன்று முறைத்துக் கொண்டு நின்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து காமராஜரை ஆதரித்ததை அப்போது பரபரப்பாகப் பேசிக் கொண்டார்கள். இறுதியில் காமராஜருக்கே வெற்றி.

அகில இந்திய காங்கிரஸ் பேரியக்கத்தின் போக்கையே மாற்றிய இடைத்தேர்தல் 1963-64ல் நடந்தது. தமிழகத்தைக் காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்தது. திருச்செங்கோடு பாராளுமன்றத்துக்கும் திருவண்ணாமலை சட்டசபை தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடந்தது. திருச்செங்கோடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ராஜாஜி மகன் சி.ஆர். நரசிம்மனும், தி.மு.க. சார்பில் செ. கந்தப்பனும் போட்டியிட்டார்கள். திருவண்ணாமலையில் ப.உ. சண்முகமும் (தி.மு.க) பத்ராஜசலம் பிள்ளையும் (காங்) போட்டியிட்டார்கள்.


இந்த இரண்டு இடைத் தேர்தல்களிலும் தி.மு.க. ஜெயித்தது. இத்தோல்விக்குப் பிறகு 'காங்கிரஸ் ஏன் தோற்றது?' என்பது பற்றி ஆய்வு செய்ய உத்தரவிட்டார் காமராஜர். அந்த ஆய்வின் அடிப்படையில், மூத்த தலைவர்கள் எல்லாம் பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சிப் பணிக்குச் செல்ல வேண்டும் என்றார். இந்த 'கே'ப்ளான் என்றார்கள். பிறகு தாமே பதவியை உதறிவிட்டுக் கட்சிப் பணிக்குச் சென்றார் காமராஜர். அவரின் இந்த 'கே'ப்ளான்படி, ஜெகஜீவன்ராம் போன்ற மூத்த தலை

வர்களைக் கட்சிப் பணிக்கு அனுப்பினார் நேரு.

இந்தி எதிர்ப்பு போராட்டம் 1965ம் ஆண்டு நடந்தது. இந்தப் போராட்டத்தில் பல மாணவர்கள் இறந்து போனார்கள். தி.மு.கவுக்கு ஏராளமான அனுதாப அலை. காங்கிரஸ் அரசு மீது மக்கள் அதிருப்தியடைந்திருந்தனர். இந்த நேரத்தில் தர்மபுரியில் இடைத்தேர்தல் வந்தது. இந்தத் தேர்தலில் தி.மு.க. நிச்சயம் ஜெயிக்கும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்தது. தி.மு.கவின் தேர்தல் பிரசாரங்களுக்கும் ஏகப்பட்ட கூட்டம்! காங். அரசுக்குப் பலமான எதிர்ப்பு. ஆனால் தேர்தல் முடிவு நேர்மாறாக அமைந்தது. மொத்த தமிழகமே தி.மு.க. ஜெயிக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் காங். ஜெயித்தது மறக்க முடியாத இடைத்தேர்தல்.

1971ம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் இந்திய அளவில், அகில இந்திய காங்கிரஸ் தனி மெஜாரிட்டி பெற்று ஆட்சி அமைத்தது. இந்திராகாந்தி பிரதமரானார். இந்தத் தேர்தலில் தமிழகத்தில் போட்டியிட்ட சி. சுப்ரமணியம் தோற்றுவிட்டார்.

ஆனால் அவரை நிதியமைச்சராக்க வேண்டுமென்று இந்திராகாந்திக்கு ஆசை. இவருக்காக கிருஷ்ணகிரி தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. இத் தொகுதியில் ஏற்கெனவே போட்டியிட்டு வென்ற தீர்த்தபதி கவுண்டர் தமது பதவியை ராஜினாமா செய்தார். இந்த நேரத்தில் ஸ்தாபன காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர், சி. சுப்ரமணியத்தை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தவில்லை. "தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் மத்திய நிதி அமைச்சராக வருவது நல்லதுதானே" என்று நினைத்து, விட்டுக் கொடுத்தார் காமராஜர். இந்த இடைத் தேர்தலில் வெற்றி பெற்றுதான் மத்திய நிதியமைச்சராகி பசுமைப்புரட்சிக்கு வழிவகுத்தார் சி. சுப்ரமணியம்.



தி.மு.கவிலிருந்து அ.தி.மு.க பிரிந்தபின் அக்கட்சி வளர அஸ்திவாரம் போடப்பட்ட தேர்தல் 72ம் ஆண்டு நடந்த திண்டுக்கல் பாராளுமன்ற இடைத்தேர்தல். இந்தத் தேர்தல் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்று. இந்தத் தொகுதி தேவர்கள் நிறைந்த தொகுதி என்பதால் எல்லாக் கட்சியினரும் தேவர் இனத்தைச் சேர்ந்தவர்களையே வேட்பாளர்களாக அறிவித்திருந்தனர். எம்.ஜி.ஆர். மாயத்தேவரை வேட்பாளராக நிறுத்தினார். தி.மு.க. சார்பில் பொன். முத்துராமலிங்கம் நிறுத்தப்பட்டார். இந்தத் தேர்தலில் தொகுதி மக்கள் எம்.ஜி.ஆருக்காக மாயத்தேவரை ஜெயிக்க வைத்தார்கள். தி.மு.க.வுக்குக் கிடைத்தது மூன்றாவது இடம். கட்சி ஆரம்பித்த பின், மக்களிடையே செல்வாக்குத் தமக்கு இருப்பதாக எம்.ஜி.ஆருக்கு நம்பிக்கை ஏற்படுத்திய இடைத் தேர்தல் இது.



— ஏக்ஜி



நவரசம்

அழகுவின் கேள்வி சரவணனைத் தலைகுனிய வைத்தது. சங்கடத்துடன் அவன் வேறு பக்கம் பார்க்கத் துவங்கினான்.

"ஸாரி சரவணா."

"பரவால்ல அழகு. என்னால உங்க குடும்பத்துக்கு எந்த அசிங்கமும் வராது... சத்தியமா" என்றான் சரவணன்.

"தாங்க்ஸ் சரவணா" என்று சரவணனின் கையைப் பற்றிக் கொண்டான் அழகு.

பஸ் போய்க் கொண்டிருந்தது.

உத்தேசமாகத்தான் தேடியலைந்தார்கள் சரவணனும், அழகுவும். கோயமுத்தூர், திருப்பூர் என்று போய் லாட்ஜ்களில் விசாரித்தனர். மூன்று நாள் கழித்து மதுரையில் வந்து இறங்கித் தேடுகையில் எதிர்ப்பட்டாள் அம்சவேணி. கொஞ்சம் அழுக்காக இருந்தாள். முகம் வீங்கியிருந்தது. அழகுதான் கவனித்தான். 'சரவணா அங்க பாரு!' அழகுவையும், சரவணனையும் பார்த்ததும் அவள் அழுகை கரை உடைத்துக் கிளம்பியது.

"அழாதே.. அழாதே... என்னாச்சு?"

"என்னை ஏமாத்திட்டு ஓடிப் போயிட்டான்... அந்த பாவிப்பய."

"என்னங்க... விவரமாச் சொல்லுங்க. ஏதாவது சாப்பிட்டீங்களா இல்லையா?" என்றான் சரவணன்.

"இல்லை... காலைலருந்து சரியா சாப்பிடாம அலையிறேன்." இருவரும் அவள் அழுது முடிக்கக் காத்திருந்து ஓட்டல் கூட்டிப் போய்ச் சாப்பிட வைத்து நடந்ததைக் கேட்டனர்.

ஊரிலிருந்து கிளம்பி, விலக்கில் டவுன் பஸ் பிடித்தது, டவுனில் வீரையன் காத்திருந்தது, அங்கிருந்து பஸ் ஏறி கிளம்பி இங்கு வந்தது எல்லாம் சொன்னாள் வேணி.

இருவரும் மதுரை வந்திருக்கின்றனர். மீனாட்சியம்மன் கோயில், சினிமா, அல்வா, மல்லிகைப்பூ, புது மண்டபத்தில் பிளாஸ்டிக் பாசிகள் என்று அம்சவேணிக்கு ஒரு சந்தோஷ உலகத்தையே காட்டியிருக்கிறான் வீரையன்.

அந்த அப்பாவிப் பெண்ணுக்கு மகிழ்ச்சியிலும், பூரிப்பிலும் மூச்சுத் திணற இரண்டு இரவுகள் லாட்ஜில் கழிந்திருக்கிறது. மூன்றாம் நாள் நள்ளிரவில் எழுந்து பார்த்த அம்சவேணியின் வயிறு கலங்கிப் போனது... நகைகள், எஞ்சியிருந்த பணம் தனது உடைகள்

பாஸ்கர் சக்தி

யாவற்றுடனும் சேர்ந்து விரையனைக் காணவில்லை. பயந்து பயந்து அழுது அழுது அன்றைய பொழுது கழிந்திருக்கிறது. அடுத்தநாள் லாட்ஜில் சந்தேகமாய் விசாரிக்க, 'வீட்டுக்காரரு வெளியில போயிருக்காரு. வந்திருவாரு" என்று பொய் சொல்லி விட்டு, அசந்த நேரமாகப் பார்த்து துணிகளைக் கூட எடுத்துக் கொள்ளாமல் லாட்ஜிலிருந்து நழுவி தெருத் தெருவாக அலைந்திருக்கிறாள்.

பசி, தாகம்... கையில் சல்லிக்காசில்லை... யாரிடமும் கேட்கவும் தயக்கம்... பயம் என்று அனாதரவாக அலைகிற நேரத்தில் அழகுவையும், சரவணனையும் கடவுளைப் பார்த்தது போல் பார்த்து விட்டாள்.

அம்சவேணி சொல்லி முடிக்கையில் அழகு தேம்பிக் கொண்டிருந்தான். சரவணனுக்கும் கூட தானமாட்டாமல் கண்ணில் நீர் முட்டியது.

ஒரு நிமிடம் அம்சவேணியின் இடத்தில் தன்னை வைத்து யோசித்துப் பார்த்தான் சரவணன். அப்போதே கிளம்பி விரையனைக் கொன்று விட வேண்டுமென்று வெறி வந்தது அவனுக்கு.

ஆனால், அழகு அழுதுகொண்டே அவளைக் கன்னாபின்னாவென்று திட்டினான். அதில் சில வசவுகள் சரவணனுக்கே அதிர்ச்சி தந்தன.

"என்ன அழகு... நீயும் இப்படிப் போட்டு வைச்சா அது எங்க போகும்?"

"எங்கியாவது போய்த் தொலையட்டும்... செத்து நாசமாப் போகட்டும்... இப்படி ஏமாந்து போய் வந்து நிக்கிற கழுதை எங்க குடும்பத்துக்கு வேணாம்..."

"சரி...சரி..விடு... கோபத்துல கண்டமேனிக்குப் பேச வேணாம். இந்தாங்க. நீங்க கிளம்புங்க. எதுன்னாலும் ஊர்ல போயிப் பேசிக்கிரலாம். பாருங்க. அம்புட்டுப் பயலும் வேடிக்கைப் பாக்கிறான்."

இதற்குள் வேடிக்கைப் பார்த்த ஆர்வலர்களில் சிலர் அருகில் வந்து பேச்சுக் கொடுத்தனர்.

"எதுக்குப்பா தம்பி பொண்ணு அழுகுது-என்ன பண்ணீங்க?"

'வீட்ல கோவிச்சுட்டு வந்திருச்சுங்க."

"பாத்தா அப்படித் தெரியலையே! நீயும் அந்தக் குள்ளனும் சேர்ந்து கூட்டியாந்துட்டீங்களா?"

"சாமி...பேசாமப் போங்க. அது அந்தப் பெண்ணோட அண்ணன். அழகு கிளம்பு. நம்ம பிரச்னையை வெளில வச்சுப் பேசக் கூடாது. கதையே வேற மாதிரி ஆயிரும் போல்ருக்கு."


எவ்விதப் பிரச்னையுமின்றி அம்சவேணியையும், அழகுவையும் ஒரு வழியாக சரவணன் ஊருக்குக் கூட்டி வந்து சேர்ந்தான்.

வீட்டுக்குள் நுழையும் முன்பே அம்சவேணிக்கு நடுக்கம் துவங்கி விட்டது. சின்ன விஷயங்களுக்கே மாகாளியாய் மாறி விடுபவள் அம்மா. இப்போது தன்னை எப்படி நடத்துவாள் என்று பதறியபடியே உள்ளே நுழைந்தாள் அம்சவேணி. அழகுவுக்கும், சரவணனுக்கும் நடுவில் பயந்து, பதுங்கி நுழைந்தாள்.

"வாடி நாம் பெத்த எம் மூத்த மகளே!"

அம்சவேணிக்கு மட்டுமல்ல சரவணனுக்கே பயமாயிருந்தது லீலா மகளை அழைத்த விதம்.





''கோர்ட் வளாகத்துல எல்லா சாட்சிகளுக்கும் என்னவோ தர்றாங்களே... என்ன அது?''

'' 'பல்டி-விட்டமின்' மாத்திரைகளாம்!''

— தஞ்சை சுபா

சரவணனுக்கு இனிமேலும் தான் அங்கிருப்பது சரியா? என்று தோன்றியது...

"ஏண்டி... எல்லாத்தியும் விட்டுட்டு வந்து நிக்கிறியேடி.! இத்தனை வருசமா குருவி இரை பொறுக்கற மாதிரி பெறக்கி பெறக்கி சேத்த காசு, நகை எல்லாத்தையும் ஏமாந்துட்டு... இப்படி நீயும் அழிஞ்சு போயி... இப்ப எதுக்குடி இங்க வந்த...? யாரு எழவைக் கூட்றதுக்குடி வந்த?"

லீலா பாய்ந்து அம்சவேணியைப் பற்றினாள். பேயறையாய் மகளை அறைந்து தள்ளினாள். கண், மூக்கு, முகம் என்று சகட்டு மேனிக்கு கவனமேதுமின்றி அடிகள் இறங்கின.

சரவணன் பொறுக்கமாட்டாமல் குறுக்கே பாய்ந்தான். அவனுக்கும் அடி விழுந்தது.

'விடுங்க...வயசுப் பொண்ணைப் போயி... தெரியாம தப்புப் பண்ணிருச்சு..' கூச்சலினூடே தீனமாகச் சொன்னான் சரவணன்.

"தெரியாம பண்ணாளா!.......... இருந்தாளாக்கும்..."

சரவணன் அதிர்ந்தான். எவ்வளவு கேவலமான வார்த்தைகள்! தனது மகளைப் பற்றி முற்றிலும் அன்னியனான ஒரு இளைஞனிடம் ஒரு அம்மா இந்த வார்த்தைகளைச் சொல்வதென்றால்.

.... எவ்வளவு ஆங்காரத்திலிருக்கிறாள் அவள் என்று சரவணனுக்குப் புரிந்தது.

விலகி வெளியே வர எத்தனித்தவளின் கண்கள் தற்செயலாக கிருஷ்ணவேணியின் கண்களைச் சந்தித்தன. அழுதழுது வீங்கியிருந்த அந்தக் கண்களில் இப்போது அவமானம் குடியேறி இருந்தது. தனது வீட்டின் அவலம் சரவணனைச் சாட்சி வைத்து அரங்கேறுவதைச் சகிக்கமுடியவில்லை அவளால். அவளது கண்கள் அழுதபடியே குனிந்து நிலம் பார்த்தன.

சரவணன் வீட்டை விட்டு வெளியே வந்தான். மனசு ரணமாக இருந்தது. அம்சவேணியின் கழிவிரக்கம் மிகுந்த கதறலும் லீலாவின் ஆங்கார வசவுகளும், நடுநடுவே அழுகு. கிருஷ்ணவேணியின் கெஞ்சல்களும் கலந்த ஓசைகள், மிகுந்த வேதனை தருவதாக இருந்தன. வந்தபோது இந்தக் குடும்பம் எவ்வளவு உயிர்ப்புடன் இருந்தது.

சரவணன் செல்கையில், குரல்கள் கேட்டு ஊரிலிருந்து வந்த சிலர் பூவரச வீட்டை நோக்கி சரவணனைக் கடந்து போனார்கள்.

"என்னா சரவணா... அந்தப் புள்ளை கிடைச்சிருச்சா?"

"இம்புட்டுச் சத்தம் கேக்குது... போட்டு அடிக்கிறாங்களா?"

சரவணன் பதிலேதும் கூறாமல் வீட்டுக்குப் போனான். அதற்குள் வீட்டுக்கு விஷயம் தெரிந்து விட்டிருந்தது போலும்.

ஹாலில் உட்கார்ந்திருந்த சிவராமன் இவன் போனதுமே கேட்டார்.

"என்னடா அந்தப் பொண்ணு கிடைச்சிட்டாளா!"

"ம் கிடைச்சிருச்சு."

"அவன்?"

"அந்த நாயி அந்தப் புள்ளைய மதுரைல விட்டுட்டுப் போயிட்டாம்ப்பா... நகை, ரூபாயெல்லாம் எடுத்துக்கிட்டு" என்றான் சரவணன் கோபமாக.

"அடப்பாவி. அவன் விளங்குவானா? நாசமாப் போறவன்" என்றாள் அம்மா.

சரவணன் சிவராமனிடம் சொன்னான், "அப்பா நீங்க பூவரசவீட்டுக்குப் போய் அந்தம்மாவை கண்ட்ரோல் பண்ணுங்க. இல்லாட்டி அந்தப் புள்ளைய அடிச்சே கொன்னுரும்."

"அப்படியா?" என்று எழுந்தார் சிவராமன்.

கிளம்பினார். அம்மாவும் கூடவே கிளம்பினாள்.

"நீயும் எங்க வர்ற?"

"மனசு கேக்கலைங்க. பாவம் இப்படி நேரத்துல நாலு பேரு கூட இருந்தா நல்லது தானே" என்றாள் அம்மா.

அப்பா ஆச்சர்யமாகப் பார்த்தார், "சரி

வா'' என்று நடந்தார். சரவணனுக்கும் கூட... அம்மாவை நினைத்தால் ஆச்சர்யமாக இருந்தது. பாட்டியிடம் சென்றான் சரவணன். பாட்டி அவனை அந்தரங்கமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"நான் என்னடா சொன்னேன். நடந்திருச்சா இல்லையா?'' என்றாள்.

"என்ன சொன்ன?"

"அந்த வீட்ல குடிவந்தா விளங்காதுன்னு சொன்னனா இல்லையா? பாத்ததில்ல அந்த குடும்பத்தை..."

"உனக்கு இது ஒரு சாக்கு... பாட்டி... லவ் பண்றது, ஓடிப் போறது எல்லாம் இப்ப ரொம்ப சாதாரணம். இதுக்கு யாரும் சாபம் குடுக்கத் தேவையில்லை."

"அட! அந்தக் குடும்பத்தோட நிம்மதி போச்சா இல்லையா?"

"சும்மாரு பாட்டி... நீவேற சம்பந்தமில்லாம பேசிக்கிட்டு... அது புத்தி கெட்ட கழுதை ஓடிப்போச்சு. பொண்ணு ஓடிப் போனா எல்லா வீட்லயும் நடக்கறதுதான் இப்ப அங்கயும் நடக்குது. நீ எல்லாத்தையும் உன் கதையோட ஜாய்ன் பண்றே..."

"அடப்போடா... படிச்ச முட்டாப்பய நீ உங்கிட்ட சொல்லிக்கிட்டு..." சரவணனுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. நண்பர்களைத் தேடிப் போனான். அவர்களும் இதற்குள் வந்து சேர்ந்து விட்டிருந்தனர். தூத்துக்குடி, கொடைக்கானல் என்று தத்தம் தேடுதல் வேட்டை பற்றி அவர்கள் சொல்ல, பேசிக் கொண்டே நடந்து கடைத்தெருவைத் தாண்டுகையில் கிருஷ்ணவேணி போய்க் கொண்டிருந்தாள்.

"போய்க்கிட்டே இருங்கடா... நான் வந்திர்றேன்" சரவணன் கிருஷ்ணவேணியை நெருங்கினான்.

"வேணி..."

அவள் திரும்பினாள். முகம் நீர்த்தக்காளி போல் இருந்தது. எவ்வளவு அழுதாளோ!

"என்ன வேணி...வீட்ல பிரச்னை ஓய்ஞ்சிருச்சா?"

"குறைஞ்சிருக்கு... உங்கப்பாவும், அம்மாவும் உக்காந்து பேசிக்கிட்டிருக்காங்க..."

"ஒண்ணும் கவலைப் படாத வேணி."

"நான் கிளம்புறேன். காபிப்பொடி வாங்க வந்தேன்" என்று நடந்தாள் வேணி.

"இருவேணி... ஒரு நிமிஷம்."

வேணி அவனை நின்று ஒரு பார்வை பார்த்தாள். பற்றற்ற பார்வை.

"இதோ பாருங்க. ஏற்கெனவே பத்திக்கிட்டு எரியுது. இதுல நம்ம வேற நின்னு பேசணுமா? பேசாம போங்க!"

'விடுவிடு'வென்று அவள் நடந்து போவதைப் பார்த்த சரவணன் சற்றே சங்கடத்துடன் திரும்பி வந்தான்.

"என்னடா சரவணா?"

"சரியாப் பேசாமப் போறாடா!"

"அவளே நொந்து போயிருக்கா... நீ வேற போய் இப்ப பேசினா எப்படி?"

"ப்ச்." என்றான் சரவணன்.

நால்வரும் கிரவுண்ட் பக்கம் வந்து அமர்ந்தார்கள். கண்கள் அனிச்சையாக பூவரசவீட்டைப் பார்த்தன.

"இந்த வீரையண்ணன் இப்படிப் பண்ணியிருக்கக் கூடாது" என்றான் பாலா.

"அண்ணன் என்னடா அண்ணன். அந்தத்............பயலை... இனிமே மரியாதையா பேசின, உன்னை உதைப்பேன்" என்றான் சரவணன்.

"ஆமாமா... அந்தாளு புளுகுவான்னு மட்டும்தான் நினைச்சா... ஒன்னா நம்பர் அயோக்கியனா இல்ல இருக்கான்."

"இனிமே அவன் ஊருக்குள்ள வரட்டும்... பிரிச்சு மேஞ்சு புடணும் அவனை."

நால்வரும் கோபத்துடன் ஆற்றாமையுடன் பேசிக் கொண்டிருந்தனர் வெகு நேரம்.

இருட்டிவிட்டது.

"கிளம்புவோமாடா சரவணா."


"மனசு சரியில்லைடா... வீட்ல போயி என்ன செய்யப் போறோம்" என்றான் சரவணன்.

"கொஞ்ச நேரங் கழிச்சுப் போலாமா?"

"ஒரு மாசமா வண்டி ஓடலை சார். அடுத்த மாதம் மாமூல் தர்றேன் சார்!"

"உனக்கு வண்டி ஓடினாலும் ஓடாட்டியும் எங்க வண்டி ஓடியாகணுமேப்பா!"

— சீர்காழி ரேவதி



வீணை இங்கே? குடம் எங்கே?

காஸ்மோபாலிடன் கிளப்பில், ஒரு பெண்மணி வாசித்துக் கொண்டிருந்த வீணையைப் பார்த்ததும் தலை கிறுகிறுத்தது. அவர் கையிலிருந்த வீணையில் வீணைக்குரிய 'குடம்' பகுதி மிஸ்ஸிங்!



சுமா சுதீந்திரா என்ற அந்தப் பெண்மணி இருபத்தைந்து வருடங்களாக வீணைக்கச்சேரி செய்து வருகிறார்.

அந்த குடத்தை எங்கே மேடம்?

''இது பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து, நானே உருவாக்கிய வீணை. வீணையின் குடத்தை எடுத்துவிட்டு, அதே சமயம் குடத்தினால் கிடைக்கும் எஃபெக்ட்டை, ஒரு எலெக்ட்ரானிக் உபகரணத்தால் கிடைக்கச் செய்து விட்டால், உருவத்தில் சற்று சிறிய, எடை குறைவான வீணை உருவாக்கி விடலாம் என்று நான் செய்த முயற்சியின் பலன் இது. பயணத்தின்போது இதை எடுத்துச் செல்வது மிக எளிது. தந்தி மரத்தில் உருவாக்கப்பட்டது இந்த வீணை'' என்றவரிடம், ''வீணையை இப்படியெல்லாம் மாற்றி அமைத்தால், சரஸ்வதி தேவி கோபித்துக் கொள்ள மாட்டாரா?'' என்றால், ''இது சரஸ்வதி வீணை இல்லை. தரங்கிணி வீணை'' என்கிறார்.

— கௌதம்

"ம்..." என்ற சரவணன் தூரத்தில் தெரிந்த பூவரசவீட்டைப் பார்த்தான். லைட் எரிந்து கொண்டிருந்தது. அமைதியாக இருந்தது.

"பிரச்னை முடிஞ்சிருச்சு போலிருக்குடா.. வீடு அமைதியா இருக்கு."

'ம்' என்றான் சரவணன். "எங்கம்மாவும், அப்பாவும் போய்ச் சமாதானப் படுத்தியிருப் பாங்க. பெத்தவ கோபம் எவ்வளவு நாள் இருக்கும்? கொஞ்ச நாள்ல சரியாப் போயி டும்."

"என்ன சரவணா பெரியாளு மாதிரி பேச ஆரம்பிச்சிட்ட நீ!" என்று சிரித்தான் சுந்தர்.

"மனசு திடீர்னு ஒரு மாதிரி ஆயிடுச்சுடா. நான் பாட்டுக்கு ஜாலியா இருந்தேன். 'லவ்'வுன்னா ஜாலியாத்தான் கடைசி வரைக் கும் இருக்கும்னுதானேடா நாமெல்லாம் நினைச்சோம்... இப்பப் பாரு... நான் கிருஷ்ண வேணிகிட்ட பேசப் போனா அவ முகத் தைப் பாக்கவே சங்கடமா இருக்கு. இனிமே முன்ன மாதிரி நாங்க ரெண்டு பேரும் ஜாலியா பேசிக்க முடியுமான்னே தெரிய லைடா... குழப்பமா இருக்கு."

"அது ஒண்ணுமில்லைடா, லைஃப்ல முதமுதல்ல இப்படி ஒரு பிரச்னையை உனக்கு நெருக்கமான ஒரு குடும்பத்தில பாத்திருக்க... அதான் உம் மனசு சங்கடப் படுது... எல்லாம் சரியாப் போகும்டா."

"என்னைச் சொல்லிட்டு இப்ப நீயில்ல பெரியாளுக மாதிரி பேசுற?"

நால்வரும் சிரித்தனர். நால்வரில் பூவரச வீட்டைப் பார்க்கிற மாதிரி மணிதான் அமர்ந்திருந்தான்.

அவனது கண்களில் திடீரென இதுவரை கண்டிராத ஒரு பீதி தோன்றியது.

"அய்யய்யோ! அங்க பாருங்கடா!"

பதறி எழுந்தவர்கள் அதனைப் பார்த் ததும் வெலவெலத்துப் போனார்கள்.

பூவரச வீட்டின் பின்புறம் முழுவதும் பற்றி எரிந்தபடி அங்குமிங்குமாக ஓர் உரு வம். பூவரசமரத்திற்கும் காம்பவுண்டு சுவ ருக்கு மிடையில், அது எரிகிற வெளிச்சத்தில் வீடு பயங்கர பிரகாசமாய்த் தெரிய, அந்த உருவத்தின் ஓலம் இதுவரை கேட்டிராத துயரமும், பயமும் கலந்து அந்தப் பகுதி யையே இழித்தது. நால்வரும் உறைந்து போய், மறுகணமே உயிர் பதறி ஓடினார்கள். பயத்தால் இரத்தம் சூடேற ஓடி காம்பவுண்டு சுவரை அணுகினார்கள். அதற்குள் அந்த உருவம் மறுபடி ஓலத்தை எழுப்பியது. அந்த ஓலம் உடலின் வாதையை மட்டுமல்ல, துயரத்தின் கொடுமையை, துரோகத்தின் வேதனையை, ஏமாற்றத்தின் பரிதாபத்தை என யாவற்றையும் உள்ளடக்கியதாயிருந்தது.

இவர்களும், வீட்டிலிருந்தவர்களும் நடந் ததை உணர்ந்து நிதானிக்கும் முன்னரே அம்சவேணி உயிரை விட்டிருந்தாள். பூவரச மரத்தடியில், ஒரு கருகிய மரம் போல.

(அடுத்த இதழில் முடியும்)

● டி.எஸ். சேகர், மோரகனியனூர்.

? அரசியலில் கொத்தடிமைகளாக இருப்பது யார்...?

! தங்கள் சக்தியை உணராத வாக்காளர்கள்!

● லெ. நா. சிவகுமார், சென்னை-33.

? பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேரின் இந்திய விஜயம் குறித்து...?

! இந்தியா - பாக். டென்ஷன் குறைய உதவியதோடு இங்கு தொழில் வளர்ச்சிக்கும் உதவியுள்ளது... தெற்கில் ஆந்திரா, கர்னாடகாவரை வந்தவர் தமிழகம் வரவில்லை என்பது நமக்குத்தான் இழப்பு! அ.தி.மு.க. ஆட்சி(?) கோட்டையைப் பிடித்தபின் கோட்டைவிட்ட பல சந்தர்ப்பங்களுள் இதுவும் ஒன்று.

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை - 7.

? ஜெயித்த எம்.எல்.ஏ. காரணமின்றிப் பதவியை ராஜினாமா செய்தால், இடைத்தேர்தல் நடத்தாமல், இரண்டாவதாக அதிக வாக்குகள் பெற்றிருந்தவரை எம்.எல்.ஏ. ஆக்கினால், ஆண்டிப்பட்டி அசிங்கங்கள் அரங்கேறாமல் தடுக்கலாமே...?

! அது பெரும்பான்மை மக்களின் தேர்வாயிராது என்பதால் ஜனநாயக விரோதமாகிவிடுமே வளர்மதி!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி-20.

? கண்ணகி சிலையை நிலைநாட்டுவது தவறில்லை. ஆனால் கல்வித் தமிழை நிலைநாட்ட என்ன செய்தார் கருணாநிதி என்று அமைச்சர் தம்பிதுரை கேட்டிருக்கிறாரே...?

! வாழ்நாளெல்லாம் தமிழ் தமிழ் என்று பாடுபட்டவரைப் பார்த்துக் கேட்கிற கேள்வியா இது? கடந்த தி.மு.க. ஆட்சியின்போது அமைக்கப்பட்ட தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தை ஓபன்செய்து பார்க்கச் சொல்லுங்கள்.

● ஆர். கண்ணம்மாள், வயலூர்.

? 'ஜெயலலிதாவை நம்பியவர்கள் கெட்டது கிடையாது' என்று டாக்டர் மைத்ரேயன் கூறியுள்ளாரே...?

! ராஜ்யசபா எம்.பி. பதவியைப் பெற்ற பிறகு வேறென்ன சொல்லுவார், பாவம்! இதையே கோவிந்தவாசனிடம் சொல்லிப் பார்க்கட்டுமே...!

● கே. சங்கர், கோபி.

? நடிக — நடிகைகளின் டி.வி. பேட்டி தடை விவகாரம் சூடு பிடித்திருக்கிறதே?

! சினிமாவின் வெற்றிக்கு டி.வியைத் திறம்படப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒதுக்குவதால் சினிமா பொருளாதாரம் மேலும் சீர்கெடும். சந்தேகமிருந்தால் மேல்நாட்டு சானல்களைப் பார்க்கட்டும்.

● ஆர். லட்சுமி, மதுரை - 16.

? ராமர் கோவில் கட்டும் திட்டத்தைக் கைவிடுங்கள் என விச்வ ஹிந்து பரிஷத்துக்குப் பிரதமர் வாஜ்பாய் வேண்டுகோள் விடுத்துள்ளது பற்றி..?

! கைவிடுங்கள் என்று கூறியிருந்தால் பாராட்டலாம்; ஆனால், ஒத்தி வையுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார். தருணம் சரியில்லை என்று எச்சரித்திருக்கிறார்.

• 'சின்சியர்' பாராட்டு!





• வாய் புளித்ததோ...!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? கனரக வாகனம் ஓட்டிய போது சென்னை மேம்பாலங்கள் அதிர்ந்ததாக டி.ஐ.ஜி. முகமது அலி சொல்லியிருக்கிறாரே?

! எத்தனை உறுதியான பாலமானாலும் அதிர வேண்டும். இல்லாவிட்டால் 'லோடு' தாங்காது! இது பொறியியல் ரீதியான உண்மை.

● ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்.

? திரையுலகின் சி.எம்.

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர். ந. விநாயகமூர்த்தி. 103, பி.வி. கோவில்தெரு, இராயபுரம், சென்னை - 600 013.	✱ ரூ. 50 பரிசு பெறுபவர்: ஜி.ஜி. சரவணன், 52, மேல வீதி, திருஇந்தளூர், மயிலாடுதுறை - 609 001

நீங்கள் கேட்டவை - தராசு

(சின்சியர் மேன்) என்று கமல ஹாசனைப் பாராட்டியிருக் கிறாரே கே.எஸ். ரவிக்குமார்?

! நியாயத்துக்கு எஸ்.எம்., சி.எம்.அல்ல... ஆனால் the spirit is accepted; though not the spelling!

● ஜி.ஜி.சரவணன், மயிலாடுதுறை *

? நீறில்லா நெற்றி — கண்ணகி யில்லா கடற்கரை — உங்

சிலை என்பது பொதுச் சொத்து. ஒரு தலைவரின் தனிப்பட்ட நம்பிக்கை காரணமாக அதை அகற்றுவதென்பது வாஸ்துவை ஏற்கும்படி தமிழகத்தையே நிர்ப்பந்திக்கும் நடவடிக்கை. இதைத்தான் கல்கி எதிர்க்கிறது. வாஸ்துவும் ஜோதிடமும் தனி மனித நம்பிக்கை. அதை நம்பி ஆட்சி நடத்துவது அரசின் வேலையல்ல. அதிலும் பகுத்தறிவு பின்னணி கொண்ட கட்சி ஒன்று, வாஸ்துவைக் காரணம் காட்டுவது அபத்தம்!

● திருச்சிற்றம்பலம் சுரேஷ், திருக்கண்டேஸ்வரம்.

? அண்மையில் காலமான ஊழல் மன்னன் ஹர்ஷத் மேத்தா..?

! இந்தியப் பங்குச் சந்தையை மட்டுமல்ல; பணச் சந்தையையும் கூட நிலைதடுமாற வைத்து விட்டு ஜாமீனில் வெளியே சுற்றிய ஜல்லிக்கட்டு காளை!

● கே. ராஜகோபால், பெங்களூர்- 95.


? பெங்களூரில் போடப் படும் பிர





• நம்பிக் கெடாதவா





தான சாலைகளுக்குப் பத்து வருடங்களும் மற்ற சாலைகளுக்கு ஐந்து வருடங்களும் உத்தரவாதம் கான்டிராக்டர்களிடம் வாங்கப்படுகிறது. சென்னையில்..?

! கமிஷன் வாங்கப்படுகிறது.

களுக் குப் பிடித்தது எது?

! காழ்ப்பில்லாத அரசியல்; பழிப்பில்லாத விமர்சனம்.

● ஆர். வேணுகோபால், பெரியகுளம்.

? வாஸ்து நம்பிக்கையில் கண் ணகி சிலை அகற்றப்பட் டதை எதிர்க்கும் கல்கியில் வாஸ்து நம்பிக்கையை வளர்க்கும் விளம்பரங்கள் வருவது முரண்பாடாகத் தெரிகிறதே...?

! கல்கி வாஸ்து பற்றிய விளம் பரம் அல்லது செய்தி வெளி யிடுவதால் அதைக் கடைப் பிடிக்க யாரையும் நிர்ப்பந்திப் பதில்லை. ஆனால் கண்ணகி

● ந. விநாயகமூர்த்தி, சென்னை -13.

? எஸ். எஸ். சந்திரனின் நரகல்நடைப் பேச்சைப் படிக்கவே மனம் கூசிப்போகிறதே, எப்படி அ.தி.மு.க.காரர்கள் மேடை போட்டுப் பேசவைத்து ரசிக்கிறார்கள்...?

! மிகவும் தரக்குறைவான, மலினமான அரசியல்தான். ஆனால், அரசியலில் மட்டுமல்ல; பத்திரிகையிலும் இந்த மலினம் புகுந்து விட்டது என்பதை சரவணபவன் ராஜகோபால் பற்றிய செய் திகள், பின்னர் டாக்டர் பிரகாஷ் பற்றிய செய்திகள் வெளியிடு கையில் பயன்படுத்தும் மொழியும் அணுகுமுறையும் உணர்த்து கின்றன. வரலாறு காணாத வீழ்ச்சியின் அடையாளம் இது!

● சி. கலாதேவி, விருதுநகர்.

? சார்க் மாநாடு பற்றி...?

! வழக்கத்தைவிட காரம் அதிகம்; சாரம்...? ஊஹூம்!

● எஸ். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? காங்கிரஸ் - த.மா.கா. இணைப்பை தமது தந்தையைப் போல் ஜி.கே. வாசனும் தள்ளிப்போட்டுக் கொண்டே போவது ஏன்..?

! கட்சிக்கும் தலைமைக்கும் உள்ள தனிப்பெருமை கடலில் கரைத்த பெருங்காயமாகிவிடும் என்ற அச்சமாக இருக்கலாம்.

அவர்களின் உலகம்

“சிக்ஸர்!” என்று கத்தினான் ஒரு பொடியன்.

“சிக்ஸர் இல்லே ஃபோர்” என்று மறுத்தான் இன்னொரு பொடியன்.

“இல்லே சிக்ஸர்தான். நீங்க பேட்டிங் செய்யறப்ப ரெண்டு தடவை பந்து அங்கே விழுந்தப்ப சிக்ஸர்னு சொன்னீங்க இல்லே?” என்றான் மட்டையைப் பிடித்திருந்த ரஞ்சித்.

சிறிது நேரம் வாக்கு வாதம் நடந்தது. பிறகு அரை மனத்துடன் அந்த சிக்ஸர் ஏற்றுக் கொள்ளப்பட்டு விளையாட்டுத் தொடர்ந்தது. ரஞ்சித் நிமிர்ந்து என்னை ஒரு வெற்றிப் புன்னகையுடன் பார்த்தான். பிறகு மட்டையை இலேசாக தரையில் தட்டியவாறு பந்தை எதிர் கொள்ளத் தயாரானான்.

ரஞ்சித்திற்கு ஏழு வயது. என் மகன் கிருஷ்ணாவின் வாரிசு. நான்கு தெருக்கள் தள்ளி இருக்கும் நர்ஸரி பள்ளியில் படிக்கிறான். இரண்டாம் வகுப்பு தான். அதற்கே மிகப் பெரிய மூட்டையைத் தூக்கிக் கொண்டு செல்வான். மூன்று மூப்பதுக்குப் பள்ளி முடிந்ததும் அங்கேயே டியூஷன். அதுவும் முடிந்து அவன் வீடு திரும்புகையில் ஐந்து ஆகிவிடும். சாட்டைச் சுற்றிவிட்டு வந்ததைப் போல் முகம் களைத்திருப்பதைப் பார்க்கையில் பாவமாக இருக்கும்.

காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஐந்து வரை பள்ளியில் இருப்பது இந்த வயதிற்கு மிக மிக அதிகம்தான். வெறும் புத்தகங்கள் மட்டுமே மூளை வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் கொடுத்துவிட முடியாது. இது குறித்து நான் எது சொன்னாலும் எடுபடாது.

“சும்மா இருக்கிங்களாப்பா. நீங்க படிச்ச மாதிரியோ நான் படிச்ச மாதிரியோ இல்லே இப்போ. கம்ப்யூட்டர் அது இதுன்னு எவ்வளவு வேகமா போய்க்கிட்டு இருக்கு தெரியுமா? அதோடு போட்டி போட்டு முன்னாடிப் போகணும்னா இன்னும் நிறைய படிக்கணும்” என்பான் கிருஷ்ணா.

எனக்கு என்னமோ இது ஆரோக்கியமான விஷயமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சினிமாவில் நாய், குரங்குகள் ஏதேதோ சாகசங்கள் செய்யுமே அதைப் போலத்தான் இது. நாய், குரங்குகளின் இயல்பு அதுவல்ல. அப்படிச் செய்ய பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அப்படித்தான் இயல்புகள் மீறி பழக்கப்படுத்தப்படுகிறோம். இனி இது தவிர்க்கவும் முடியாதோ என்பதை நினைக்கையில் வேதனையாக இருக்கிறது.

“அவுட்” என்று உற்சாகமான கத்தல்



எழுந்தது.

தெருவை மைதானமாக்கி மட்டை உயரமே இருக்கும் ஆறு பொடியன்களும் விளையாடுவதைப் பார்க்கையில் சந்தோஷமாகத்தான் இருந்தது. ரஞ்சித் வயதில் நான் விளையாடியது எல்லாம் கண்ணாமூச்சியும், ஓடிப் பிடித்து விளையாடுவதும்தான் கிரிக்கெட் என்ற வார்த்தையையே நான் இருபது வயதில்தான் கேள்விப்பட்டேன். இவர்கள் இப்போதே கையில் மட்டையுடன் இருப்பதைப் பார்க்கையில் பிரமிப்பாகவும் இருக்கிறது. சிரிப்பாகவும் இருக்கிறது.

வீட்டிற்குள்ளிருந்து மருமகள் சாந்தி வந்தாள், "டேய் ரஞ்சித் இன்னும் என்னடா விளையாட்டு? வாடா" என்று கத்தினாள்.

ரஞ்சித் திரும்பிப் பார்த்து "இன்னும் ஃபைவ் மினிட்ஸ் மம்மி" என்றான்.

"ஹோம் ஒர்க் எழுதணுங்கற நினைப்பே இல்லையா?" என்றாள் அதே காரமான குரலில்.

"எல்லாம் டியூஷன்லயே எழுதி முடிச்சுட்டேன்."

"ஹோம் ஒர்க் முடிச்சுட்டா என்ன? வந்துபடி"

"அப்புறம் வரேன்."

ஆரணி யுவராஜ்



''டாடி வந்தா திட்டப் போறார். விளையாடினது போதும். வா.''

''போ மம்மி'' என்றவன் பந்தைப் பிடிக்க ஓடினான்.

''உன் அப்பா வந்து ரெண்டு போட்டா தான் வருவே'' என்று முணுமுணுத்தவள் ''மாமா அவனை அப்புறமா இழுத்துட்டு வாங்க'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

மூன்றாவது நிமிடமே கிருஷ்ணா வந்து விட்டான். பைக்கை வாசலில் நிறுத்திவிட்டு நிமிர்ந்தான். ''டேய் ரஞ்சித் என்னடா விளை யாடிட்டு இருக்கே. படிக்கலே?'' என்று கேட்டான்.

''அப்புறம் வரேன் டாடி'' என்றான் ரஞ்சித்.

பேச்சுக் குரல் கேட்டு சாந்தி மீண்டும் வெளியே வந்தாள். 'ஸ்கூலுல இருந்து வந்ததும் யூனிபார்ம் மாத்தினான். காபி குடிச்சான். விளையாட வந்துட்டான். அப்போ இருந்து கூப்பிடறேன். சட்டையே பண்ணலை'' என்று புகார் வாசித்தாள்.

''ரஞ்சித் என்ன உதை வேணுமா?'' என்று கோபமுடன் கேட்டான் கிருஷ்ணா.

''கிருஷ்ணா! கொஞ்ச நேரம் விளை யாடட்டும். அப்புறம் நான் கூட்டிட்டு வரேன்'' என்றேன்.

''உங்களுக்கெல்லாம் அவன் மசிய மாட்டான் மாமா. வரவர வால்தனம் அதிக மாயிடுச்சி. சொன்ன பேச்சை கேட்கற தில்லே. நீங்க ரெண்டு போடுங்க. அப்பதான் சரிப்படுவான்'' என்றாள் சாந்தி.

''இப்பதானே விளையாட வந்தான்'' என்றேன்.

''இப்பவா? அவன் விளையாட வெளியே வந்தப்ப மணி அஞ்சரை; இப்ப ஆறரை. நீங் களே போதும் மாமா அவனுக்கு'' என்றாள் கோபமாக.

''ரஞ்சித் விளையாடினது போதும் வா'' என்றான் கிருஷ்ணா.

''ப்ளீஸ் டாடி.'' என்று அவன் கெஞ்சினான்.

''இப்ப வரப் போறியா இல்லையா?'' என்று குரலை உயர்த்த, ரஞ்சித் முகம் சுருங்கி, தலைகுனிந்து வீட்டிற்குள் சென் றான். அவனைத் தொடர்ந்து தாயும் தந்தை யும் உள்ளே சென்றார்கள்.

இப்போது அந்த இடத்தில் சற்று முன்பு இருந்த உற்சாகமும் கூச்சலும் போய்ச் சகிக்க முடியாத அமைதி நிலவியது. பொடிசுகள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

''சரி வாடா நாம விளையாடலாம்'' என்றான் ஒருவன்.

''நான் வரலைடா'' என்று கூறிவிட்டு ஒருவன் சென்றுவிட்டான்.

நான்கு பேர் மட்டுமே விளையாட ஆரம்பித்து ஐந்தாவது நிமிடமே ''போதும் சுரேஷ் நாளைக்கு விளையாடலாம்'' என்று ஒருவன் கூற, கலைந்து விட்டார்கள். அந்த இடம் வெற்றிடமானது. நான் மட்டும் சற்று நேரம் அங்கேயே இருந்துவிட்டு வீட்டிற்குள் வந்தேன்.

கிருஷ்ணா, ஹால் சோபாவில் சாய்ந்து கொண்டு காபி பருகியபடி தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் சாந்தி. பாதி கதவு மூடியிருந்த அறைக்குள் விளக்கு எரிந்து கொண்டிருந் தது. நெருங்கிச் சென்று பார்த்தேன்.

அறையில் ரஞ்சித் கையில் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு அமர்ந்திருந் தான். நிழலாடியதும் நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் பார்வையைத் தாழ்த்தி புத்தகத்தைப் பார்த்தான். நிச்சயம் படிக்கவில்லை. அப் படியே படித்தாலும் மூளை வரை எட்டப் போவதில்லை என்று புரிந்தது.

தொலைபேசி சிணுங்கியது.

''சாந்தி, என்னோட மேனேஜராதான் இருக் கும். என்னைக் கேட்டா இன்னும் வரலைன் னும் வந்ததும் ஃபோன் செய்யச் சொல்றேன் னும் சொல்லிடு'' என்றான் கிருஷ்ணா.

சாந்தி எழுந்துச் சென்று ரிஸீவரை எடுத்து ''ஹலோ'' என்றாள்.

''...''

''இன்னும் வரலை சார்.''

''ராமசாமி! மெடிக்கல் பில் கிளெய்ம் பண்ணும்போது ஆல்பம் ஆறுபது ரூபாய்னு போட்டிருக் கீங்களே...?''

''எக்ஸ்ரே படங்களைத் தொகுத்து வச்சிருக்கேன் சார்!''

- எஸ். ஞானசேகரன்



கவிதை நேரம்!



கடற்கரை. அலைகள் வந்து வந்து இசைத்துச் செல்கின்றன. கரையில் ஒரு படகு. அருகில் ஓர் இளம்பெண் - கனவு சுமந்தபடி. பின்னணி இசையினூடே வாசிக்கப்படுகிறது கவிதை.

கரையில் என் படகு
அலை வந்து இழுத்துச் செல்லுமென.

- இவ்வளவுதான். வித்யாஷங்கரின் இந்தக் கவிதையை வாசிக்கும்போது மனத்தில் என்ன தோன்றுமோ அதைக் காட்சிப் படுத்தியிருக்கிறார் பத்திரிகையாளர் ஞாநி. கவிதையைக் காட்சிப்படுத்த இப்போதென்ன அவசியம்?

"கவிதை எல்லா மக்களிடமும் செல்ல வேண்டும். நல்ல கவிதைகள் புத்தகத்துக்குள்ளும் இலக்கியக் கூட்டத்துக்குள்ளும் மட்டுமே முடங்கிவிடாமல் அனைத்துத் தரப்பு மக்களுமே கவிதையின்மீது கவனம் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அதைக் காஸெட்டில் காட்சிப்படுத்தியிருக்கிறேன்" என்கிறார் ஞாநி.

வித்யாஷங்கர் செ. பிருந்தா, யுகபாரதி, கல்பனா, சுகந்தி சுப்ரமணியம் கல்யாண ராமன் ஆகியோரின் கவிதைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார். இப்போது காட்சிப்படுத்தியிருக்கிறார் இவர்.

"காட்சிப்படுத்தலுக்கேற்ற வகையான கவிதைகளை மட்டுமே இப்போது தேர்வு செய்திருக்கிறேன். அதிகமான நல்ல கவிதைகளைக் காட்சிப்படுத்தும் எண்ணம் இருக்கிறது. ஆனால் அதற்கான பட்ஜெட் அதிகம். இந்தக் கேஸட்டுகளைக் கொண்டு தமிழ் சேனல்களிடம் பேசலாமென்று இருக்கிறேன். வாய்ப்புக் கிடைத்தால் தொடருவேன்" என்று சொல்லும் ஞாநி, "ஒரு நிகழ்ச்சி முடிந்து அடுத்த நிகழ்ச்சி ஆரம்பிக்க இருக்கும் இடைவெளியில் இயற்கைக் காட்சிகளைக் காண்பிப்பதற்குப் பதிலாக இந்தக் கவிதைகளை சேனல்களில் காட்டலாம்" என்கிறார்.

- அப்பு

"....."

"சரி சார். வந்ததும் ஃபோன் செய்யச் சொல்றேன்" என்று கூறி வைத்தவள் "அவரேதாங்க" என்றாள்.

"என்ன கிருஷ்ணா விஷயம்?" என்று கேட்டேன்.

"என் மேனேஜரோட ஒரே தலைவலிப்பா. ஆபீஸ்ல முடிக்க வேண்டிய வேலைங்க நிறைய இருக்கு. அதனால ஈவ்னிங் வீட்டுக்கு வாயேன். அப்படியே ஜாலியா பேசிக்கிட்டே ஒரு ரெண்டு மணி நேரம் வேலையும் செய்வோம்னு கூப்பிட்டார். நான் ஈவ்னிங் எனக்கு ஒரு பர்சனல் வேலை இருக்கு சார். அதை முடிச்சுட்டு வீட்டுக்குப் போய்ட்டு அப்புறம் வரேன்னு சொன்னேன்" என்றான் கிருஷ்ணா.

"வேலை அதிகம்னா செய்ய வேண்டியதுதானே?"

"போங்கப்பா. காலையில் இருந்துதான் ஃபைலையே பார்த்துக்கிட்டு இருக்கோமே. ஓய்வு வேண்டாமா?" என்றான் சலிப்புடன்.

நான் சிரித்தேன். "நல்லா இருக்குடா நீ பேசறது. உனக்கொரு நியாயம். உன் பிள்ளைக்கு ஒரு நியாயமா? உன்னை மாதிரிதான் அவனும் ஏழு எட்டு மணி நேரம் ஸ்கூலுல இருந்துட்டு வரான். இந்தக் காலத்து பசங்க டீ.வி., கம்ப்யூட்டர், வீடியோ கேம்னு அறைக்குள்ளேயே அடைபட்டு இருக்கிறதை விட்டு வெளியே காற்றோட்டமா நாலு பேரோடு சேர்ந்து விளையாடறதே பெரிய விஷயம். அதை ஒரு இரண்டு மணி நேரம் செய்தா என்ன? அவங்களுக்குன்னும் ஒரு உலகம் இருக்கு. அதுக்குள்ளே தலையை விட்டு அத்துமீறி நுழைய நமக்கு உரிமை இல்லை. புரிஞ்சுக்கிட்டா சரி!" என்று கூறிவிட்டு விலகினேன்.

அங்கே ஒரு அசாத்திய மௌனம் நிலவியது. அந்த மௌனம் நாளை ரஞ்சித் விளையாடச் செல்லும்போது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும். ●

பரபரப்பான விற்பனையில்....

தீபாவளி சிறப்பிதழில் 20 ரூபாய் மதிப்புள்ள அணையாவிளக்கு எனும் நந்தா விளக்கு அன்பளிப்பாக வழங்கினோம். பித்தளையில் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான அந்த விளக்கின் வடிவம் மற்றும் அதன் தெய்வீக பலன் காரணமாக மீண்டும் அந்த விளக்கை 'ஓம்' இதழோடு வழங்க வேண்டும் என்று ஏராளமான வாசக அன்பர்கள் கேட்டுக்கொண்டதால், ஒளிதேவனாம் சூரியனைக் கொண்டாடும் பொங்கல் திருநாள் சிறப்பிதழோடு

ஆயுள் பலம் தரும்

நந்தா விளக்கு

(20 ரூபாய் மதிப்புள்ளது)

காரிய சித்தி தரும்

ட்ராகன் ஸ்டிக்கர்

செல்வம் தரும்

சீன லட்சுமி

வண்ணப் படம்

ஏராளமான ஆலய- ஆன்மிக சிறப்புக் கட்டுரைகள்- அதிக பக்கங்கள்!

ஓம்

சரவணபவ

05-01-2002
பொங்கல்
சிறப்பிதழில்....



விவரங்களுக்கு: சாருப்பிரபா பப்ளிகேஷன்ஸ் , 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.



சிவகாமியின் சபதம்

நாற்பத்து ஆறாம் அத்தியாயம்

புலிகேசியின் காதல்

வறண்ட மலைப் பிரதேசங்களையும் அடர்ந்த வனப் பிரதேசங்களையும் நீர் வற்றி, வெண் மணல் பரந்த நதிகளையும் கிளி கொஞ்சும் மாந்தோப்புகள் சூழ்ந்த அழகிய கிராமங்களையும் கடந்து, வஜ்ரபாஹுவும் பரஞ்சோதியும் இடைவிடாத பிரயாணம் செய்துகொண்டு போனார்கள்.

சில சமயம், வஜ்ரபாஹு, வீர ரஸம் செறிந்த பாரத யுத்தக் கதைகளைப் பரஞ்சோதிக்குக் கூறுவான். அர்ச்சுனனுடைய வில் தொழில் திறன்களையும், அபிமன்யுவின் அசகாய சூரத்தனத்தையும், பீமனுடைய கதாயுதம் நிகழ்த்திய விந்தைகளையும் பற்றி, வஜ்ரபாஹு சொல்லும்போதெல்லாம், பரஞ்சோதிக்கு ரோமாஞ்சனம் உண்டாகும். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் தானும் பாண்டவர்களின் கட்சியில் நின்று, வீரப் போர் செய்வதாக எண்ணிக் கொள்வான். அவனையறியாமலே அவனுடைய கைகள், வில்லை வளைத்து நாணேற்றும்; பகைவர் மீது வேலை வீசும்; வாளைச் சக்கராகாரமாய்ச் சுழற்றும்.

இன்னும் சில சமயம், வஜ்ரபாஹு, ஆழ்ந்து யோசனை செய்யத் தொடங்கி விடுவான். அப்போது பரஞ்சோதி கேட்கும் கேள்விகளுக்கு, அவன் விடை சொல்ல மாட்டான். மேடு, பள்ளம், காடு, தண்ணீர் என்று பாராமல், குதிரையை நாலு கால்

அமரர் கல்கி

பாய்ச்சலில் விடுவான். அவன் பின்னோடு, பரஞ்சோதி குதிரையைச் செலுத்திக் கொண்டு செல்வதே, பெரும் பிரயத்தனமாயிருக்கும்.

இன்னும் சிலசமயம், வஜ்ரபாஹு, வாதாபி சைனியத்தின் படையெடுப்பைப் பற்றியும் பல்லவ ராஜ்யத்துக்கு வந்திருக்கும் பேரபாயத்தைப் பற்றியும் பேசுவான். அப்போதெல்லாம், அவனுடைய தொனியில், கவலை நிறைந்திருக்கும். அமைதி குடி கொண்ட, அழகிய கிராமங்களின் ஓரமாக அவர்கள் போகும்போது, "ஆஹா! இந்தக் கிராமங்களுக்கெல்லாம் இன்னும் கொஞ்ச நாளில் என்ன கதி நேரப் போகிறதோ, தெரியவில்லையே?" என்று சொல்லுவான்.

நீண்ட கிளைகளை நாலாபுறமும் பரப்பிக் கொண்டு, குளிர்ந்த நிழல் தந்து நின்ற விசாலமான ஆலமரங்களையும், பசுமையான தென்னந் தோப்புக்களையும் பார்க்கும்போதெல்லாம், வஜ்ரபாஹு பெருமூச்சு விடுவான். "மறுபடியும் நாம் இந்தப் பக்கம் வரும்போது, கண் குளிரும் இந்தப் பசுமையைக் காண்போமா?" என்பான்.

இந்த அதிசயமான கவலைக்குக் காரணம் என்னவென்று, பரஞ்சோதி வற்புறுத்திக் கேட்டபோது, வஜ்ர பாஹு கூறினான்: "அப்பனே! நீ அந்த வாதாபி சைனியத்தின் பாசறையை முழுவதும் சுற்றிப் பார்க்கவில்லை. நான் பார்த்தேன்! அந்த பிரம்மாண்டமான யானைப் படையையும் நினைத்து, இந்தப் பசுமையான மரத்தோப்புக்களையும் பார்த்தால், எனக்கு கண்ணில் ஜலம் வருகிறது" என்றான்.

"மனிதர்களுக்காகவும் ஜீவப் பிராணிகளுக்காகவும் இரக்கப்படுகிறவர்களை நான் பார்த்திருக்கிறேன். மரங்களுக்காகக் கண்ணீர் விடுகிறவரை இதுவரையில் கண்டதில்லை" என்றான் பரஞ்சோதி.

"மரங்களுக்கு நான் இரங்கும்போது, மனிதர்களுக்காகவுந்தான் இரங்குகிறேன், தம்பி! மனிதர்களின் வாழ்க்கை பெரிதும் மரங்களைத்தான் பொறுத்திருக்கிறது. பசுமையான மரங்கள் செழித்து வளர்ந்த பிரதேசங்களிலே மழை அதிகமாகப் பெய்யும். மழை பெய்தால் ஏரிகள் நிரம்பும்; நதியில் பிரவாகம் வரும்; நீர்வளம் செழிக்கும்; ஜனங்களும் சுபிட்சமாய் வாழ்வார்கள். ஒரு பிரதேசத்திலுள்ள மரங்களையெல்லாம் அழித்துவிட்டால், அங்கே மழை குன்றும்; கொஞ்ச நாளில் கொடிய பஞ்சம் தோன்றும். ஆனால், காவேரி நதி பாயும் சோழ வள நாட்டில் பிறந்து வளர்ந்த உனக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது?" என்றான் வஜ்ர பாஹு.

"உண்மைதான், ஐயா! பசுமையான மரங்களின் முக்கியத்தை இவ்வளவு தூரம் நான் இதற்கு முன் உணர்ந்தது கிடையாது. ஆனால் நீங்கள் சொல்வதற்கும் வாதாபி சைனியத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"ஒரு யானை ஒரு நாளில் எவ்வளவு ஆகாரம் சாப்பிடும், தெரியுமா?"

"தெரியாது, ஐயா!"

"ஆறு மரக்கால் அரிசி, ஒன்பது தார் வாழைப்பழம், இருபத்தைந்து தேங்காய், ஓர் ஆலமரத்தில் பாதி – இவ்வளவையும் சாப்பிட்ட பிறகு யானையின் பசி அடங்காது!"

"அம்மம்மா!" என்றான் பரஞ்சோதி.

"இவ்வளவுக்கும் மேலே, யானைப் பாகனுக்கும் அதன் வயிற்றில் இடம் இருக்கும்! ஆனால், யானைகள், சைவ விரதங் கொண்டவையாகையால், யானைப் பாகனைச் சாப்பிடுவதில்லை!"

பரஞ்சோதி சிரித்துவிட்டு, "வாதா

பிப் படையில் அப்படி எத்தனை யானைகள் இருக்கின்றன?'' என்று கேட்டான்.

''பதினையாயிரம் யானைகள், அப்பனே! பதினையாயிரம் யானைகள்! இவ்வளவு யானைகளும் ஒரு தடவை காஞ்சிநகர் வரையில் வந்து விட்டுத் திரும்பினால் போதும்! அவை வந்து போன வழியெல்லாம் பசுமையென்பதே இல்லாமல், பாலை வனமாய்ப் போய் விடும்.''

''காஞ்சி நகரம் வரையில், வாதாபி சைனியம் வந்துவிடும் என்று, அடிக்கடி சொல்கிறீர்களே, அது ஏன்?''

''பதினையாயிரம் யானைகளையும் ஐந்து லட்சம் காலாட்படைகளையும் யாரால் தடுத்து நிறுத்த முடியும். தம்பி? கடவுளே பார்த்து நிறுத்தினால் தான் நிறுத்தியது!''

''காஞ்சிக்கோட்டையை ஏன் அவ்வளவு பத்திரப்படுத்தினார்கள் என்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது'' என்று பரஞ்சோதி சொன்னதைக் கேட்டு, வஜ்ரபாஹு ஏளனக் குரலில் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள், ஐயா?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''காஞ்சிக் கோட்டையை, ரொம்பவும் பத்திரப்படுத்தி இருப்பதாகத் தான், ஒருகாலத்தில் நான்கூட நினைத்தேன். ஆனால் அந்த எண்ணம் எவ்வளவு தவறு என்று, இப்போது தெரிகிறது.''

''ஏன்? கோட்டைக்குப் பத்திரம் போதாதா?'' என்று பரஞ்சோதி கேட்டான். இரகசியச் சுரங்க வழியாகத் தன்னை நாகநந்தி வெளியேற்றியது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

''வாதாபி யானைகள் சாராயத்தைக் குடித்துவிட்டு வந்து காஞ்சிக் கோட்டையின் கதவுகளை மோதும் போது கோட்டைக் கதவுகள் எப்படி நொறுங்கிச் சின்னாபின்னமாகப் போகின்றன என்பதை நினைத்தால் சிரிப்பு வருகிறது'' என்றான் வஜ்ரபாஹு.

இதென்ன விந்தை? யானைகள் சாராயம் குடிக்குமா என்ன?''

''யானைகள் மாமிசபக்ஷணிகளாகச் செய்ய முடியவில்லை. ஆனால் மதுபானம் செய்யப் பழக்கியிருக்கிறார்கள். வாதாபி சைனியத்தில் ஆயிரக்கணக்கான வண்டிகளில் பெரிய பெரிய சால்களில் சாராயம் கொண்டு வருகிறார்கள். யானைகளைச் சாராயம் குடிக்கச் செய்து கோட்டைக்கதவுகளை முட்டச் செய்யப் போகிறார்களாம்!''

''இது என்ன அநாகரிக யுத்தம்?'' என்றான் பரஞ்சோதி.

''யுத்தமே அநாகரிகந்தான், தம்பி!'' என்றான் வஜ்ரபாஹு.

''எல்லா யுத்தத்தையும் அநாகரிக யுத்தம் என்று சொல்ல முடியுமா? நாட்டைக் காப்பதற்காக மகேந்திர சக்கரவர்த்தி நடத்தும் யுத்தம் அநாகரிக யுத்தமா?'' என்றான் பரஞ்சோதி.

''மகேந்திர சக்கரவர்த்தியின் பெயரை மட்டும் என் காது கேட்கச் சொல்லாதே! தேசப் பாதுகாப்பை அசட்டை செய்துவிட்டு ஆடலிலும் பாடலிலும் அவர் காலங் கழித்ததை நினைத்தால் எனக்குக் கோபம் கோபமாய் வருகிறது!''


பரஞ்சோதி வஜ்ரபாஹுவின் முகத்தைச் சற்றுக் கவனமாய்ப் பார்த்துவிட்டு, ''அப்படியானால், காஞ்சிக் கோட்டையைப் பாதுகாக்கவே முடியாது என்று நினைக்கிறீர்களா?'' என்றான்.


''வாதாபி சைனியம் நேரே காஞ்சிக்கு வந்து சேர்ந்தால் காஞ்சிக் கோட்டையைக் கடவுளால்கூடக் காப்பாற்ற முடியாது!''

''அப்படி வந்து சேராதல்லவா?''

''அதன் பொருட்டுத்தான் ஓட

முயன்றவன் முதுகில் வேலை எறிந்து கொன்றேன். நாகநந்தி கொடுத்த தாகப் புலிகேசியிடம் ஓர் ஒலை கொடுத்திருக்கிறேன். அதைப் பற்றிப் புலிகேசிக்குச் சந்தேகம்





தோன்றாதிருந்தால் காஞ்சியைத் தப்புவிக்கலாம்.''

''நீங்கள் கொடுத்த ஓலையில் என்ன எழுதியிருந்தது, ஐயா?''

''தம்பி! அந்த விஷயத்தைப் பற்றி நீ கேளாமலிருந்தால் நான் பொய் சொல்ல வேண்டிய அவசியமும் ஏற்படாது!'' என்று முன்னொரு தரம் பரஞ்சோதி கூறிய வார்த்தைகளை வஜ்ரபாஹு இப்போது திருப்பிக் கூறினான்.

பரஞ்சோதி சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு, ''ஐயா! நீங்கள் கொடுத்த ஓலையின் பலனாகச் சளுக்க சைனியம் காஞ்சிக்கு வராமல் வாதாபிக்கே திரும்பிப் போய் விடுமா?'' என்று கேட்டான்.

''அப்பனே! காஞ்சி என்ற பெயரைக் கேட்டதும் புலிகேசியின் கண்



களில் தோன்றிய ஆசை வெறியை நீ பார்த்திருந்தாயானால் இவ்விதம் கேட்டிருக்க மாட்டாய். என்னை அச்சுத விக்கிராந்தனுடைய சந்ததியில் வந்தவனாக நினைத்துக் கொண்ட புலிகேசி, தன்னுடைய மனத்தை நன்றாகத் திறந்து காட்டினான்.

"அது யார் அச்சுத விக்கிராந்தன்?" என்று பரஞ்சோதி குறுக்கிட்டுக் கேட்டான். எந்த விஷயத்தையும் ஐயந்திரிபறத் தெரிந்து கொள்வதில் அவனுக்கு அடங்காத ஆசை ஏற்பட்டிருந்தது.

"பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் மத்தியில் இருநூறு வருஷங்களுக்கு முன் தனி அரசு செலுத்திய அச்சுதக் களப்பாளனைப் பற்றி நீ கேட்டதில்லையா? அந்த அச்சுதக் களப்பாளனின் வம்சம் நான் என்றதும் புலிகேசி நம்பிவிட்டான். நீ காஞ்சி நகர் பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டான். 'பார்த்திருக்கிறேன்' என்றேன். காஞ்சிநகர்க் காட்சிகளை விவரமாக வர்ணிக்கும்படி சொன்னான். நான் அவ்விதமே காஞ்சியை வர்ணித்தபோது, புலிகேசியின் முகத்தில் தோன்றிய பரபரப்பைப் பார்க்க வேணுமே? எலியைப் பார்த்த பூனையின் கண்களில் தோன்றும் ஆசை வெறி புலிகேசியின் கண்களிலும் அப்போது தோன்றிற்று. இராவணன் சீதையைப் பார்த்து என்ன சொன்னான் தெரியுமா தம்பி! 'என்னிடம் நீ ஆசை கொள்கிறாயா? அல்லது உன்னைக் காலைப் போஜனத்துக்குப் பலகாரமாகச் செய்து சாப்பிட்டு விடட்டுமா?' என்றானாம். அதுபோல புலிகேசி காஞ்சி நகரைக் கட்டி ஆள ஆசைப்பட்டாலும் பாடுவான்; அல்லது அதை அக்கினிக்கு இரையாக்க விரும்பினாலும் விரும்புவான். புலிகேசியின் காதல் விபத்திலிருந்து காஞ்சிமா தேவியைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று வஜ்ர பாஹு கூறிவிட்டு, நெடிய மௌனத்தில் ஆழ்ந்தான்.

நாற்பத்து ஏழாம் அத்தியாயம்

பிரயாண முடிவு

சூரியாஸ்தமன சமயத்தில் ஒரு மலைப் பாதையின் முடுக்குத் திரும்பியதும் பல்லவ சைனியம் தண்டு இறங்கியிருக்கும் பாசறை தென்பட்டது. பல்லவ சைனியத்தைப் பார்த்தவுடனேதான் வஜ்ர பாஹுவின் கவலைக்கு எவ்வளவு

தூரம் காரணம் உண்டு என்பதைப் பரஞ்சோதி உணர்ந்தான்.

வாதாபி சைனியத்துக்கும் பல்லவ சைனியத்துக்கும் அவ்வளவு மலைக்கும் மடுவுக்குமான தாரதம்மியம் இருந்தது.

"தம்பி? பார்த்தாயா?" என்றான் வஜ்ரபாஹு.

"பார்த்தேன், ஐயா!"

"இன்னமும் நீ நம்புகிறாயா, பல்லவ சைனியம் ஜயிக்கும் என்று?"

"கட்டாயம் ஜயிக்கும், ஐயா! சந்தேகமே இல்லை!" என்று பரஞ்சோதி அழுத்தந்திருத்தமாகச் சொன்னான்.

"அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாயே, எதனால் சொல்கிறாய்?"

"பல்லவ சைனியத்தின் பட்சத்தில் தர்ம பலம் இருக்கிறது. அதோடுகூட மகேந்திர சக்கரவர்த்தியும் இருக்கிறார்!"

"ஏது ஏது, மகேந்திர சக்கரவர்த்தியிடம் உனக்கு அபார நம்பிக்கை இருக்கிறதே?" என்றான் வஜ்ரபாஹு.

"ஆம், ஐயா!"

"பல்லவ சக்கரவர்த்தியை நீ பார்த்திருக்கிறாயா, தம்பி?"

"முன்னம் இரண்டு தடவை பார்த்திருக்கிறேன். ஆயனச் சிற்பி வீட்டில் புத்த விக்கிரகத்துக்குப் பின்னால் நான் ஒளிந்திருந்தபோது ஒரு தடவை பார்த்தேன். இன்னொரு தடவை காஞ்சியில் நடு ராத்திரியில் மாறு வேடத்தில் பார்த்தேன். அப்போது சக்கரவர்த்தி கிட்டத்தட்டத் தங்களைப் போலத்தான் இருந்தார்! தங்களைப் போலவே பெரிய மீசையும் வைத்திருந்தார்."

"ஆமாம்! நான்கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன்; மகேந்திர சக்கரவர்த்தி சிலசமயம் மாறுவேடம் பூண்டு ஊர் சுற்றுவது உண்டு என்று. சக்கரவர்த்தியை நான் என்றும், என்னைச் சக்கரவர்த்தி என்றுங்கூடச் சிலர் சந்தேகப்பட்டிருக்கிறார்கள்."

"எனக்கு அம்மாதிரியெல்லாம் சந்தேகம் கிடையாது, ஐயா!"

"அது போகட்டும். வாதாபி சைனியம், பல்லவ சைனியம் இரண்டையும் நீ பார்த்திருக்கிறாய். தம்பி! இன்னமும் பல்லவ சைனியத்தில் சேருவதற்கு இஷ்டப்படுகிறாயா?"

"இஷ்டப்படுவது மட்டுமல்ல; பல்லவ சைனியத்திலே சேரத் துடித்துக்கொண்டிருக்கிறேன். இங்கே நாம் பேசிக் கொண்டு நிற்கும் நேரமெல்லாம் வீண் போவதாகவே நினைக்கிறேன்."

"அப்படியானால், எனக்கு விடை கொடு!"

"என்ன? என்னை இங்கே விட்டு விட்டா போகிறீர்கள்?"

"ஆமாம்; நான் முதலில் போய்ப் பல்லவ சக்கரவர்த்தியைப் பார்த்து உன்னைப் பற்றி சொல்கிறேன். அவர் இஷ்டப்பட்டால் உன்னை அழைத்து வரச் செய்வார். அதுவரையில் நீ பாசறைக்கு வெளியிலே தான் காத்திருக்க வேண்டும்.

"சக்கரவர்த்தி பாசறையில் இருக்கிறாரா? காஞ்சியிலிருந்து இளம்பியவரைப் பற்றி அப்புறம் செய்தியே இல்லை என்றீர்களே!"

"இதற்குள்ளே ஒருகால் வந்திருக்கலாமல்லவா?"

"ஐயா! சக்கரவர்த்தியை நான் ஒரு தடவை நேரில் பார்க்க விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்!" என்று பரஞ்சோதி ஆர்வத்துடன் சொன்னான்.

"எதற்காகச் சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு அவ்வளவு ஆவலுடன் இருக்கிறாய்?" என்றான் வஜ்ரபாஹு.

"காஞ்சிக் கோட்டையைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்புவிக்கும்படி கேட்டுக் கொள்வதற்குத்



தான்!''

''ஓகோ! மதயானையின் மீது வேல் எறிந்த வீரன் அல்லவா நீ? சிவகாமி சுந்தரியைக் காப்பாற்றியது போல் காஞ்சி சுந்தரியையும் காப்பாற்ற விரும்புகிறாய் போலிருக்கிறது! உன்னைப் போன்ற மகா வீரனை, தாளம் போட்டுக் கொண்டு பாசுரம் பாடுவதற்கும் கல்லுளியை வைத்துக் கொண்டு கல்லைச் செதுக்குவதற்கும் உன் மாமா அனுப்பி வைத்தாரே! அது எவ்வளவு பெருந் தவறு?''



''சிற்பக்கலை தெய்வீகக் கலை, ஐயா!''

''போதும், போதும்! அப்படியெல்லாம் சொல்லித்தான் மகேந்திர சக்கரவர்த்தி பல்லவ சாம்ராஜ்யத்தை இந்தக் கதிக்கு கொண்டு வந்து விட்டார். சக்கரவர்த்தியிடம் நானும் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளப் போகிறேன். 'மலையைக் குடைவது, பாறையைச் செதுக்குவது முதலிய காரியங்களை எல்லாம் நிறுத்துங்கள். பல்லவ ராஜ்யத்திலுள்ள அவ்வளவு சிற்பி

அருள்வாக்கு

இது சின்ன பல்பு. அது பெரிய பல்பு. அது நீல விளக்கு. இது பச்சை விளக்கு. விளக்கில் அநேக உருவங்கள் இருக்கின்றன. இருந்தாலும், அவை எல்லாவற்றுக்குள்ளும் இருக்கும் சக்தி மின்சார சக்தி ஒன்றுதான். எங்கும் வியாபித்திருக்கிற மின் சக்திதான் இங்கே இந்த விளக்குக்குள் இருந்து பிரகாசிக்கச் செய்கிறது. Fan (விசிறி)க்குள் இருந்து சுற்ற வைக்கிறது. இந்த எல்லாக் காரியங்களுக்கும் மூலமான சக்தி ஒன்று. அது அகண்டமானது. அதுவே ஒயர் (கம்பி)க்குள் வருகிறபோது கண்டமாகிறது. இயற்கையில் பளீர் பளீர் என்று மின்னும்போது, ஜலம் அருவியாகக் கொட்டும்போது, அங்கெல்லாம் இதுதானே வெளிப்பட வந்துவிடுகிறது. இந்த மாதிரி உனக்குள்ளேயே இருக்கிற பரம ஸத்யமான தத்வம் உனக்கு flash ஆகும்படி (பளிச்சிடும்படியாக) பண்ணிக்கொள். கர்மானுஷ்டானத்தில் ஆரம்பித்து, யக்ஞம், தேவதா உபாஸனை எல்லாம் பண்ண வைத்து, மஹா வாக்யத் தியானத்தில் முடிகிற வேத வேதாந்த சாதனங்களெல்லாம் இதற்குத்தான்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

களையும் ஏவி ஒவ்வொரு ஊரிலும் ஒரு பாரத மண்டபம் கட்டச் சொல்லுங்கள். அந்த மண்டபங்களில் ஒவ்வொரு நாளும் ஜனங்கள் கூடிக்கேட்கும்படியாக மகாபாரதம் வாசிக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று கேட்டுக் கொள்ளப் போகிறேன்.''

"இதெல்லாம் எதற்காக?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

"இந்த யுத்தத்தை மகேந்திர சக்கரவர்த்தியாலும் பல்லவ வீரர்களாலும் மட்டும் ஜயித்து விட முடியாது. பல்லவ நாட்டிலுள்ள மக்கள் எல்லாரும் வீரமும் பௌருஷமும் அடைய வேண்டும். உயிரைத் திரணமாக மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.''

வஜ்ரபாஹு பரஞ்சோதியைப் பிரிந்து செல்வதற்கு முன்னால் அவனை அன்புடன் தழுவிக் கொண்டு, "தம்பி! எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனுக்கும் உன்னுடைய வயதுதான். நீங்கள் இருவரும் சேர்ந்தீர்களானால் எவ்வளவோ அரும் பெரும் காரியங்கள் செய்யலாம்!'' என்றான்.

பரஞ்சோதி, நாத் தழுதழுக்க, "ஐயா! சிறு பிராயத்தில் நான் என் தந்தையை இழந்தேன்! என்னையும் உங்கள் புதல்வனாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கூறினான்.

வீரன் வஜ்ரபாஹு பாசறைக்குள் புகுந்து சென்ற பிறகு பரஞ்சோதிக்கு ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகத் தோன்றியது. சக்கரவர்த்தியிடமிருந்து தன்னை அழைத்து வரும்படி எப்போது ஆக்ஞை வருமென்று அவன் ஆவலுடன் காத்திருந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பல்லவ சைனியத்தின் பாசறையில் ஒரு பெரிய கலகலப்பு ஏற்பட்டது. திடீரென்று பல ஆயிரம் வீரர்களின் குரல்கள் எழுப்பிய ஜயகோஷம் வானவெளியையெல்லாம் நிரப்பி மலை அடிவாரம் வரை சென்று எதிரொலி செய்தது. சங்கங்களும் முரசங்களும் பேரிகைகளும் சேர்ந்து முழங்கிய பேரொலி வான முகடு வரையில் சென்று முட்டித் திரும்பியது.

பாசறையின் வாசலில் நின்று காவல் புரிந்த வீரர்களைப் பரஞ்சோதி தயக்கத்துடன் நெருங்கி, பாசறைக்குள்ளே மேற்கூறிய கோலாகலத்தின் காரணம் என்னவென்று கேட்டான்.

அதற்கு, "மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி பாசறைக்கு வந்து விட்டார்!'' என்று குதூகலமான மறுமொழி கிடைத்தது.

(முதல் பாகம் முற்றும்)

> “முஸ்லிம்களுக்கு இடையே இருக்கும் பலவகைப் பிரிவுகள், அவர்களுக்குள்ளேயே பயங்கரவாதம் உருவாகக் காரணமாயின. சவுதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகள் தங்கள் தங்கள் இஸ்லாமியக் கோட்பாடுகளைத் திணிக்கப் போட்டி போட்டன. இதன் காரணமாகவும் ஒருவகை முஸ்லிம் தீவிரவாதம் உருவாயிற்று.”



“தீவிரவாதம் என்றாலே இஸ்லாமிய தீவிரவாதம்தான் என்கிற நிலைமை தோன்றியது 1980 ஆரம்பத்தில்” என்கிறார் ஹார்வர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹன்ட்டிங்டன். பயங்கரவாதம், கொரில்லா போர், இருநாடுகளுக்கு இடையேயான சண்டைகள் என்று இந்தத் தீவிரவாதம் பல முகமூடிகளை அணிந்து கொள்ளுகிறது.

எண்பதில் ஈரான் மீது படையெடுத்தது ஈராக். 90ல் சதாம் உசேன் குவெய்த் மீது படையெடுத்தார். இதே தொண்ணூறுகளில் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் போஸ்னியா, கொசாவோ, மாசிடோனியா, செசன்யா, அசர்பய்ஜான், தஜிகிஸ்தான், காஷ்மீர், இந்தியா, பிலிப்பைன்ஸ், சூடான், நைஜீரியா ஆகிய இடங்களில் மோதல்கள் வெடிக்கத் தொடங்கின. ஆப்கானிஸ்தானிலுள்ள முஜாஹிதீன் போராளிகள்தாம் இந்தப பயங்கரவாதத்தில் பல இடங்களில் பங்கு கொண்டார்கள்; இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களையும் உலகெங்கும் பல நாடுகளில் அமைத்தார்கள்.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் இந்த இனப் போராட்டம் முஸ்லிம் பிரிவுகளுக்குள்ளேயே நிகழ்ந்தது முஸ்லிம்களுக்கும் – முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் என்று பிறகு விரிவடைந்தது.

“1983க்கும் 2000க்கும் இடையே நடைபெற்ற சர்வதேச பயங்கரவாத நிகழ்ச்சிகள், 16ல் 12க்குக் காரணமானவர்கள் முஸ்லிம்கள்தான்” என்கிறது ‘த எகானமிஸ்ட்’ கணிப்பு.



"அமெரிக்காவின் பட்டியலிலுள்ள ஏழு பயங்கரவாத நாடுகளுள், ஐந்து முஸ்லிம் நாடுகள்! 1980 லிருந்து 1995 வரையிலான 15 வருடங்களில்

குறிப்பிட்டாலும்.

இது ஒன்றும் புதிது அல்ல; பழைய போராட்டங்களின் தொடர்ச்சிதான். முதலில் இந்த இஸ்லாமியப் பயங்கரவாதி களின் செயல்களால் நூற்றுக்கணக்கில் உயிரிழந்து வந்தார்கள். செப்.11அன்று இது

பயங்கரவாதிகள் என்றால் முஸ்லிம்கள் மட்டும்தானா?

அமெரிக்க இராணுவம் 17 தடவை முஸ்லிம் களுடன் மோத வேண்டியிருந்தது.

"2000ல் மட்டும் 32 ஆயுதப் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. இதில் மூன்றில் இரண்டு பங்கு போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் முஸ்லிம்கள். இத்தனைக்கும் உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர்தான் முஸ்லிம்கள்!" என்கிறது இன்டர் நேஷனல் இன்ஸ்டிட்யூட் அஃப் ஸ்ட்ராடஜிக் ஸ்டடீஸ் அமைப்பின் ஆய்வு ஒன்று.

செப்டெம்பர் 11ல் அமெரிக்காவில் நடந்த தாக்குதல்களைப் 'புதிது' என்று அதிகாரிகள் குறிப்பிட்டாலும்...

ஆயிரக் கணக்காக மாறிற்று. அவ்வளவுதான்.

1993க்குப் பிறகு அமெரிக்கா மீதான அல்லது அமெரிக்க அமைப்புகள் மீதான தாக்குதல்களுக்கு முக்கியப் பொறுப்பு ஒசாமா பின்லாடன்தான். செப்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு, ஒசாமாவின் சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் 40 நாடுகளில் இருப்பதும், துல்லியமாகத் திட்டமிட்டுத் தாக்கும் வசதிகள் யாவும் அவற்றிடம் இருப்பதும் தெரியவந்தது. தற்போதைய இஸ்லாமிய தீவிரவாதப் போராட்டங்களுக்கு அரசியல்தான் காரணம்; ஏழாம் நூற்றாண்டு மதக் கோட்பாடுகள் அல்ல.

இதற்கு நான்கு காரணங்களைச் சொல்லுகிறார் ஹன்ட்டிங்டன்:

முதலாவது, கடந்த பல வருடங்களாக, சமூக, கலாசார, அரசியல் நிகழ்வுகள் உலகெங்குமுள்ள இஸ்லாமிய சமூகத்தவரின் மனச்சாட்சியைத் தூண்டி, நவீனமயமாக்கல், உலகமயமாக்கல் போன்ற முற்போக்குச் சித்தாந்தங்களின் வழியில் சிந்திக்க வைத்தன. இதன் காரணமாக, பல நகரங்களில் முஸ்லிம்களுக்குச் சமூக அளவில் மேம்பாட்டுக்கான ஆதரவு அளித்து, கல்வி - சுகாதாரம்-வேலை வாய்ப்பு ஆகியவற்றுக்கு உதவ சில குழுக்கள் முன் வந்தன. ஆனால் அதே சமயம், இதனால் பயன் பெற இயலாதவர்கள் தீவிரவாதத்தில் நம்பிக்கை கொண்டு, சுலபமான வழியாக, முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எதிரான போராட்டங்களில் குதித்தனர்.

இரண்டாவது, பொருளாதாரத்திலும், அதிகாரத்திலும், கலாசாரத்திலும் மேற்கத்திய நாடுகள் வெளிப்படுத்திய செழுமை, முஸ்லிம்களுக்குக் குறிப்பாக – அராபியர்களுக்குப் பொறாமை உண்டாக்கியது என்றால், மேற்கத்திய உலகின் சட்டாம்பிள்ளைத்தனம் எரிச்சலை உண்டாக்கியது.

மூன்றாவது, முஸ்லிம்களுக்கு இடையே இருக்கும் பலவகைப் பிரிவுகள், அவர்களுக்குள்ளேயே பயங்கரவாதம் உருவாகக் காரணமாயின. சவுதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகள் தங்கள் தங்கள் இஸ்லாமியக் கோட்பாடுகளைத் திணிக்கப் போட்டி போட்டன. இதன் காரணமாகவும் ஒருவகை முஸ்லீம் தீவிரவாதம் உருவாயிற்று.

நான்காவது, படித்து வேலை கிட்டாது போன 16முதல் 30 வயது இளைஞர்கள் பெருகி, மேற்கத்திய நாடுகளுக்குக் குடி பெயர்ந்து, அங்குள்ள இஸ்லாமிய கொரில்லா போராளிகளுடன் சேர்ந்து கொண்டார்கள்.

இவையே முஸ்லிம் தீவிரவாதம் பெருகக் காரணங்கள். இதுவரை இவை சில குறிப்பிட்ட வட்டங்களுக்குள் மட்டுமே பிரச்னை உண்டாக்கி வந்தன. இது விசுவரூபம் எடுத்து, இரண்டு நாகரிகங்களுக்கிடையேயான போராக மாறி, இஸ்லாமுக்கு எதிராக மேற்கத்திய உலகம் என்ற நிலைமையை உருவாக்கி விடுமா...?

"துரதிர்ஷ்டவசமாக இதுதான் ஒசாமா பின் லாடனின் விருப்பமாக இருக்கிறது" என்கிறார் ஹன்ட்டிங்டன். அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப் போர் என்று ஓசாமா பிரகடனம் செய்தார். முஸ்லிம்களை இதற்காக ஒன்று திரட்டி வருகிறார். அவர் இதில் முழு வெற்றியடைய முடியாமல் போனதற்கு, இஸ்லாமில் இருக்கும் பல பிரிவுகளே காரணம். அமெரிக்கா ஒட்டு மொத்தமாக 'தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டம்' என்று அறிவித்தது. அதன் முக்கிய எதிரி அல்-கய்தா. மற்ற நாடுகளும் தங்கள் எல்லையை அடுத்த தீவிரவாதிகளுடன் போராடி வருகின்றன.

அமெரிக்காவின் இந்தத் தீவிரவாத எதிர்ப்புக்குத் துணையாக பல மேற்கத்திய நாடுகள் இருந்தன. பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி குறிப்பிடத்தக்கவை. (லீ மாண்ட் பிரெஞ்சு நாளிதழ், "நாங்களும் அமெரிக்கர்கள்தான்" என்றே முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டது!)

(முஸ்லிம் தீவிரவாதம் இப்படியே மூர்க்கத்தனம் பெறுமா? சில தலைமுறைகள் மாறி, இஸ்லாமிய மனநிலை மாற்றமடைந்து, ஈரான் போல, அதன் தீவிரம் குறைந்து போகலாம். இஸ்ரேல் மீதான அமெரிக்கக் கொள்கை மாறும்போது, முஸ்லிம்களின் மேற்கத்திய வெறுப்பு மட்டுப்படும். ஆனால் முஸ்லிம் நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் முன்னேற்றம் மிக அவசியம்.

— சித்தார்த,

(நன்றி: நியூஸ்வீக்)

"கார், பங்களான்னு இப்படி ஒரு வசதியான வாழ்க்கையை உங்க கடின உழைப்பால் அடைஞ்சிருக்கீங்களே, ரொம்ப சந்தோஷம்..."

"உழைப்பாவது, மண்ணாவது... எல்லாம் என் மாமனார்கிட்ட கறந்ததுதான்!"

— விசு



தேன்கரும்பு

வட்ட மேஜை

✉ உண்மை, உழைப்பு, நீதி, நியாயம், தர்மம் போன்றவற்றில் இன்னும் நம்பிக்கைக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இன்றைய உலக நடப்பைக் கண்டு ஆதங்கத்துடன் சொல்ல நினைப்பதை அப்படியே வாணவராயர் பேச்சின் ஒவ்வொரு வார்த்தையும் வெளிப்படுத்தியிருந்தது. படிக்கும்போதே சிலிர்க்க வைத்தது.

கபிஸ்தலம், எஸ்.இராஜேந்திரன்

✉ குறும்பு ஸ்பெஷலா! குறும்பான பல தகவல்கள் தந்து, இரும்பான இதயங்களைக் கூட அரும்பாக மலரச் செய்து விட்டீரே!

விசலூர், ஜி.ஜி.கிருஷ்ணன்

✉ 'குறள் வழி நடப்பவர்கள்' குல்லூவின் குறும்பு நிறைந்த கார்ட்டூன் நகைச்சுவை அருமையான தேன் கரும்பு!

மதுரை, பி.எம்.வள்ளி

✉ இளி சொல்லிய ஜோசியத்தைவிட, சொல்லாத ஜோதிடம் ரசிக்கும்படி இருந்தது.

திருச்சி, இரா. திலிப்

✉ 'ஐயோ தீவிரவாதி' படிச்சு சிரிச்சு, சிரிச்சு வயிற்றுவலியே வந்திடுச்சு. சிந்திக்க வைத்த சிறுகதையும்கூட.

திண்டுக்கல், செ.ரா.ரவி

✉ ஆண்டிப்பட்டியில் ஜெ.வை ஜெயிக்க 'பொது வேட்பாளர்' தான் சரி என்ற தலையங்கம் அட்சர லட்சம் பெறும். ஆயினும், இந்த விஷயத்தில் தமிழக எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமையை உருவாக்குவது, வீரப்பனை அதிரடிப் படை பிடிப்பதற்குச் சமமான விஷயமாயிற்றே!

பெரியகுளம், ஆர்.வேணுகோபால்

✉ பதினான்கு வாரங்களாக டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார் புதுயுக யோகா தலைப்பில் ஆசனங்கள் பலவற்றைப் படத்துடன் விளக்கமாகக் கூறியிருந்தது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. யோகாசனங்களால் கிடைக்கும் பலன்களைப் பார்த்தால் ஒவ்வொருவரும் அவசியம் யோகாசனங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது. எக்கச்சக்கமாக டாக்டர் பீஸ் கொடுப்பது இதனால் மிச்சப்படும் என்பது மட்டும் உறுதி.

மொரட்டுப்பாளையம், விஜயஸ்ரீ இராஜேஸ்வரன்

✉ மலர்ச் செண்டை கையால் பெற்றுக் கொள்ள மறுத்த உமையாள்புரம் சிவராமனின் எண்ணத்திற்கும், அதைக் கையில் வாங்கிப் பெற்றுக் கொண்டு எங்கிருந்தாலும் நன்றாய் இருக்







கட்டும் என வாழ்த்திய முதியவர் ராஜப்பாவின் எண்ணத்திற்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளியிருப்பதை உணர வைத்தது உமது கட்டுரை.

சென்னை, சி.மகேஷ்

✉ புடைவை கட்டுவது பத்தி டியூஷன் எடுக்குமளவுக்குத் தும்புருவுக்கு அனுபவம் ஜாஸ்தியா? கங்காதரனின் பாட்டை விமர்சிக்கிறேன் பேர்வழி என்று, சலவை செய்து வெள்ளாவியில் வைத்துவிட்டாரே!

மயிலாடுதுறை, ஜெ.ரஜினிராம்கி

✉ 'சஸ்பென்ஸ் அம்மா!' கட்டுரை மூலம் மூன்று தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிகள் பற்றிய 'சஸ்பென்'ஸையும் அதிகமாக்கிவிட்டீர்களே!

அரசரடி, நெல்லை வி.சிவா

மூலிகை கேலரி - 2

வல்லாரைக் கீரைக்கு அழகான செல்லப் பெயரை, ரொம்ப பொருத்தமாகச் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். சரஸ்வதி கீரை! பெயருக்கேற்பவே கரித்துண்டு, வாழை மட்டை கேஸ்களை எல்லாம் கற்பூரப்புத்திக் கொள்ளச் செய்கிறது வல்லாரை!

ஞாபக சக்தியைத் தூண்டி, நல்ல அறிவாற்றலோடு விளங்கச் செய்வதால், 'யோஜனவல்லி' என்றும் அழைக்கிறார்கள்.

ஏரி, குளம், வாய்க்கால் போன்ற நீர்ப் பாய்ச்சலான இடங்களில் தளதளவென்று தன்னிச்சையாக சிறு கொடியாக வளரும், இக்கீரையின் வடிவத்தைப் பாருங்களேன்! அப்படியே மனித மூளையின் அமைப்பைக் கொண்டிருக்கிறது.

''வல்லாரையைச் சாப்பிட்டு மூளைக்குப் பலம் சேருங்கப்பா'' என்று இயற்கையே சூட்சுமமாகச் சொல்லியிருப்பது வியக்க வைக்குதா இல்லையா? வைத்திய முறையில் பயன்படும் பச்சிலைகளில் 'மகா ஔடதி' என்ற தகதக கிரீடம் சூட்டப்பட்டிருப்பது வல்லாரைக்கே! இதில் தங்கச் சத்தும், செம்புச் சத்தும் மிக அதிக அளவில் இருப்பதால் உடலில் டபுள் கோட்டிங் இளமைப்பூச்சு ஏறும்.

வல்லாரையைத் தூளாக இடித்து வைத்து, உட்கொண்டால், அந்த வீட்டில் சுகவீனங்கள் முகாமிடுவதில்லை.

சரி, வல்லாரைத் தூளை எப்படிச் செய்வது?

இரும்புச் சட்டியில் ஆழாக்கு பசும் பாலை விட்டு, அந்தச் சட்டியின் மேல் மெல்லிய வலை போன்ற துணியை வேடு கட்டவும். இந்தச் சட்டியை அடுப்பில் வைத்து, துணியின் மீது வல்லாரை இலைகளைப் பரப்பவும். அதன் மீது இன்னொரு சட்டியைக் கவிழ்த்து, இட்லி போல ஆவியில் வேக வைக்கவும். இலைகள் நன்றாக அவிந்ததும், ஒரு தட்டில் எடுத்துப் போட்டு, பரப்பி நிழலில் உலர்த்தவும்.

இந்த இலைகளைப் பொடியாக இடித்து, சலித்து, எடுத்து வைக்கவும். இந்த வல்லாரைத் தூளை மருந்தாகப் பயன்படுத்தலாம். ஒரு டம்பளர் வெதுவெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி வல்லாரைத் தூள், ஒரு தேக்கரண்டி நாட்டுச் சக்கரைக் கலக்கிக் குடிக்க, தீராத மலச்சிக்கல் தீரும். இரவில் சாப்பிட்டுப் படுக்கும்போது இதைக் குடித்துவிட்டு படுத்தால் போதும். மறு நாள் காலையில் மலம் கலபமாகக் கழியும். இது போல ஒரு வாரம் சாப்பிட்டபின் நிறுத்திவிடலாம். மறுபடி மலச்சிக்கல் ஏற்படாது. எப்போதாவது ஏற்பட்டால், மறுபடி ஒரு வாரம் குடிக்கவும். அத்தோடு, மலச்சிக்கலை நீங்கள் மறந்து போவது உறுதி.



ஒரு தேக்கரண்டி வல்லாரைத் தூளுடன், ஒரு தேக்கரண்டிச் சுக்குப்பொடிச் சேர்த்து, தேனில் குழைத்துச் சாப்பிட, வயிற்றுவலி ஜகா வாங்கிக் கொள்ளும்.

நெல்லிக்காய், கிராம்பு, தான்றிக்காய், ஏல அரிசி, ஜாதிப் பத்திரி, கடுக்காய் தூள் இவற்றை உரலில் போட்டு இடித்துப் பொடி செய்து கொள்ளவும். இந்தத் தூளுடன், வல்லாரைத் தூள் சேர்த்து தினமும் ஒரு தேக்கரண்டி வீதம், காலை, மாலை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டு வந்தால், உஷ்ண சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

நல்ல விருந்து சாப்பாடு! பந்திக்கு முந்திக் கொண்டு வயிறு முட்டச் சாப்பிட்டும் ஆயிற்று. ஆனால் வயிறு பாரம், அஜீர்ணம், வாய்வு, ஏப்பம் என தொல்லைகள் இலவச இணைப்பாகத் தொடராமல் இருக்க வேண்டுமென்றால், வல்லாரையைத் தோள் நாட வேண்டும். ஒரு தேக்கரண்டி வல்லா

சரஸ்வதி கீரை!

ராஜம் முரளி

ரைத் தூளுடன், ஒரு தேக்கரண்டி சோம்புத் தூள் சேர்த்துச் சாப்பிட்டுவிடுங்கள். அரை மணி நேரத்தில் வயிறு, பூப்போல இலகுவாகிவிடும். நீங்கள் இன்னொரு விருந்துக்குத் தயாராகலாம்.

தாது விருத்திக்கு வல்லாரை மிகவும் அருமையான மூலிகை. தேனில் கலந்து உண்டு வர, நீர்த்துப் போன தாது கெட்டியாகும். சொரி, சிரங்கு போன்ற சரும நோய்களும் பூரணமாக குணமாகும். வல்லாரைக் கீரையைப் பயத்தம் பருப்போடும், மற்ற பயறு வகைகளுடனும் சமைத்துச் சாப்பிடலாம். இதனால் மூளையின் ஆற்றல் பெருகும். நினைவாற்றல் கூடும்.

வல்லாரை இலையைப் பறித்து, சுத்தம் செய்து நீரில் கழுவி, உரலிவிட்டு, அத்துடன் நாட்டுச் சர்க்கரை, குங்குமப்பூப் போட்டு, பசும்பால் ஊற்றி அரைக்கவும். தினமும் வெறும் வயிற்றில் உண்டு வந்தால், கண்கள் டியூப் லைட் போட்டது போல கவர்ச்சி பெறும்.



முகம் ஒளி பெறும். இளமை நீடிக்கும்.

முத்துப்பல் சிரிப்பு, முல்லைப் பூ விரிப்பு, சோனா அரிசி போன்ற புன்னகை! ஆஹா... இப்படி ஒரு அழகு பெற, வல்லாரையை நம்புவதே சிறப்பு! வல்லாரை இலைகளைப் பற்களின் மீது வைத்து தேய்த்துப் பாருங்கள். பற்களின் மஞ்சள் நிறம், உஜாலாவுக்கு மாறிவிடும்! வல்லாரைக் கீரையை வதக்கி, அதனுடன் ஒரு துண்டு கட்டிப் பெருங்காயம், கொஞ்சம் புளி, ருசிக்கு இந்துப்பு, நான்கு மிளகு, இரண்டு மிளகாய், கொஞ்சம் வெந்தயம் சேர்த்து விழுதாக அரைத்துக் கொள்ளவும். இந்த வல்லாரைக் கீரை துவையல், மோர் சாதத்துக்குத் தொட்டுக் கொண்டால், நாள்பூரா சாப்பிட்ட உணவு நன்றாக செரிக்கும். மோரில் கலக்கிக் குடித்தால், சிறந்த மலமிளக்கியாகச் செயல்படும்.

உங்களுக்கு நாற்பது வயதா? இல்லை... அதற்கும் மேலேயா? நிச்சயமாக உங்கள் முகத்தில் சுருக்கம் விழத் தொடங்கியிருக்கும். ஒரு தேக்கரண்டி வல்லாரைக் கீரைப் பொடியுடன், ஒரு தேக்கரண்டி நெல்லிப் பொடி சேர்த்து, பசு மோரில் கலந்து அருந்திவர, சருமம் 'சிக்'கென்றாகி விடும். 'ஆன்ட்டி'யாயிருந்த நீங்க, அக்கா ஆயிடுவீங்க!

நீரிழிவு, தேமல், ஜுரம், இருதய நோய், மாலைக்கண், நீர்க்கடுப்பு, தொண்டைக் கட்டு, ஞாபக மறதி போன்ற ஏராளமான பிரச்னைகளைத் தீர்க்க வல்ல அதிசய மூலிகை இந்த யோஜனவல்லி.

ஆனால் வல்லாரைக் கீரையை அடிக்கடிச் சாப்பிடக் கூடாது. தலைசுற்று, உடல் வலி இலேசான மயக்கம் போன்ற உபாதைகள் ஏற்படலாம். எனவே அளவோடு சேர்த்துக் கொண்டு, அழகோடு வளமோடு வாழ்க! அறிவோடு வளர்க!

படங்கள் : ஸ்ரீஹரி

மேஷம் : 'பாரகான்' ரப்பர் செருப்புக்குக் குதியாட்டம் போடும் ஜோதிகாபோல, இந்த வாரம் நீங்களும் உற்சாகக் கடலில் மிதக்கலாம். பண நடமாட்டம் சீராக இருக்கும். வியாபாரிகளுக்கு ஆதாயம் வரும். மாணவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். வெளியூர் பயணம் லாபம் தரும். புனித காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். தாய் தந்தை நலனில் அக்கறை அவசியம்.

ரிஷபம் : ஓவர் ஆக்டிங் செய்தாலும், அதை புதுமையாகச் செய்து ரசிகர்களைக் கவர்ந்திழுக்கும் ஜோதிகா போல, நீங்களும் புதுமையாக எதையாவது செய்து உயர் அதிகாரிகளை வசீகரிப்பீர்கள். எதிர்ப்புகள் குறையும். வாழ்க்கைத் துணை நலம் சீராக இருந்து வரும். உஷ்ண சம்பந்தமான உபாதைகள் ஏற்படலாம். புதியவர்களின் பழகும்போது எச்சரிக்கை அவசியம். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற ஒளி தெரிகிறது.

மிதுனம் : சூரியாவுடன் 'ஜோ' கொண்டிருப்பது அதுவா, இல்லை நட்பு மட்டும்தானா என்று ரசிகர்கள் குழம்பித் தவிப்பது போலவே, உங்கள் கிரக சஞ்சாரமும் குழம்பிக் கிடக்கிறது. அதனால் விசேஷமான பலன்கள் எதுவும் சொல்வதற்கில்லை. அலைச்சல் அதிகமாகும். பொருளாதாரம் சாதாரணமாக இருக்கும். அரசியல்வாதிகள் அளவோடு நன்மை அடைவார்கள். கைப் பொருள் பத்திரம். பெண்களுக்கு மாமூலான பலன்கள் நடைபெறும்.

கடகம் : மூன்று ஷிஃப்டில் ஓயாமல் வேலை செய்தாலும், கால்ஷீட் பிரச்னை செய்யாத ஜோதிகாபோல, உங்கள் கிரக சஞ்சாரமும் குளறுபடி செய்யாமல் ஸ்மூத்தாகப் போய் கொண்டிருக்கிறது. அதனால் உங்கள் செயல்திறன் கூடும். வரவு திருப்திகரமாக இருக்கும். மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டு வரும். விவசாயிகளுக்கு முன்னேற்றமான காலம். பயணத்தின்போது எச்சரிக்கை அவசியம். மனை, நிலம், வீடு இனங்களில் அளவான நலம் கிடைக்கும்.

சிம்மம் : ''பல்லு போனா சொல்லு போச்சு; ஆளு இளைச்சா, மார்க்கெட் போச்சு!'' என தெரிந்து வைத்துக் கொண்டு 'கஷ்க்முஷ்க்' மாறாமலிருக்கும் ஜோதிகாபோல, உங்கள் ஆரோக்கியமும், அந்தஸ்தும் ஸ்டெடியாக இருக்கும். புதிய பதவி, பட்டங்கள் ஆகியவை கிடைக்கும். அரசு விவகாரங்கள் அனுகூலமாகும். குடும்ப நலம் சீராக இருக்கும். வியாபாரம் பெருகும். சமுதாய நலப் பணியாளர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். வீண் சண்டை சச்சரவுகளைத் தவிர்ப்பது நல்லது.

கன்னி : மும்பையிலிருந்து தினந்தினம் புதுமுகங்கள் இறக்குமதியானாலும், ''முதலிடத்தை விட்டேனா பார்'' என்று சமாளித்துக் கலக்கும் ஜோதிகாபோல, நீங்களும் நம்பர் ஒன் இடத்தை இலேசில் விடமாட்டீங்க. நண்பர்களும், அன்பர்களும் உதவிக்கு ஓடோடி வருவாங்க. பணநடமாட்டம் சீராக இருந்து வரும். பராக்கிரமம் வெளிப்படும். சூரியன் 5ல், கேது 4ல், 9ல் சனி உலவுவதால், பெற்றோர் நலனில் அக்கறை தேவை.

நடக்குமென்பார், நடக்கும்!

துலாம் : 'பிரகாசமான நடிகை அப்படியாம், இப்படியாம்' என்று கிசுகிசு எழுதினாலும், எதையும் கண்டுக் கொள்ளாமல், முன்னணி நழுவாமல் ஓடிக் கொண்டிருக்கும் ஜோதிகா போல, நீங்களும் துணிச்சலாய் திட்டங்களில் இறங்குபவர் தான். அதனால்தான் எதிர்ப்புகள் ஓடி மறைகின்றன. நிர்வாகத் திறமை அதிகரிக்கிறது. பிரபுதனவான்கள், முக்கியஸ்தர்கள் தொடர்பால் பயன் உண்டாகும். வானொலி, டி.வி. மற்றும் தபால் தந்தி இலாகா, தகவல் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு செழிப்பான வாரம்.

விருச்சிகம் : அக்கா எட்டடிப் பாய்ந்தால், எண்பதடி பாய்ந்த ஜோதிகாவின் கலைராசி போலவே, உங்களுக்கும் இது ராசியான வாரம். வசீகரம் கூடும். புத்திசாலித்தனம் வெளிப்படும். புதிய பொருள் சேர்க்கை கிடைக்கும். கூட்டுத் தொழில் புரிபவர்கள் அளவோடு நன்மை அடைவார்கள். பேச்சில் கடுமையைத் தவிர்க்கவும். புதியவர்கள், வேற்று மொழிக்காரர்களிடம் பழகும்போது எச்சரிக்கை அவசியம்.

தனுசு : இவ்வளவு பிஸியாக இருந்தும் தினந்தோறும் நல்லெண்ணெய் வாங்கும் ஜோதிகாபோல, நீங்களும் தினந்தோறும் வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள். விருந்து, உபசாரங்களிலும் உல்லாசங்களிலும் ஈடுபாடு அதிகரிக்கும். பேச்சாற்றல் பளிச்சிடும். போட்டி, பந்தயங்களில் பலனிருக்கும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தாய் நலம் கவனம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரியோர், நல்லவர் சகவாசம் நன்மை தரும்.

அக்னிசர்மா பக்கம்

ஜனவரி 16 முதல் 22 வரை



கும்ப ராசிக்காரரான நடிகை தேவயானியின் உழைப்பும் திறமையும் வீண் போகாதாம்.

மகரம் : செம்பட்டை தலை முடிக்கும் செருக்கான அந்தஸ்து வாங்கித் தந்த ஜோதிகா போல, உங்கள் எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் அருமையான அந்தஸ்து கிடைக்கும். அரசியல்வாதிகள் அடக்கி வாசிப்பது நல்லது. மருத்துவம், நிர்வாகம் சம்பந்தப்பட்ட இனங்களில் உள்ளவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து வந்தால் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பிக்கலாம். அரசுப் பணியாளர்களுக்கு ஆதாயமான நேரமிது. தந்தை நலனில் கவனம்தேவை. கொடுக்கல் - வாங்கலில் எச்சரிக்கை இருக்கட்டும்.

கும்பம் : "அவார்டு என்கிற பேச்சே வேணாம். கல்லா நிரம்பினால் போதும்" என்று தெளிவாக களம் இறங்கியுள்ள ஜோதிகா போல, கும்பராசி நேயர்களும் கட்டம் போட்டு திட்டம் போடுவீங்க. அதுலே ஜெயிச்சும் காட்டுவீங்க. 5ல் குரு, ராகுவுடன் சஞ்சாரம் என்பதால் மக்கள் நலனில் கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் முழுஅக்கறை செலுத்துவது அவசியம். உழைப்பும் திறமையும் வீண் போகாது. வீண் வாக்குவாதம், வம்பு சண்டை சச்சரவுகளில் ஈடுபடலாகாது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

மீனம் : 'மிஸ் தொப்பை' என சக நடிகைகள் கிண்டல் செய்தாலும், கலங்காமல் சிரித்து மகிழும் ஜோதிகா போல, நீங்களும் எதற்கும் அலட்டிக் கொள்ளாமல் உயரப் பார்ப்பீர்கள். கணிதம் எழுத்து, பத்திரிகை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு சுபிட்சமான காலம். விவசாயிகள் புகழ் பெறுவார்கள். சகோதரன் அல்லது சகோதரி நலனில் அக்கறை தேவை. பயணம் தவிர்ப்பது நல்லது. சுபச் செலவுகள் வரும். தெய்வப் பிரார்த்தனை கோடி புண்ணியம்.

அகக்கண் நிறைந்த எண்கண் வேலன்

எண்கண் என்ற திருத்தலம் திருவாரூரிலிருந்து 13 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. எண்கண்ணில் குடி கொண்டிருக்கும் முருகன் பேரில் 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்று ஒரே ஒரு திருப்புகழ் பாடல் மட்டும் நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஆனால், அந்த ஒற்றைப் பாடலில் சந்தத்தோடு பொதித்து பொதித்து நயங்களைப் பொருத்திப் பாடியிருக்கிறார் அருணகிரி நாதர்.

'எண்க ணங்க மர்ந்தி ருந்த பெருமாளே!' என்று முடிக்கும் முன், மூர்த்தியின் வர்ணனை, அவன் குலப் பெருமை, அவன் ஆடல் சிறப்பு, என்று வரிக்கு வரி அடுக்கிக் கொண்டே போகிறார்.

இந்தக் காட்சியைக் கொஞ்சம் மனக் கண்ணில் படம் பிடித்துப் பாருங்கள்.

திமிர்ந்து புடைத்திருக்கும் வீரத் திரு மார்பு. அதில் மணம் வீசும் குளிர் சந்தனம். அந்தப் பொன்னிறத்தோடு போட்டி போட்டுப் பிரகாசிக்கும் குங்குமம். இவற்றின் புது மணத்தை மூழ்கடிக்கக் கூடிய சுகந்தத்தைப் பரப்பும் செண்பக மலர்களின் அடர்ந்த சரமொன்று தோள்வழி சரிந்து வந்து அந்தப் பொன்னொளிர் மார்பில் புரண்டு விளையாடுகிறது. போதும் போதாத தற்கு கடப்ப மலர் மாலை வேறு. கால்களில் சதங்கை 'சலங் சலங்'கென்று சப்திக்க, மயில் மீது ஏறி,

'திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்தனந்த னந்த னென்று' நர்த்தனமாடி வருகிறான் இள முருகன்.

அவ்வாறு வரும் முருகோனை அழைத்துச் சொல்கிறார் அருணகிரியார் :

என் சிந்தையிலே புகுந்து, சந்ததம் உன்னை உணர்ந்து, உன் பதம் பணிந்து மகிழும் நிலையை எனக்கு நீயேதான் அருள வேண்டும்.

இப்படியொரு சுந்தரத் திருக்கோலம்தான் எண்கண்ணில் உள்ள முருகனுடைய தோற்றம். ஆனால் அத்தோற்றத்தில் அவனை வடித்த சிற்பி கண் பார்வையற்றவர் என்று சொன்னால் நம்ப முடிகிறதா...? நம்பித்தான் ஆக வேண்டும்!

'சிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு கழ்ந்து ணர்ந்து
செம்ப தம்ப ணிந்தி ரென்று மொழி வாயே!'


என்று எண்கண் திருப்புகழில் அருணகிரியார் வேண்டியதுபோல் சிற்பியின் சிந்தையில் புகுந்து கொண்டான் முருகன். எண்ணம் முழுதிலும் அந்த அழகனே நிறைந்திருக்க, அவர் அகக்கண் கொண்டு வடித்த ரூபம்தான் எண்கண் முருகன். எண்ணமே கண்ணாகக் கொண்டு சிலைவடித்த சிற்பிக்கு அங்கே கண்ணும் கொடுத்து அருள் செய்தான் இறைவன்.

மீரா, பிரஹலாதன், கபீர்தாஸர், ஷேத்ரஜ்ஞயர், தியாகராஜஸ்வாமி, புரந்தரதாஸர், தேவார

நால்வர் முதலிய மிகப் பெரிய பக்தர்களுக்கு நிகரான பக்தராக இந்த எண்கண் சிற்பி இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில், இப்படி ஒரு சாதனையை அவர் புரிந்திருக்க முடியாது. அவர் பக்தி பரவசத்தின் வெளிப்பாடு, எண்கண் முருகனை வடித்த சாதனை மட்டுமன்று... சிக்கல், எட்டிகுடி எண்கண் ஆகிய மூன்று தலங்களிலும், தம் உள்ளத்தில் குடியிருந்த முருகப் பெருமானின் சிலைகளைத் துளிக்கூட வேறுபாடின்றி ஒரே மாதிரி தோற்றத்தில் மூலவராகவும் உத்ஸவ வடிவனராகவும் வடித்துத் தந்தார்.

சிக்கலில் செய்து வைத்திருந்த வேலனைத் தரிசித்து பிரமித்துப் போனாராம் முத்தரசச் சோழர். அதைப் போல் மற்றொன்று அதே சிற்பி செய்து கொடுத்துவிட்டால் தம்முடைய சிங்கார வடிவேலனின் முக்கியத்துவம் குறைந்துபோய்விடுமோ என்ற அறியாமையில் தவித்துப் போயிருக்கிறான் அரசன். மற்றொரு விக்ரகம் உருவாகிவிடக் கூடாது என்று தீர்மானித்து சிற்பியின் ஒரு கை கட்டை விரலைத் துண்டிக்கச் செய்திருக்கிறான்.

சிற்பி கொஞ்சங்கூட மனம் தளரவில்லை. நடந்தது முருகப் பெருமானின் திருவிளையாடல் என்று ஏற்று, எட்டிகுடி என்ற தலத்தில் சிக்கல் போலவே ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் கொண்ட முருகனைத்




குருஜி ஏ.எஸ்.ராகவன்

துளியும் வேறுபாடின்றி அமைத்தான்.

அரசனுக்கும் மனம் பொறுக்கவில்லை. சிற்பியின் இரு கண்களையும் பறிக்கச் செய்துவிட்டார்!

கண்களிழந்த சிற்பி எண்கண் என்ற தலத்துக்கு வந்து சேர்ந்தான். இறைவனைப் பாடும் வாய் அடங்கியிருக்காது என்பது போல் அவனைச் சமைக்கும் கரங்களும் ஓயமாட்டா! கண்ணிழந்த நிலையிலும் சிற்பி தன் கை வரிசையைக் காட்ட முனைந்தான். எங்கிருந்தோ வந்த சிறுமி ஒருத்தி உதவிகள் செய்ய, மயிலின் கால்களிலிருந்து தொடங்கி, மயில் வாகனத்தில் ஆறு முகங்களும் பன்னிரு கரங்களுமாக அழகு களஞ்சியமான முருகனைச் சமைத்துவிட்டான். ஆனால், பன்னிரு மலர்க் கண்களைத் திறந்தாக வேண்டுமே...! சிலைக்கும் சிற்பத்துக்கும் விழிமலர் திறப்பதென்பது கச்சிதமாய்ச் செய்ய வேண்டிய தெய்வீகச் சடங்கு. அதைச் சரிவர செய்ய முடியாதே என்று பயமும் துக்கமும் வாட்ட, சிற்பி சோகமே உருவாயிருந்தான். அச் சமயம் அவன் செதுக்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து ஒரு சிறு துண்டு தெறித்து, அருகிலிருந்த சிறுமியின் மீது பட்டது. பட்ட இடத்திலிருந்து ஒரு துளி



• எண்கண் திருக்கோயில் வடமேற்கு மூலையிலிருந்து... சண்டிகேஸ்வரர் - வேலவன் - ஷண்முகர் சபை. பெரிய நாயகி - விமானங்கள்

இரத்தம் தெளித்து சிற்பியின் கண்களை நனைத்தது! அடுத்த கணமே, இழந்த கண் பார்வையைப் பெற்றான் சிற்பி! தனக்கு உதவிய சிறுமியைக் காண சுற்றும் முற்றும் தேடினான். ஆனால் அவள் மாயமாய் மறைந்திருந்தாள்.

உள்ளத்திலிருந்த முருகனே பக்கத் துணையாய் நின்று உதவியதைப் புரிந்து கொண்டான். இறைவனின் கருணையை எண்ணி அவன் விழிகள் நீரைப் பெருக்கிய வண்ணமிருந்தன. மெள்ள மெள்ள முருகனின் பன்னிரு மலர்விழிகளைத் திறந்த போது அந்தச் சிற்பி எத்தனை ஆனந்தப் பட்டிருப்பான். தான் வடித்த சிற்பத்தை அங்கம் அங்கமாகக் கண்டு களித்து மகிழ்ந்திருப்பான் அல்லவா! அந்த மகிழ்ச்சியை எதிரொலிப்பதுபோல் அமைந்துள்ள எண்கண் பிள்ளைத் தமிழ் பாடலைப் பாருங்கள் :

சீராறு மயில்காண வேல்காண
அடல்கொண்ட
சேவற்ப தாகை காண
திருமுகத் தாமரைகள் ஓராறு காண நின்
செம்பருதி மேனிகாண
ஓராறு நவரத்தின மணிமௌளி காண
உன்
உகந்துருகும் நகைகள் காண
உபயபரி புரமறைகள் தன்டையொடு
கிண்கிணி
ஒலிக்கும் பதங்கள் காண
தாரா(று) இரண்டு புயசைலங்கள் -
காணவே
தங்கமுப் புரிநூலணி
தடமார்பு காணவே ஈராறு செவியில்
அணி
தரு குண்டலங்கள் காண
ஈராறு கை காண அடியர் முன்
ஓடிவரும்
எந்தை என்முன் வருகவே
எண்கண் ணனுக்கருள் செய்
ஈராறு கண்ணனே
எண்கண் வேலவன் வருகவே!

- முருகனை அலங்கரிக்கும் நகைகள் அந்த பெருமிதத்தில் 'உகந்து உருகுகின்றன' என்ற கவிநயம் அரிதானது; மிக மிக அழகானது.

இந்தக் கவிதை அழகையெல்லாம் ஒன்றுமில்லை எனச் செய்துவிடக் கூடியது எண்கண் முருகனின் தரிசனம்.

மயில்மீது அமர்ந்த நிலை. இடது காலை

மடித்து வைத்து, வலது காலை மட்டும் ஒய்யாரமாகத் தொங்கவிட்டிருக்கிறார். இரு புறமும் வள்ளி தெய்வானை வீற்றிருக்கின்றனர். வலக்கரங்களில் சக்தாயும், வாள், அம்புராத்துணி, அபய முத்திரை, பாசம்; சக்கரம். இடது கரங்கள் ஆறில் வில், கேடயம், வரத முத்திரை சூலம், அங்குசம், கொடி... இத்தனையும் சுமக்கும் முருகனைச் சுமப்பது அந்த மயில். அதன் இரு செஞ்சிறிய கால்கள் திருவாசியுடன் கூடிய முருகனைத் தாங்கி நிற்பது ஓர் சிற்ப அற்புதம்!

உத்ஸவ மூர்த்தியோ ஒளியில் ஜொலிக்கிறார். சுற்றி வந்து ஆறு முகங்களையும் பார்க்க வேண்டும். முகங்களின் அழகு மட்டுமா. ஒவ்வொரு விரலும் நகமும்கூட அற்புத அழகு. பன்னிரு காதுகளிலும் தோடும் குண்டலங்களும் அணிவித்து அலங்கரித்த அமைப்பு! முருகன் திருவடியைத் தொழுது நிற்கின்ற கணத்தில் மயிலே உயிர்பெற்று விட்டதோ என்கிற திகைப்பு உண்டாகிற அளவுக்குத் தத்ரூபமாய் இருக்கிறது.


அஷ்டநேத்திரபுரம்,* பிரம்மபுரம், பாஸ்கர க்ஷேத்திரம் என்று எண்கண்ணுக்கு வேறு பெயர்கள் உண்டு. பிரும்மாவுக்குச் சிவன் பிரணவத்தை உபதேசித்த க்ஷேத்திரம் என்பதால் பிரம்மபுரம். பிரணவத்தின் பொருளை முருகனிடமிருந்துதானே பெற்றார் தந்தை பரமசிவன்! பிள்ளைத் தமிழ் பாடலில் வருவதுபோல் எண்கண்ணனுக்கருள் செய்த இடம் என்பதால் அஷ்டநேத்திரபுரம். சிவன் பிரம்மபுரீசுவரர் என்ற பெயருடன் இங்கே கோவில் கொண்டிருக்கிறார். அம்பிகை பிருஹந்நாயகி.

எண்கண், எட்டிகுடி, சிக்கல் ஆகிய மூன்று தலங்களுள் எண்கண் சிற்பம்தான் முதலில் செதுக்கப்பட்டது என்று சொல்பவர்களும் உண்டு.

வரிசைக் கிரமம் எவ்வாறிருந்தாலும் சரிதான். அருணகிரிநாதரின் எண்கண் திருப்புகழ் வர்ணனை வரி பிசகாமல் மூன்று தலத்து முருகன் உருவங்களுக்கும் பொருத்தக்கூடியதே.

சந்த னந்தி மிந்த ணைந்து குங்கு மங்க
டம்பி லங்கு
சண்ப கஞ்செ றிந்தி லங்கு திரடோளுந்

• ஷண்முகர் தேவசபை - உற்சவர்



தண்டை யஞ்சி லம்ப லம்ப
வெண்டை யஞ்ச லஞ்ச லென்று
சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச மயிலேறித்
திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்த னந்த
னென்று
சென்ற சைந்து கந்து வந்து
க்ருபையோடே
சிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு
கழ்ந்து ணர்ந்து
செம்ப தம்ப ணிந்தி ரென்று
மொழிவாயே
அந்த மந்தி கொண்டி லங்கை வெந்த
ழிந்தி டும்ப கண்டன்
அங்க முங்கு லைந்த ரங்கொன்
பொடியாக
அம்ப கும்ப னுங்க லங்க வெஞ்சி னம்பு
ரிந்து நின்று
அம்பு கொண்டு வென்ற கொண்டல்
மருகோனே
இந்து வுங்க ரந்தை தும்பை கொன்றை
யுஞ்ச லம்பு னைந்தி
டும்ப ரன்ற னன்பில் வந்த குமரேசா
இந்தி ரன்ப தம்பெ றண்டர் தம்ப யங்க
டிந்த பின்பு
எண்க ணங்க மர்ந்தி ருந்த பெருமானே."

(அடுத்த வாரம் எட்டிகுடி வேலவன்)




தேடிவந்த கருணை!

சுவடுகள் - 2

திருப்பூர் கிருஷ்ணன்



ஐராவதம் மகாதேவன் அப்போது தினமணி ஆசிரியராக இருந்தார். கண்டிப்புக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். உயர்நிலைத் தமிழறிஞர். தொல்லியல் நிபுணர். முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி. தமிழ்மணி என்ற உயர்தர இலக்கிய இதழைத் தினமணியின் இணைப்பாகத் தொடங்கி வெளியிட்டவர் அவரே. அவரது ஆசிரியப் பணிக் காலத்தில் தினமணி பல மேலான சேவைகளைச் செய்தது. பல சிறந்த ஒலிப்பேழைகள் வெளியாவதைக் கவனித்து, தினமணியின் இணைப்பான வெள்ளிமணியில் அத்தகைய ஒலிப்பேழைகளுக்கு விமர்சனம் எழுதும் மரபைத் தொடங்கி வைத்தவரும் அவரே. ஒலிப்பேழை விமர்சனப் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் சிறந்த ஒலிப்பேழைகளுக்குச் சற்றுக் கூடுதலாகவும், மற்றவற்றிற்குச் சின்னஞ்சிறு வடிவிலும் விமர்சனங்கள் எழுதி வந்தேன். அவற்றை விமர்சனங்கள் என்பதை விடவும் அறிமுகங்கள் என்று சொல்வதே பொருத்தம். அந்தப் பகுதியின் நோக்கமும் அதுதான். இலக்கிய, ஆன்மிகத் துறைகள் சார்ந்த சொற்பொழிவுகள் பல ஒலிப்பேழைகளாக அப்போது வெளிவரத் தொடங்கியிருந்தன. அந்த இரு துறைகளிலும் எனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக அத்தகைய



• ஐராவதம் மகாதேவன்

ஒலிப்பேழைகளைக் கூர்ந்துகேட்டு, அவற்றிற்குச் சற்றுக் கூடுதல் இடம் கொடுத்து விமர்சனங்களை எழுதி வந்தேன்.

கிருபானந்தவாரியார் 'கந்தன் கருணை' என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு, ஒலிப்பேழை வடிவில் வெளிவந்திருந்தது. வாரியாரின் தமிழ்நயம் பற்றிச் சொல்ல வேண்டுமா? "அது அருந் தேன். அதை அருந்தேன் என்று எவன் சொல்லுவான்? அருந்தவே இருந்தேன் என்பான்!" (இது வாரியார் சொற்பொழிவின் இடையே சொன்ன வாக்கியங்களேதான்) "இறைவனின் பாத கமலம் அரக்கனின் பாதக மலத்தைக் கழுவியது" என்பது போன்ற நெஞ்சையள்ளும் சிலேடை நயங்கள் வாரியார் தமிழின் தனிச் சிறப்பு. அந்த ஒலிப் பேழையை மனமாரப் பாராட்டி எழுதினேன் நான். ஒலிப்பேழையின் முகப்பு அட்டையைப் பார்த்தேன். என்ன துரதிர்ஷ்டம்; முகப்பு அட்டையில் 'கந்தன் கருணை' என்ற வார்த்தைகளில் 'கருணை' என்பதில் உள்ள மூன்று சுழி 'ணை' இரண்டு சுழி 'னை' ஆக அச்சாகியிருந்தது. தமிழ்க் கடலான வாரியார் ஒலிப்பேழையில் எழுத்துப் பிழையா? மனம் ஏற்கவில்லை. விமர்சனத்தை வெளியிடும்போது அருகிலேயே முகப்பு அட்டையும் அச்சிடப்படும். நான் விமர்சனத்தின் கடைசி வரியைப் பின் வருமாறு அமைத்தேன். 'முகப்பு அட்டை மட்டும் சரியான கருணையுடன் தயாரிக்கப் படவில்லை.'

விமர்சனம் வெளிவந்து ஒரு வாரம் கழித்து, ஓர் அன்பர் என்னைத் தேடி வந்தார். அந்த ஒலிப் பேழையை வெளியிட்ட ஆனந்தா காஸட்ஸ் உரிமையாளர் அவர். பெயர் கோடிலிங்கம். என் கைகளைப் பற்றிக்கொண்டு நன்றி தெரிவித்தார். நன்றி சொன்னது அந்த எழுத்துப் பிழை பற்றி நான் விமர்சனத்தில் குறிப்பிட்டதற்காக. தவறாக அச்சாகி இருந்த எல்லா முகப்பு அட்டைகளையும் எரித்துவிட்டதாகவும், சரியாக அச்சிடப்பட்ட ஒலிப்பேழையைத் தருவதற்கே வந்ததாகவும் தெரிவித்தார். "என்ன செய்வது. என் நிலைமை இப்படி இருக்கிறது. அதனால் இப்படியெல்லாம் சில நேரங்களில் ஆகி விடுகிறது!" என்று வருந்தினார். என் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவர் கைகளைப் பற்றிக் கொண்டு, "சரியான கருணையுடன் என்னைத் தேடி வந்தீர்களே!" என்று நன்றி தெரிவித்தேன் நான். வாரியாரின் உறவினர்தான் அவர். அவரை மெல்ல அழைத்துச் சென்று அவர் வந்திருந்த ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவிட்டு வந்தேன்.

காரணம் அவர் பார்வையற்றவர்!

ரகசியமாக ஒரு பத்திரிகை!

பழுத்த காந்தியவாதியான சிலம்புச் செல்வர் ம.பொ.சி, நல்லவேளையாக இப்போது உயிரோடு இல்லை! 'கண்ணகி சிலை' மாயமாய்ப் போன நேரத்தில் சிலம்புச் செல்வரை எத்தனை பேர் நினைத்திருப்பார்கள்?

குறும்பு கொப்பளிக்கக் கண்களைச் சிமிட்டி வேடிக்கையாகப் பேசுவதிலும் அவர் வல்லவர்.



• ம.பொ.சி

ஒருமுறை, ஓர் இலக்கிய மேடையில் பேசும்போது அவர் சொன்னது, "நான்கூட 'ரகஸ்யமா' ஒரு பத்திரிகை நடத்திக்கிட்டிருக்கேன்..."

அவர் குறிப்பிட்டது, குறைவான பிரதிகளே அச்சாகிக் கொண்டிருந்த அவருடைய 'செங்கோல்' பத்திரிகையைப் பற்றித்தான்.

- யெஸ்பால்

Never Before !!!

Dreams Audio

DREAMS AUDIO

Proudly Releases

"Great Maestro's" Under

"COLLECTORS CHOICE" Series



Semmangudi R.SRINIVASA IYER
Vocal

Lalgudi G. Jayaraman
Violin

Vellore Ramabadhran
Mridangam

3 Music Cassettes Pack

Lalgudi G. JAYARAMAN
&
Srimathi Brahmanandam
Violin

Umayalpuram K. Sivaraman
Mridangam

Alangudi Ramachandran
Ghatam

4 Music Cassettes Pack

AND MANY MORE ARTISTES

Media Dreams ltd Chennai - 600 017. Ph : 8143715 Visit us at WWW.MEDIA-DREAMS.COM

ALSO AVAILABLE ON CDs

பன்னாங்கல் ஆட்ட முகவிலிருந்த போது, "செந்திரு... ஓ, செந்திரு.." என்று பூவாத்தா அழைக்கிற சப்தம். "ஏனம்முச்சியோவ்?" என்று அங்கிருந்தே பதிலுக்குக் கத்தினான்.

"ஏங் கூப்புட்ட?"

"வெறகுக்குப் போகோணு, வா."

"ங்க் - க்ம்ங்ங்கோ."

"என்ம., வேல செய்யறதுக்குன்னா மாயறதில்ல. ஆமட்டுத் திரியறதுன்னாக் கேளு, உட்டாக் கெடையாது."

"வெவ்வெவ்வெவ்வே."

கொக்காணிக் காட்டும் வாயிலேயே சுண்டி வைக்கணுமாய் இருந்தது பூவாத்தாவுக்கு.

"எந் தங்கம்... கூடத் தொணைக்கு வந்தீன்னாப் போதுஞ்சாமி. அம்மூச்சி ஒண்டியா அத்தத் தொலை போகோணுமல்லொ" என்றாள் தன்னிரக்கத்தோடு.

அதை நினைக்க பரிதாபமாக இருந்தது செந்திருவுக்கு. ஆனாலும், "அப்பற எதுக்கு எனையைத் திட்டுனயாமா?" என்று கேட்டான்.

"சாமி, சாாாமி.." கெஞ்சலில் பூவாத்தாவின் குழைவு.

"புத்தி, புத்தீன்னு சொல்லு."

அவன் படிந்து வருகிறது போலப் பட்டதுமே பூவாத்தா அதையும் சொன்னாள்.

"தொணைக்கு மட்டுந்தா."

"சேரீடி பொன்னுக் கொடம்."

பூவாத்தா சாளையின் தணிந்த எரவாரத்தடிக் குனிந்து உட்சென்றாள். செந்திரு அகலவில்லை. வேலிக்குச் சார்பாய் வளர்த்தும் செடித் தழையைப் பிடுங்கினான். அதன் அடிப் பாகத்தை மடித்து ஒடித்து, ஓரங்களில் அழுத்தியதும் இடைவெளியில் பால்படலம் உண்டானது. அதில் தோன்றும் பல வண்ணச் சேர்க்கையின் குழும்பல்களைக் கண்டு கொண்டிருந்தான். சாளைக் கதவை சங்கிலிக் கொண்டியிட்டுப் பூட்டுகிற அரவம். பூவாத்தா வெளி வந்து, அரிவாளைத் துண்டு வேட்டியில் சுற்றி கக்கத்தில் இடுக்கியவாறே வேலிப் படலையும் சாத்தி கயிறு கட்டினாள்.

இருவரும் கிளம்



பினர்.

கற்கள் பெயர்ந்த மண் சாலை. மத்தியிலே வண்டிச் சக்கரங்கள் உருண்டு தேய்ந்த இணைக் குழிவு. அதனுள் சூடாறிக் கொண் டிருக்கிற கொழிமண் அடி பற்றியது. அதன் நொகு நொகுப்பு அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

பள்ளி வாசலிலிருந்து பிரிகிற இட்டேறி நாறிக் கொண்டிருந்தது. கம்பி வேலி யோடுள்ள தொக்கடாவில் ஒவ்வொருவராக நுழைந்து போண்டாக்கவுண்டரின் காட் டுக்குள் பிரவேசித்தனர்.

"கொக்கே கொக்கே பூப்போடு
கோயலச் சுத்திம் பூப்போடு.."

பின்னாலிருந்த செந்திரு பாடவே பூவாத்தா திரும்பிப் பார்த்தாள். அப் போது விரல்களை மடக்கி நகங் களில் துப்பி, கழுத்தில் வைத் துக் கொண்டிருந்தாள் அவள் ரகசியமும் ஆர் வமுமாக.

கையெடுத்துப் பார்த்த போது நகங்களில் 'பூ' விழாதது ஏமாற்றமளித்தது அவளுக்கு. உயரே பறந்து போகிறபோது மட்டும் தான் பூப் போடுமோ?

"ஏனம்முச்சி, கொக்கு ஒசக்கத்துல பறக்கும் போதுதா பூப் போடு மாம்முச்சி?"

பூவாத்தா திரும்பாமல், "கொக்குப் பூப் போடா மத்தே நீயி சிங்காரிக்கறது பாக்கி" என்றாள். அதற்குச் செந்திருவிடமிருந்து ஒலி யற்ற 'வெவ்வெவ்வே' காட் டப்பட்டது.



சோகுரிக்கப்பட்ட கரும் பும், பிறகு மஞ்சளுமாக சில அணப்புகள். ஒரு பொத்தை மசால் பில். கிணற்றிலிருந்து மோட்டார் நீர் வரும் வாய்க்காலில் வாழைகளும் காட்டா மணக்கும். தடம் வளைந்து சென்று, கிணறு தென்பட்டது. கிணற்று மண்ணும் வேட்டெழுப்பி எடுத்த கற்களும் சரிவாகக் கொட்டப்பட்டுள்ள திற்குப் பின்னால் வண்டிப் பாதை போண்டாக் கவுண்டர் களத்திற் குச் செல்கிறது. மறு திசை குத்தாம்பாளைக்குச் செல்வது. பாறையைச் சுற்றித் தான் செரங்காடு.

மூங்கமடைக்காரரின் சானை வரை சமநிலம். பிறகுமேடு துவங்கிவிடுகிறது. அதனால் அவருக்கு வெள்ளாமை முழுக் கவே புஞ்சை. கடலைக்காடு பூவெடுத்து விட்டது.

செந்திரு பூவாத்தாவை நெருங்கிச் சென்று அருவாள் இல்லாத கையைப் பற்றி மேலொட்டியவண்ணம் நடந்தாள்.

"அம்முச்சீ.. எனக்குப் பெனுசல் டப்பா வாங்கிக் குடம்முச்சீ.." இறைஞ்சுதலின் ராகம்.

பூவாத்தா குனிந்து பார்த்தாள். செந்திரு அண்ணாந்துமே கரும் பாவைகள் மேற் சொருகி நிற்கின்றன. 'அடி, வித்தார கள்ளீ..' எனும் எண்ணம் கமுக்கச் சிரிப்பாய் ஊறும் வாயில் பூவாத்தா, "வாங்கலாண்டி ராசாத்தி" என்றாள்.

"அம்முச்சி... ஏபிசிடியெல்லாம் போட் டிருக்குமல்லொ. அதுதா வாங்கோணு."

ஆவல் முகம் நோக்கினாள் பூவாத்தா. "நானெங்க ஏப்பீஜீடியக் கண்டன்? நீதாம் படிக்கற புள்ள."

"கடைல சொன்னாலே தருவாங்கம் முச்சி."

"ஆனாச்செரி."

கையைப் பிடித்துத் தொங்குவது போலும் அவளின் நடை துள்ளி வந்தது. பூவாத்தா அதில் இழுபடவே, "சித்தெ கம்முனு வா.

ஷாராஜ்

நானே ஏத்தமேற முடியாம லொங்கு லொங்குனு வாறன். மெய்யால இவ வேற" என அலுத்துக் கொண்டாள். செந்திருவின் பிடி விடுபட்டது.

சந்தைக்குப் போகும்போது அவள் கேட்பதை வாங்கிக் கொடுக்க வேண்டும். நல்லதாய் ஒரு பாவாடை சட்டை இல்லை. துணி எடுக்கலாமென்றால் வகுத்து பாட்டுக்கே வழியைக் காணோம் இப்போது. புரட்டாசி மாசம் பீடை புடிச்ச மாசம் என்று சும்மாவா சுலோகஞ் சொன்னார்கள். இந்தக் கரியஞ்செட்டிகளத்துக்காரராவது வந்தால் கடனுக்கு எடுக்கலாம். அப்புசியானால் நோம்பிக்கும் ஆகும்.



சொகுசாக வளர வேண்டிய குழந்தை, இங்கே கிடந்து சின்னப்படணும் என்று எழுதியிருக்கிறது. இத்தனைக் காலம் ஒப்பேற்றியாயிற்று. தெடனாக உள்ள வரை பூவாத்தா காத்துக் கொள்வாள். அதற்கு 'ஒருத்தர்' தாச்சணியமும் வேண்டாம். பிறகு எப்படியோ, அவள் விட்டபடி. வேறென்ன செய்ய முடியும்?

ஏற்றங்கூடும் பாதை, அணப்புகள் தரிசாகிக் கிடக்கின்றன. பிறகு சரளை நிலம். செரங்காட்டை நெருங்க நெருங்க, குத்தாம்பாறை வடிவு மாறிப் புரண்டது.

"இந்தா, அருவாளச் சித்தெ புடி" என்று செந்திருவிடம் கொடுத்துவிட்டு பூவாத்தா கன்றுப் பனைக்குப் போனாள். கையெட்டும் ஓலைகளில் ஏற்கெனவே நடுப்பாகம் இணுங்கப்பட்டிருந்தன. சற்றுத் தள்ளியிருக்கும் உயரங்கூடிய மற்றொன்றில் எத்தி இணுங்க வேண்டியதாயிற்று.

அதற்குள் செந்திரு காட்டுக்குள் புகுந்து விட்டிருந்தாள்.

"பாத்துப் போணுமுடியோ..." குரல் கொடுத்ததில் அவளது வேகம் மட்டுப்பட்டது. பூவாத்தாவும் போய் இணைந்து கொண்டாள்.

மரச் செறிவின் பசும் நிழல் தன்மையாயிருந்தது. மண்ணே காணப்படாமல் புற்களும் மக்கிய சருகுகளும். அவை நொறுங்க இன்னும் உள்ளே நடந்தனர். கனத்த பேர்மைதியில் காற்று சலசலத்தது. 'ஊம்... ஊம்..' என ஒற்றைச் செம்போத்து முக்கி முனகுவதில் காடே மருகியது.

"போதுங் கொண்டா." கை நீட்டியதும் செந்திரு அருவாளைக் கொடுத்தாள். பூவாத்தா வேங்கை மரத்தடியில ஓலை இணுக்குகளைப் போட்டுவிட்டு, அரிவாளைச் சுற்றியிருந்த துண்டு வேட்டியையும் பிரித்து அதனோடு வைத்தாள்.

"இங்கியே நெழல்ல குக்கீட்டிரு" என்றுவிட்டு, தோதாக உள்ள செடிகளில் பெரிய குச்சிகளை வெட்டலானாள் அவள். முதலில் வெட்டிப் போட்டுவிட்டால் பிறகு சிம்புகளை அரக்கிக் கொள்ளலாம்.

மரத்தடியில் அமர்ந்திருந்த செந்திரு கொஞ்ச நேரம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சற்றையில் அது சலிக்கவே, சூட்டுக் கொட்டைப் பொறுக்கி வரலாமென்ற யோசனை. இதோ, இப்படி மேற்கே போனால் சூட்டுக் கொட்டை மரம் இருக்கும்.

எழுந்துகொண்டு, "அம்மூச்சீ." என்றழைத்தாள். வெட்டுவதை நிறுத்திவிட்டு பூவாத்தா ஏறிட்டுப் பார்த்ததும், "சூட்டுக்கொட்டை பொறுக்கிட்டு வாறன்." என்றாள்.

"பேசாம ஒரு கெடைல குக்கு."

"அய்யாங்..." காலுதைத்துச் சிணுங்கினாள். "போனதும் வந்துருவனம்முச்சீஈஈ."

"காட்டுக்குள்ள கண்டது கடியது இருக்குமுடீ. சொன்னாக் கேளு."

தொடர்ந்து அவள் நச்சரித்துக் கொண்டிருக்கவே, "புடிச்சா உடும்புப் புடி. என்ன புள்ளையோ ஆத்தா நீயி." என அலுத்துக் கொண்டாள் பூவாத்தா. "சாக்கரதையாப் போயிட்டுச் சட்டுனு வந்தரோணு."

செந்திரு குதூகலமாய் ஓடினாள். தப்படிகளில் நொறுங்கிச் சிதையும் சருகோசை.

காலில் முள் குத்திய வலியில் அவனது ஓட்டம் தடைபட்டது. ஒற்றைக் காலில் நின்று குத்துப்பட்ட மறு காலை மேலெடுத்தான். பாதக் குழியில் குத்தியிருக்கும் முள்ளோடு அளிஞ்சிக் குச்சி. ஒற்றைக் காலூன்றலில் தடுமாறியவாறே குச்சியைப் பிடுங்கினான். முள் முழுதும் வெளிவந்து விட்டது. அதை வீசியெறிந்துவிட்டு பாதத்தை ஊன்றி நடந்து சோதித்தான். அவ்வளவாக வலியில்லை.

சூட்டுக்கொட்டை மரத்தின் மேற்தோலைப் போன்றே காய்களிலும் முட்கள். மரத்தைச் சுற்றி புதர் மண்டியிருந்தது. அதற்கு வெளியே வெகு நேரம் தொளாவியதில்தான் சில கொட்டைகள் கிடைத்தன.

ஏதோ பிராணி ஒன்று புதருக்குள் ஓடி மறையவே, சுருக்கென்றது அவனுக்குள்ளாக. சூட்டுக் கொட்டைகளைப் பாவாடை ஜோப்பில் போட்டுக் கொண்டு, நெஞ்சுக்குள் குளிர்கிற பயம் உடல் முழுதும் பரவ அங்கிருந்து ஓடலானான்.

பூவாத்தாவை அடைந்தபோது கெஸ்ஸ" வாங்கியது. ஓலை இணுக்குகளை முடி போட்டு விரித்து, அதில் வெட்டி அரக்கிய குச்சிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள் பூவாத்தா. அவளிடம் புதரில் கண்டதைச் சொல்ல வாயெடுத்து, திட்டுவாளென விடுத்தான்.

"இதே, இங்க பாரு." ஜோப்பிலிருந்த சூட்டுக்கொட்டைகளை எடுத்துக் காட்டியதும் பூவாத்தா பார்த்தாள். "ஓ.., இன்னைக்குப் பொளுதோட வறுத்துத் திங்கலா."

"ங்க்-க்ம்."

குச்சிகளை அடுக்கி முடித்த பூவாத்தா ஓலைகளை இறுக்கிப் பிரிபோட்டுக் கட்டி, அருவாளைச் செருகிக் கொண்டாள். பக்கத்திலிருந்த சிறு சுள்ளல் சுமையை அவனிடம் சுட்டிக் காட்டி, "இதய நீயி எடுத்துக்க சாமி" என்றாள்.


"ங்க்-க்ம்ங்கோ."

"தங்கக் கொடமல்லொ.."

தாவாங்கொட்டையைப் பிடித்துக் கொஞ்சுகிற கையைத் தட்டிவிட்டான் செந்திரு. "தொணைக்குன்னுதான கூட்டீட்டு வந்த?"

"இதக் கொண்டு போனா காப்பித் தண்ணி கிது வெக்கறத்துக்கு ஆகும். பாரு, கெனமேயில்ல." ஒற்றைக் கையில் அனாயாசமாகத் தூக்கிக் காட்டினாள்.

துண்டு வேட்டியில் சும்மாடு சுற்றி



"இந்த மெகாசீரியல் ரொம்ப சூப்பர் போல!"

"அப்படியா?"

"பின்னே, 'பெண்களின் அமோக கண்ணீர் ஆதரவுடன் நூறாவது வாரம்'னு டைட்டில்ல போடுறாங்களே..."

- சி.எம். மாதவன்

செந்திருவின் தலையில் வைக்கவே, வேண்டா வெறுப்புடன் சுமையை ஏற்றுக் கொண்டான் அவன். சேலை முந்தியில் சும்மாடு சுற்றிக் கொண்ட பூவாத்தா, கீழே அமர்ந்து தனது சுமையைச் சிரமத்துடன் தலையில் ஏற்றிக் கொள்ள வேண்டியதானது.

இருவரும் செரங்காட்டிலிருந்து வெளியேறினர்.

தலையில் விறகுச் சுமை உள்ளதால் நிதானமான போக்கு. இறக்கத்தில் பூவாத்தா தளர்ந்து சென்றாள். பாவம், பச்சை விறகானதால் அவளுக்குக் கனக்கும். செந்திருவுக்கு அவ்வளவு கனமொன்றும் இல்லை. சரளையை மிதித்துச் செல்லும் போதுதான் முள் குத்தின இடத்தில் இலேசான வலி. கல் படாதபடி நடந்தான்.

சூட்டுக் கொட்டையை யாருக்கெல்லாம் தரலாம் என்கிற தீர்மானங்களில் கழியும் அவனின் தடம்.

பாதை சமப்பட்ட பிறகு பூவாத்தாவின் நடை, வேகம் கொண்டது. சுமையினால் கழுத்திறங்க நடையோட்டமாகச் சென்று கொண்டிருந்தாள் அவள்.

"மொள்ளப் போ அம்மூச்சி.."

செந்திரு சொல்லவே, சற்று நின்று இவன் போய்ச் சேர்ந்து கொண்டதும் நடை தொடர்ந்தாள். செந்திருவுக்குத் தலையில் பேன் கடித்தது. அதுவும் உச்சந்தலையில். சொரிந்து கொள்ள முடியாமல் "அம்முச்சி, பேன் கடிக்குதம்முச்சி.." என்றான்.

"கடிக்காத என்ன பண்ணும்? பேனீத்தி

யுடறன் வாடீன்னா கேக்க மாண்டயே."

"நீயி ஈறுகோலில வெடுக்கு வெடுக்குனு இருப்ப" என்ற செந்திரு, சுமையைச் சிறிது அசைத்து பேன் கடிக்கிற இடத்தில் விறகுச் சுள்ளல் அழுந்தும்படி செய்ய முயன்றாள். சும்மாடு நழுவிவிடுமாயிருந்தது. அவள் தடுமாறி சமாளித்துக் கொண்டாள்.

போகப் போக விறகுச் சுமை கனத்தது.

"செமை கெனக்குதம்முச்சி" என்றாள்.

"இதென்ன ஊடு இவடத்தாலக்கு இருக்குது. சித்தங்கூருக்குள்ள போயர்லா."

இன்னும் எத்தத் தொலை போகவேண்டியிருக்கிறது. போண்டாக் கவுண்டர் காடே வாவில்லை. கிணறு தாண்டி, வயற்காடுகள் தாண்டி, பள்ளி முக்கு திரும்பி... அய்யோ, எத்தத் தொலை!

அவளுக்குக் கழுத்தே இற்றுவிடும் போலனது.

இதற்குத்தான் அம்முச்சியோடு துணைக்கு வரக் கூடாது என்பது. 'சனியன்' என விறகுச் சுமையைத் திட்டினாள். மீண்டும் நடையோட்டமாகச் சென்று கொண்டிருக்கிற பூவாத்தாவின் மீதும் கோபம். கிணற்று மேட்டில் செல்லும்போது இவளின் பின் தங்கலால் பூவாத்தா அந்தப் புறம் சென்று மறைந்துவிடாள். சுற்று முற்றும் கவனித்ததில் யாரையும் காணோம். செந்திரு பதனமாக நின்றுகொண்டு சுள்ளல் சுமையை தரை மட்டக் கிணற்றுக்குள் போட்டாள். 'பொளோச்' சென்று நீரோசை எழுந்தது.

மறைவுக்கு அப்பாலும் ஏதோ விழுந்த சப்தம்.

"அடிப் பாவி சண்டாளீ... என்ற தலைக்கு ஒடு குடுத்துட்டியா...?" பெருங் குரலெடுத்து அலறியவாறே பூவாத்தா மறைவிலிருந்து தலையிலடித்துக் கொண்டு ஒடி வந்தாள். செந்திருவுக்கு அவள் தன்னை அடித்துவிடுவாளோ? என்ற பயம். ஆனாலும் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

செந்திருவைக் கண்டதும் பூவாத்தா ஒரு கணம் செயலற நின்றுவிட்டாள். கண்களிலே பெருகும் கண்ணீர். முந்தியில் அதைத் துடைத்துக் கொண்டு, செந்திருவிடம் வந்து தோளைப் பற்றித் தன்னோடு அணைத்துக் கொண்டாள். பிறகும் செந்திருவின் மீது வெம்மைத் துளிகள் சொட்டின.

"ராசாத்தீ... என்ற உசுரே போயிட்டு வந்துருச்சுடியாத்தா..." தன்னை வருடும்விரல்களில் நடுக்கத்தை உணர்ந்தாள் செந்திரு. அவளுக்கு அம்முச்சியின் செயல்கள் யாவும் குழப்பமளித்தன.

பூவாத்தா கிணற்றை எட்டிப் பார்த்தாள். பிறகு, "போச்சாது வா..." என்று கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றாள்.

அவள் கொண்டு சென்ற விறகுச் சுமை மஞ்சள் காட்டிற்குள் ஓலைக் கட்டின பிரி அவிழ்ந்து சிதறிக் கிடந்தது. மீண்டும் அதை பொளி மீது ஒழுங்குபடுத்தி அடுக்கி, பிரி முறுக்கிக் கட்டினாள். முந்தி கம்மாடானது. அதில் சுமையை மூச்சுப் பிடித்து ஏற்றிக் கொண்டாள்.

"போலஞ் சாமீ... நடொ."

செந்திரு முன்னேயும் பூவாத்தா பின்னேயும் நடக்கலாயினர். ●



'எரிக்கவா? புதைக்கவா?'
என்ற கேள்வி எழுந்தது...
நடைபெற்ற தேர்தலில்
ஆட்சி மாறிய பின்,
அகால மரணமடைந்தன
அத்தனை வழக்குகளும்!

புதைப்பது ஆபத்து!
எவரேனும் தோண்டிக் கிளற
அடுத்த தேர்தலில்
என்னவும் நடக்கலாம்...

'எரிப்பதே உத்தமம்...'
என்பதாய்ச் சொல்ல
'வேள்வி' நடந்தது!

— சுப்ரபாலன்

பிள்ளையார் 'பாய்!'

பிள்ளையாருக்கு இருக்கும் அளவிற்குப் பக்தர்கள், வேறு கடவுளுக்கு உண்டா என்று தெரியவில்லை. பெங்களூரில் பிள்ளையார் வாங்க வேண்டுமென்றால் அனைவரும் படையெடுப்பது எம்.ஜி. ரோடில் பப்ளிக் யுடிலிடி பில்டிங்கில் இருக்கும் 'சாந்தினி' ஷோரூமை நோக்கித்தான். இந்தக் கலைக்கூடத்தில் மூவாயிரம் பிள்ளையார்கள் கொலு வீற்றிருக்கிறார்கள்.

இந்நிறுவனத் தலைவரான கல்தான் தரியானி, முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவரானாலும் தீவிரமான பிள்ளையார் பக்தர்!

மும்பையைச் சேர்ந்தவர், கல்தான். ஏதோ ஒரு சர்ப்பு காரணமாக ஒவ்வொரு செவ்வாயன்றும் சித்தி விநாயக் கோயிலுக்குப் போவதை அங்கு வழக்கமாகக் கொண்டிருந்தாராம். 91ல் பெங்களூர் வந்த கல்தான், நண்பரிடமிருந்து 'சாந்தினி' ஷோரூமை விலைக்கு வாங்கிக்கொண்டார். பிஸினஸுக்குப் புதிதாக இருந்ததால் மூன்று வருடத்திற்கு நஷ்டம்.

"ஒருநாள் துவாரகாநாத் என்ற சிற்பி ஒரு சிறிய பிள்ளையார் விக்கிரகத்தைக் கொடுத்து விட்டுப் போனார். ஷோகேஸில் வைத்தேன். மறுநாளே அது விற்றுப் போயிற்று. பிள்ளையார் மட்டுமே பண்ணி ஒரு பிரத்யேகமான ஷோருமாக ஏன் ஆக்கக் கூடாது? என்று தோன்றியது. அன்றிலிருந்து விதவிதமாக, கற்பனையில் தோன்றியதை ஸ்கெட்ச் செய்து சிலையாக வடிக்கச் சொல்வேன். மக்களுக்குப் பிடித்து போய் இன்று மிகப் பெரிய அளவில் பேசப்படும் ஒரு ஷோருமாக ஆகியிருப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி" என்கிறார் கல்தான்.



பிள்ளையாருக்குச் செய்ய வேண்டிய பூஜைகள், நைவேத்யம் பற்றி அரிச்சுவடியிலிருந்து அந்தம் வரை கல்தான் சொல்வது ஆச்சர்யத்தில் மூழ்கடிக்கிறது.

கல்தானின் ஸ்பெஷல், 'த்ருஷ்டி கணபதி'யாம். 'இது சென்னையில் தொடங்கியதாக இருக்கலாம். ஆனால் அதை ஆர்ட்வொர்க் வடிவத்தில் கொண்டு வந்தது நான்தான். இதற்கு அப்படி ஒரு டிமாண்ட். ஆனால் அதையே சிலையாக 'வொயிட் செடார் வுட்டில்' செதுக்கினேன். அது இன்றுவரை ஒன்றுகூட விற்பனையாகவில்லை. இதுவும் பிள்ளையாரின் லீலைகளில் ஒன்றுதான்'' என்கிறார் வெளிப்படையாக.

இப்படி பிள்ளையார் 'பாய்'ஆக இருப்பதால் இவர்கள் மதத்திலிருந்தே மிரட்டல்கள் வந்ததாம்! "ஒரு முஸ்லிமாக இருந்துகொண்டு இந்துக் கடவுள் மீது இப்படிப் பக்தி வைத்திருக்கிறாயே என்று மிரட்டினார்கள். அதற்கெல்லாம் மசியவேயில்லை. பிள்ளையார் என் பக்கம் இருக்கும் வரை, எனக்குக் கவலையில்லை'' என்கிறார் கல்தான்!

— லதா சேகர்




• கல்தான்!



மாங்காய் ஊறுகாய் நைவேத்தியம்

திருவனந்தபுரம் அனந்த பத்மநாபசுவாமி கோயிலில் தங்கத்திலான தேங்காய் மூடியில் மாங்காய் ஊறுகாய் வைத்துச் சுவாமிக்கு நைவேத்தியம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. வில்வ மங்கல சுவாமியார் என்பவர் அனந்தசயனப் பெருமாளை முதன்முறையாகத் தரிசித்ததும் நைவேத்தியத்திற்கு எதைப் படைப்பது என்று திகைத்தாராம். உடனே அருகிலிருந்த மாமரத்திலிருந்து மாங்காயைப் பறித்துத் தேங்காய் மூடியில் வைத்து நைவேத்தியம் செய்ய ஆரம்பித்து விட்டார். அதன் நினைவாகவே இவ்வாறு செய்யப்படுகிறது.




- இராமன்

தலைப்பாகை ப்ரியர்!



ஏ.பி. சாவ்லா பரோடாவில் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்து வருகிறார். இவர் கிராமங்களுக்குப் போகும்பொழுது விளையாட்டாக அங்கிருக்கும் ஒன்றிரண்டு தலைப்பாகைகளைக் கேட்டு வாங்கி வந்தார். பிறகு மும்முரமாக தலைப்பாகைகளைச் சேகரிப்பதை ஒரு 'ஹாபி'யாக ஆக்கிக்கொண்டார். இவர் இதுவரை வெவ்வேறு விதமான 'சைஸ்' களிலும், நிறங்களிலும் சுமார் 150 வகை தலைப்பாகைகளைச் சேகரித்துள்ளார்... இவர் பெயர் லிம்கா புக் ஆஃப் ரிகார்ட்ஸில் இடம் பெற்றுள்ளது. தற்போது தலைப்பாகை



ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளார்!

– அகமதாபாத் பாண்டு

காந்தியை முதன்முதலில் 'காந்தி யடிகள்' என்று குறிப்பிட்டுப் பத்திரிகைகளில் எழுதியவர் திரு.வி.க. சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தி அடிகளைப் பற்றிப் படித்தபோது காந்தியைக் காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டும் என தமக்குத் தோன்றியதாக 'நவசக்தி' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார் திரு.வி.க.

- புலிவலம் செந்தாமரை

புறக்கணித்தல்

ஒரு நபரை அல்லது வேலையைப் புறக்கணிப்பதை ஆங்கிலத்தில் 'பாய்காட்' என்று சொல்லுகிறோம். இந்த 'பாய்காட்' என்ற சொல் எப்படி உருவானது தெரியுமா?

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் கேப்டன் பாய்காட். இவர் 1880 ஆம்



ஆண்டு வாக்கில் நிலப் பிரபுவாக இருந்தார். இவர் தொழிலாளர்களை மிகவும் கொடுமைப்படுத்தினார். கொடுமை தாங்க முடியாத தொழிலாளர்கள், அவருடைய பண்ணையில் வேலை செய்யாமல் 'பாய்காட்'டைப் புறக்கணித்தனர். அதுவே 'பாய்காட்' என்ற சொல் உருவாகக் காரணமாக அமைந்தது.

- ஔவை ஏ.எஸ். யோகானந்தம்.

ஒருமுறை நண்பரொருவர் ஷாவிடம் ''ஏன் குடியை வெறுக்கின்றீர்கள்?'' என்று கேட்டார்.


அதற்கு பெர்னாட் ஷா, ''என் குடும்பத்தில் இருந்த முன்னோர் என்போல் பலருடைய பங்குகளையும் சேர்த்துத் தாங்களே குடித்து விட்டிருக்கிறார்கள். ஆகையால் எனக்கு அதில் எதுவும் பாக்கி இல்லாமல் போயிற்று'' என்றார்!

– எம். ஜரினா பானு



ஒருமுறை பாலஸ்தீனத்தைச் சுற்றிப் பார்க்க வந்த உல்லாசப் பயணியிடம், கலிலீ என்கிற ஏரியில் ஓடத்தில் செல்வதற்காக 25 டாலர் கட்டணம் செலுத்த வேண்டும் என்றார் வழிகாட்டி. ''ஐயோ! ரொம்ப அதிகமாக கேட்கிறீர்களே'' என்று பயந்தார் பயணி. உடனே வழிகாட்டி 'இது உலகப் புகழ் பெற்ற ஏரி. ஏசுநாதர் இதன் மீதுதான் நடந்து சென்றார்' என்றார். அதற்கு அந்த உல்லாசப் பேர்வழி பயணி, ''பிறகு இவ்வளவு பணம் கேட்டால் யார்தான் நடந்து போக முயற்சிக்க மாட்டார்கள்'' என்று ஒரு போடு போட்டார்!

- வாசுதேவன்



இக்கரையில்

காஞ்சனா தாமோதரன்

“நிலத்தைப் பயன்படுத்துவதில் கலாசார வேறுபாடுகள் உள்ள ஊர் இது. செங்களி மண் பாறைகள் நிறைந்த இடம். நீங்கள் ஏற்கெனவே படித்ததைப் பார்க்க வேண்டாமா? வாருங்கள், வாருங்கள்!” மிஸ் ராபர்ட்சன் உற்சாகக் குரலில் காற்றை மீறிக் கத்தினார்.

இந்த ஊரின் பிரத்யேகச் செங்களிமண் பாறைகள், குவார்ட்ஸ் பாறைகள், நிலப் பரப்பு எல்லாவற்றையும் பார்ப்பதற்காகப் பள்ளிக்கூடப் பயணம். பஸ்ஸை விட்டிறங்கும் போது அவளுக்கு நல்ல தூக்கக் கலக்கம். மிஸ் ராபர்ட்சன் முன் குழுமிய வகுப்பின் கண்களிலும் பஸ் பிரயாணத்தின் அலுப்பும் தூக்கமும் தெரிந்தது. உலர்ந்த குளிர் காற்றினால் அங்குமிங்குமாய் இருமல்கள் வேறு.

மிஸ் ராபர்ட்சன் மட்டும் உற்சாகமாய்த் தெரிந்தார். பகல் கனவு காணும் இலட்சியவாத ஆசிரியை அவர். நில வகைகள், நிலத்தைப் பயன்படுத்தும் முறைகள் ஆகியவற்றின் அறநெறி, அரசியல், ஆன்மா பற்றி மாணவர்களின் மனத்தைத் தொடக் கனவு காணும் ஆசிரியை. பாவம். மாணவர்கள் அவரைக் கண்டால் விலகி ஓடுபவர்களாகவே இருந்தார்கள்.

மிஸ் ராபர்ட்சன் அந்த ஊரின் சரித்திரம் பற்றிச் சுருக்கமாகப் பேசினார் - கல் உடைக்கும் தொழில், ரயில் பாதைகள், செவ்விந்தியர்களுக்கான தனிக் குடியிருப்புகள், பள்ளிகள், அரசாங்கம். நவீனக் கட்டுமானத் தொழில், குவார்ட்ஸ் கற்களை உபயோகப் படுத்துவதை நிறுத்தி, கல்லுடைப்புத் தொழில் நின்று போன காலத்துக்கு மிஸ் ராபர்ட்சன் வந்த போது, எல்லார் கண்களும் கடிகாரத்துக்கும் அவர் முகத்துக்குமாய்த் தாவிக் கொண்டிருந்தன.

“இன்னும் பத்து நாட்களில் எல்லாரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிக் கொடுக்க வேண்டும். பத்துப் பக்கங்கள். தலைப்பு: இந்த ஊரின் கலாசார முன்னேற்றத்தில் அதன் நில அமைப்பின் பங்கு. கலைகள், கட்டடங்கள், மனிதர்கள், தொழில்கள்... விஞ்ஞான ரீதியான தகவல்களுக்கு மூலங்கள் சுட்டிக் காட்ட வேண்டும். உங்கள் தனிப்பட்ட பார்வைகளையும் கலந்து எழுதுங்கள். கிளம்புங்கள். ஊர் சுற்றிப் பாருங்கள். படித்தது ஞாபகம் இருக்கட்டும். குறிப்புகள் எழுதிக் கொள்ளுங்கள். நேரத்தை வீணாக்காதீர்கள். ஏதும் வேண்டுமென்றால், நான் விடுதியில் இருப்பேன்...” இன்னும் சில உபதேசங்களுடன் மிஸ் ராபர்ட்சன் அவர்களை வழியனுப்பினார்.

முதுகுப் பையில் தண்ணீர், நொறுக்குத் தீனி, பாடப்புத்தகம், செல்ஃபோன், பூச்சிக் கடி மருந்துகள். தலைமுடி பறக்காமலிருக்க பேஸ்பால் தொப்பி. பாறை வடிவங்களைப் படம் எடுக்கக் கழுத்தில் தொங்கும் கேமரா. இடது கையில் குறிப்புப் புத்தகம். வலது கைச் சுட்டுவிரலால் காற்றில் படம் வரைந்து கொண்டே, ஒற்றையடிப் பாதையில் அனுகா நடந்தாள். வாகனங்கள் இல்லாத பகுதிகளில் நடப்பதே தனி அனுபவம்தான்.

இந்த ஊரைப் பார்க்காமலேயே ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி விட அவளால் முடியும். இது தற்பெருமையோ? வழக்கம் போல், போன அரையாண்டிலும் அவ்வளவு பாடங்களிலும் ‘ஹை ஹானர் ரோல்’. அவ்வளவு பாடங்களிலும் ஏ-ப்ளஸ் வாங்கியதால் வரும் தற்பெருமை. இல்லை. தன்னம்பிக்கை.

"அனுகாவுக்கென்ன, இந்திய மூளை. கணக்குப் போடுவதைப் பார்த்தாயா?" எப்போதும் பள்ளிப் பிள்ளைகளின் நட்பான பொறாமை. அப்பா - அம்மா இதைக் கேட்டு எப்படிச் சிரித்தார்கள். "க்ரிஸ், உனக்கு மூளையே இல்லையாம்!" அம்மா சொல்லிச் சிரிக்கவும், 'ஹ்ம்ம்ம்... நான் பாவப்பட்ட அமெரிக்கன்தானே, ரஞ்சி?" என்று அப்பாவும் சிரித்தது நினைவுக்கு வந்தது. மின்னி, பவன் எல்லாருமே படிப்பில் கட்டிகள்தான். மூளைக்கும் ஒரு தேசத்துக்கும் நேரடிச் சம்பந்தம் இருக்குமா.

அனுகா நின்றாள். இந்த ஊரைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வந்துவிட்டு, மூளையைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறது குரங்கு மனம்.

காற்றில் சுட்டு விரலால் படம் எழுதிக் கொண்டே தொடர்ந்து நடந்தாள். நான்கு இதழ் கொண்ட பூ. மேப்பிள் இலை. ஒரு பெரிய இதயம்... ஆலன் நினைவுக்கு வந்தான். 'டேட்டிங்' என்று மரியாதையுடன் அனுமதி கேட்டவனுக்கு இன்னும் பதில் சொல்லவில்லை. அம்மாவிடம் இன்னும் அனுமதி கேட்கவில்லை. ஏனோ ஒரு தயக்கம். இன்னும் புரியாத சில கேள்விகள்.

அவள் படம் எடுக்கத் துவங்கினாள். சிவப்புப் குவார்ட்ஸ் பாறைகள். குவார்ட்ஸுக்கு அடியில் மென்மையான செங்களிமண் பாறைகள். எடுத்த படங்களுக்கானக் குறிப்புகளை எழுதிக் கொண்டாள்.

"அனுகா.." பரந்த ப்ரெய்ரீ புல்வெளிக் காற்று ஆலனின் குரலில் அவள் பெயரைச் சொல்கிறதா?

"அனுகா.." ஆலனேதான். சிவப்பு அடுக்குகளாய் மினுங்கும் குவார்ட்ஸ் பாறைகளின் பின்னிருந்து ஆலன் வெளிப்பட்டான். அவள் தலை முழுதும் ஒரு பெரிய சங்கானது, காதினுள் கடல் அலைகள் ஆரவாரம் செய்தன. அவள் ஒரு காதைப் பொத்திக் கொண்டாள். "ஆலன்.." உதடுகள் மெல்ல உச்சரித்தன.

"நலமா, அனுகா?" ஆலன் புன்னகையுடன் அருகில் வந்தான்.

ப்ரெய்ரீ உருகிய தங்கமாய் அலைத்து ஓடியது. புல்வெளியின் மேல் காற்றுச் சுழல்கள் விலங்குகளின் காலடித் தடங்கள் போல் வட்ட வட்டமாய் அமுங்கித் தெரிந்தன.

"காதில் ஏதும் பிரச்னையா, அனுகா?"

கன்னங்களில் வெம்மை படர்ந்தது. காதைப் பொத்தியிருந்த கையை எடுத்தாள். "நீ எங்கே இந்தப் பக்கம், ஆலன்?"

அவன் பள்ளிக்கூடத்திலிருந்து முந்தைய நாளே வந்திருக்கிறார்கள். இன்னும் சில மணி நேரங்களில் ஊர் திரும்புகிறார்கள். "அனுகா, லீவு முடிந்த பிறகு நீ என்னைக் கூப்பிடவில்லையே." அவள் பேசாமல் நடந்தாள்.

பாறைகளுக்குப் பின்னிருந்து சிரிப்புச் சப்தம். பாறைகளைச் சுற்றி ஒற்றையடிப் பாதை வளைந்ததும் ஆலனின் பள்ளி நண்பர்கள் குழு தெரிந்தது. "ஹாய், ஆலன். ஹாய், சிநேகிதியே.."

"ஹாய்." ஆலன் குரலின் கடுப்பு அனுகாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. நண்பர் குழுவை நோக்கி ஒரு பொதுவான புன்னகையுடன் நிறுத்திக் கொண்டாள்.

ஆலன் வேகமாக நடந்து நண்பர் குழுவைக் கடந்தான். நண்பர்கள் சிரிப்பில் இப்போது ஏளனம் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. அவனையும் அவளையும் பற்றி என்ன நினைத்துச் சிரிக்கிறார்களோ. எரிச்சல் வந்தது.

ப்ரெய்ரீயின் தங்க நிறப் புல் முடிந்து ஒரு சிறு பைன்மரக் காடு துவங்கியிருந்தது. நிழலில் குளிர் இன்னும் கொஞ்சம் நடுக்கிற்று. "ஆலன், அவர்களுடன் உனக்கு ஏதும் சண்டையா?"

ஆலன் அருகில் கிடந்த ஒரு பாறை மேல் உட்கார்ந்து கொண்டான். முதுகுப்பையிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தவாறே அவளிடம் கேட்டான்: "அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று பார்த்தாயா?"

அனுகா கவனித்துப் பார்க்கவில்லை. "அனுகா, அது ஒரு போதை மருந்துக் கூட்டம். இவர்களின் அந்தப் பழக்கத்துக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது தெரியுமா?" தொடர்ந்தான்: "எங்கள் பள்ளிக் கூடத்தின் சிறிய வயதுப் பிள்ளைகளுக்கு முதலில் இலவசமாகக் கொடுக்க வேண்டியது. பழக்கத்துக்கு அவர்கள் அடிமையான பிறகு அவர்களிடம் பெரும் பணத்திற்குப் போதை மருந்துகளை விற்க வேண்டியது."


"இந்த விஷயத்தினால் என் வகுப்புப் பெண் ஒருத்திக்குப் பள்ளியிலிருந்து சீட்டு கிழித்தார்கள், ஆலன்."

"இவர்களுக்கும் சீட்டுக் கிழியும், அனுகா. நான் என் அப்பாவிடம் சொல்லியிருக்கிறேன். அவர் அடுத்த வாரம் பிரின்சிபாலிடம் பேசப் போகிறார். இவர்களை எல்லாம்.." ஆலனால் மேற்கொண்டு பேச முடியவில்லை. குரலில் ஒரு கரகரப்பு.

"ஃபோட்டோ கிராபரைக் காதலிச்சயே... இப்ப கல்யாணத்துக்கு ஏன் தயங்கறே?"

"எப்பவும் நெகட்டிவாவே நடந்துக்கறார், அதான்!"

— அம்பை தேவா



தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த அனுகா அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் பாறைக்குப் பக்கத்திலிருந்த புல்லை ஒரு தீவிரத்துடன் பிடுங்கிக் கொண்டிருந்தான். "அனுகா, இந்தப் பழக்கம் எப்படிப் பட்டது என்று எனக்கு நன்றாகவே தெரியும்."

அனுகா நடுங்கிப் போனாள். இவனா. சுத்தமாக, தெளிவாகத் தெரியும் இவனா. அங்கிருந்து எழுந்து ஓடி விடலாம் போலிருந்தது.

ஆலன் அவள் முகத்தைப் பார்த்தான். "ஓ, நீ தப்பாய்ப் புரிந்து கொண்டாய். நான் இல்லை. என் அக்கா."

அக்கா ஏ – பிளஸ் மாணவி. பெரிய வகுப்பு மாணவர்கள் நட்பால் வந்த போதை மருந்துப் பழக்கம். முதலில் வித்தியாசம் தெரியவில்லை. பிறகு, வீட்டில் பேசுவது குறைந்திருக்கிறது. எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது. திடீர் திடீரென்று கோபம் வெடிப்பது. பல சமயங்களில் பணம் காணாமல் போவது. மார்ஜியும் ப்ரையனும் அதட்டிக் கேட்டால் சண்டை போடுவது. "உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இல்லையா?" என்கிற வசனம். நம்பியிருக்கிறார்கள். போதை மருந்தின் மிதப்பில், "சிறகு விரிக்கும் பறவை நான்," என்று மாடிக் கைப்பிடிச்சுவர் விளிம்பில் தத்தித் தத்தி நடந்து அவள் கீழே குதிக்கும் வரை நம்பியிருக்கிறார்கள். கோமா. மரணம்.

ஆலனால் மேலே பேச முடியவில்லை. பார்வை சூனியத்தை வெறித்தது. அக்கா பறவையாகிப் போனதை நேரில் கண்ட சிறுவனின் பார்வை. அனுகா ஆலனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

நினைத்துப் பார்த்தாள். 'போதை மருந்து பாதிப்பில் உங்கள் மூளை' என்ற வாச

வெள்ளை வேம்பு!

வேப்பமரம் பச்சையாக இருப்பதுதான் வழக்கம். ஆனால் அபூர்வ வெள்ளை வேப்பமரம்



ஒன்று உசிலம்பட்டி அருகே கருக்கட்டான் பட்டியில் வளர்ந்து வருகிறது. இங்குள்ள பட்டதலச்சியம்மன் கோவில் முன்பு வளரும் இந்த மரத்தைச் சுற்றி வேலி அமைத்துப் பாது காத்து வருகின்றனர்.

இந்த மரத்தைப் பார்ப்பதற்காகவே பக்தர்கள் ஏராளமானோர் வந்து செல்கின்றனர். "பட்டத்தலச்சியம்மன் அருளால இது வளருது. வேப்பங்கன்று வளர வளர எங்க ஊரும் வளர்ச்சியடையும்னு நம்பறோம்" என்கின்றனர் கருக்கட்டான்பட்டியினர்.

தகவல், படம் : எஸ். குமார்

கத்துடன், கொதிக்கும் எண்ணெயில் ஊற்றிய முட்டைகள் பொரிவதைக் காட்டும் விளம்பரம். போதை மருந்து 'வேண்டாம் என்று சொல்' என்னும் விளம்பரம். 'உங்கள் பிள்ளைகளுடன் பேசுங்கள்' என்னும் விளம்பரம். இந்த விளம்பரங்களுக்காகவே மில்லியன் கணக்கில் செலவு என்று அம்மா சொல்லியிருக்கிறாள். நண்பர்கள் வற்புறுத்தும் போது விளம்பரப் பாடங்கள் மறந்து விடுமோ.

கோபம் வந்தது. முட்டாள்தனம். வடி கட்டின முட்டாள்தனம். சுய அறிவு மழுங்குவதைக் கவர்ச்சியாக நினைக்கும் வடி கட்டின முட்டாள்தனம்.

"நன்றி, அனுகா." அவன் மெல்லத் தன் கையை விடுவித்துக் கொண்டாள். கொஞ்ச நேரம் மௌனம்.

"ஆலன், நான் ஒரு கார் வாங்கியிருக்கிறேன். டிரைவர்ஸ் லைசென்ஸ் கிடைத்தாயிற்றே." மென்மையாய்ப் பேச்சுக் கொடுத்தாள்.

"அட, என்ன கார்?" ஆலன் சகஜமாகப் பேச முயல்வது தெரிந்தது. கொஞ்சம் சங்கடப்படுவது புரிந்தது. உணர்ச்சிகளை வெளியே காண்பிப்பது அவ்வளவு தவறா என்ன?

மண் அரிப்புத் தடயங்களைத் தேடி இருவரும் நடந்தார்கள். பாதை நடுவே ஒரு துண்டுப் பச்சைப்புழு ஆசுவாசமாய்க் குளிர் காய்ந்து கொண்டிருந்தது. அனுகா அதைக் கவனமாய்ப் புல்வெளிக்கு மாற்றினாள்.

"போன மூன்று வருடங்களாக, பக்கத்து வீட்டுப் பிள்ளைகளைக் கவனித்து, நூலகத்தில் வேலை பார்த்துச் சேர்த்ததும், தாத்தா – பாட்டியின் அன்பளிப்பும் சேர்ந்து, நானாகவே வாங்கின கார்." அனுகாவின் குரலில் பெருமை. "ஒரு விளம்பரம் மூலம் கிடைத்தது. ஒரு வயதான தம்பதி. என்னைப் பார்த்ததும் அவர்கள் பேத்தி ஞாபகம் வந்ததாம். அவர்கள் பி.எம்.டபிள்யூ..."

"அட! பி.எம்.டபிள்யூ.வா?" ஆலன் கையை உயர்த்தி 'ஹை-ஃபைவ்' செய்தான். அந்த உற்சாகம் இருவரையும் தொற்றிக் கொண்டது. காரைப் பற்றிச் சொன்னாள். இரண்டு பேர் உட்காரலாம். கூரையை இறக்கலாம்-கன்வர்ட்டிபிள். பத்து வருடத்தில் பத்தாயிரம் மைல்கள் கூடப் போட்டிருக்கவில்லை. நன்றாக ஓடுகிறது. வெள்ளிச் சாம்பல் நிறம். கார் விலைக்கே அவள் சேமிப்பு சரியாக இருந்தது. இன்ஷூரன்ஸ் உட்படப் பிற செலவுகள் அப்பா, அம்மா தயவு.

மார்ஜியும் ப்ரையனும் ஆலனுக்குப் புதுக் கார் வாங்குகிறார்கள். ஜீப் கன்வர்ட்டிபிள். வெள்ளை நிறம். இன்னும் இரண்டு நாட்களில் வந்து விடும். "கார் வந்தவுடன் உங்கள் வீட்டுக்கு வந்து காண்பிக்கிறேன்" என்றான் ஆலன். முகம் இப்போது சகஜ நிலைக்குத் திரும்பியிருந்தது.

உயரமான பாறைகளின் நிழலில் காவியும் பச்சையுமாய் படர்ந்திருந்த பாசி, கூரான கல் முனைகளை மென்மையாக்கியிருந்தது. அனுகா படம் எடுத்துக் கொண்டாள். முதுகுப் பையிலிருந்து பாடப் புத்தகத்தை வெளியில் எடுத்து, ஒப்பிட்டுப் பார்த்தாள். குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்தாள்.

"ஐயோ, நேரத்தைப் பார். எங்கள் பள்ளி பஸ் கிளம்ப இன்னும் அரை மணி நேரம் தான். உன் குறிப்புகளை நான் கடன் வாங்கலாமா?" ஆலன் சிரித்தான். "செல்ஃபோனில் கூப்பிடுகிறேன். பார்க்கலாம், அனுகா." ஓடினாள். திரும்ப ஓடி வந்தான். "அனுகா, நீ முக்கியமானவள்." பதிலுக்குக் காத்திராமல் மீண்டும் ஓடினான்.

வானம் நிர்மலமாய், ஆழமாய், முடிவற்ற நீல முழுமையாய் ப்ரெய்ரி புல்வெளியின் மேல் கவிழ்ந்திருந்தது. அவளுள்ளும்.

(தொடரும்)

குடமுழுக்கு மன்னன்!

கோவில்கள் தோறும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகா கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்பது மரபு.

கும்பாபிஷேகத்தை ஆகம விதிகள் மற்றும் மந்திரங்கள் கற்றவர்கள்தான் நடத்த வேண்டும். அந்த வகையில் ஆயிரத்துக்கும் அதிகமான கோவில்களில் குடமுழுக்கு நடத்தி வைத்த பெருமைக்கு உரியவர்தான் சந்திரசேகர் என்ற ராஜா பட்டர். இவர் திருப்பரங்குன்றம் முருகன் கோவில் இரண்டாவது ஸ்தானிகர் ஆகவே பணி புரிகிறார்.

இவரது இறைப் பணியைப் பாராட்டும் விதமாக மதுரையில் சமீபத்தில் நடந்த இசைவிழா ஒன்றில் 'குடமுழுக்கு மன்னன்' என்ற பட்டம் வழங்கப்பட்டது! இந்தப் பட்டத்தை இவருக்கு நாகஸ்வர வித்வான் எம்.பி. என்.பொனுச்சாமி வழங்கினார்.



ராஜா பட்டர் அல்லூரில் உள்ள காஞ்சி மடத்தின் வேதசிவாக ஆசிரம பாடசாலையில் ஏழு வருடம் படித்துப் பட்டம் பெற்றவர். 82ம் ஆண்டு முதல், கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தி வருகிறார்.

கோவில் திருவிழா காலங்களில் சுவாமி புறப்பாட்டிற்குப் பவனி வருவதற்காக ஒட்டகங்களை வளர்த்து வருகிறார் ராஜா பட்டர்!

கடந்த இருபது ஆண்டுகளாக வேதங்களைக் கற்றுத் தரும் பள்ளி ஒன்றும் நடத்தி வருகிறார். இப்பள்ளியில் 160 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு இலவசமாக கல்வியோடு தங்குமிடம் மற்றும் உணவு கொடுத்து வேதம் கற்றுத் தருகிறார்.

இந்த வேதசிவ ஆகம பள்ளியில் மாணவர்களுக்கு, நாகஸ்வரம், தவில், திருமுறை முதலியனவற்றை அந்தந்த விதிமுறைப்படியும் மேலும் மாணவர்களுக்கு, கோவில்களில் நித்யவழிபாடுகள் செய்வது எப்படி? என்பது பற்றியும், திருவிழாக் காலங்களில் வழிபாடு நடத்துவது பற்றியும், புதிதாய் கோவில்கள் கட்ட வேண்டிய இடம் சிலையின் அளவு முதலான லட்சணங்கள் பற்றியும், பிரதிஷ்டை பண்ணக்கூடிய மூர்த்தியினைப் பற்றியும் மகா கும்பாபிஷேகம் செய்வது பற்றியும் வேத ஆகம விதிகளின்படி பயிற்றுவிக்கிறார்.

காஞ்சி சங்கராச்சாரியார் இவரைப் பாராட்டி 'சிவாகம சிரோமணி' என்ற பட்டம் வழங்கினார். அவினாசியில் 'சிவாகம வித்யாபூபதி' கரூரில் 'சிவயாக சார்வபௌம'' என்ற பட்டங்களும் சீர்காழியில் 'சிவாகம ஞான பாஸ்கர' என்றும், திருச்சுழியில் 'சிவாகம ரத்னம்' என்றும் பல பட்டங்களை ராஜா பட்டர் பெற்றுள்ளார்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' போன்ற வாசகங்கள் சொல்வதுண்டு. ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களை தரிசித்ததோடு அந்தக் கோயில்களுக்குக் கும்பாபிஷேகமும் செய்வித்தவர் ராஜா பட்டர். புண்ணியத்துக்குக் கேட்கவா வேண்டும்!

- மாரிமுத்து

மும்பை மசாலா

தேர்தலோ தேர்தல்!

'பொங்கலோ பொங்கல்' ஸ்டைலில் 'தேர்தலோ தேர்தல்' என்று கத்தலாம் போலிருக்கிறது – மும்பையில் அப்படி ஒரு தேர்தல் அலை! பிப்ரவரி 10ஆம் தேதி நடக்க இருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸும் தேசிய மாநாட்டுக் கட்சியும் கையை உதறி விட்டுத் தனித் தனியாகப் போட்டிப் போடுவதில் சிவசேனை – பிஜேபிக்கு ஏக மகிழ்ச்சி. அதை நிலைக்க வொட்டாமல் உட்கட்சிப் பூசல்களில், சிவசேனை தடுமாறுகிறது. தேர்தலில் டிக்கட் கிடைக்காதவர்களெல்லாம் 'சுயேச்சை'களாகப் போட்டியிட்டாலும் பொறுத்துக் கொள்ளலாம்; குடுகுடுவென்று பரம வைரி சகன் புஜ்பல் காலில் விழுந்து, தேசிய மாநாட்டுக் கட்சியில் சேர்ந்து விடுகிறார்களே! போதாக்குறைக்கு, அண்டர்கிரவுண்டிலிருந்த அண்டர்வர்ல்ட் டான் அருண் காவ்லி, நாம் மறந்தேவிட்ட அகில பாரதிய சேனையை திடீரென்று, உசுப்பி விட்டு, அதன் சார்பில் வேட்பாளர்களை வேறு நிற்க வைத்து, சிவசேனைக்குத் தலைவலியாகப் போகிறார்.

இது ஒரு புறமிருக்க, மக்களுக்கு 'மஸ்கா' போடும் வேலை வேறு மும்முரமாக ஆரம்பித்துவிட்டது. முதல்வர் தேஷ்முக், 'லோக்ஷாஹி தின்' என்று மாதம் ஒருமுறை மக்களை நேரில் சந்தித்து, அவர்கள் குறைகளை அரைகுறையாகக் கேட்டுக் கொள்கிறார்.

சிவசேனைக்காரர்கள், தாக்கரேவின் 75வது பிறந்த நாளை, ஜனவரி 23ல் துவங்கி, அவர் மனைவி மரித்த செப்.6 வரை, மாநில முழுவதுமாக 7,50,000 செடிகளை நட்டு, இயற்கையோடு ஒட்டிய தினமாக, விஸ்தாரமாகக் கொண்டாடப் போகிறார்களாம்! தேர்தல் நெறிமுறைகளை வேறு எல்லோரும் ஸ்டிக்ரிக்ட்டாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

நானும் நீங்களும் பஸ்ஸிலோ ரயிலிலோ பயணித்தால் யார் கண்டு கொள்ளப் போகிறார்கள்? ஆனால் எங்கள் மேயர் ஹரிஷ்வர் படேல், அலுவலக காரைத் தியாகித்துவிட்டு, ட்ரெயினில் போவதைப் பெரிசாகப் ஃபோட்டோ எடுத்துப் போட்டு விடுகிறார்களே!.... எல்லாம் நேரம்... தேர்தல் நேரம்!

நேரம் நல்ல நேரமாக இல்லாவிட்டால், காலன் தூணிலிருந்தும் வருவான், துரும்பிலிருந்தும் வருவான் போலும்! பாருங்களேன்.... போரிவிலியில் வசித்த ரத்தன்ஷி சம்பத் (74) படு உஷார் பேர்வழி. தனியாக வசிக்கும் 'சீனியர் சிடிஸன்'ஸின் பாதுகாப்பிற்காக போலீசார் நடத்தும் மீட்டிங்குகளில் தவறாமல் ஆஜராகி விடுவார். உள்ளூர் போலீசிடம் தம்மைப் பற்றிய எல்லா தகவல்களையும் பதிவு செய்து வைத்திருந்தார். வீட்டுக்கு இரட்டைக் கதவு போட்டு, தன்னைத் தவிர, காற்றைக்கூட உள்ளே புக விட மாட்டார். அப்படியும் யாரோ உள்ளே புகுந்து அவரைக் கொன்று விட்டார்களே! காவல் துறையே அசந்து நிற்கிறது. சென்ற ஒரே வருடத்துக்குள் இது பதினாலாவது சிடிஸன் கொலை; எதெதற்கோ செலவழிப்பவர்கள், பில்டிங்கில், ஒரு வாட்ச்மேனோ, செக்



• 'கபி குஷி கபி கம்'மின் நட்சத்திரக்கூட்டம்

• ரயிலில் பயணிக்கும் மேயர்



யூரிட்டி கார்டோ போட்டுக் கொள்ள ஏன் கஞ்சத்தனப் படுகிறார்கள்? என்று எரிச்சலடைகிறது போலீஸ். ம்.. கிழவர் மரித்ததுதான் மர்மமாயிருக்கிறது! எல்லாம் ஊழ்வினை!

வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்று சும்மாவா சொன்னார்கள்? பங்கு மார்க்கெட் ஊழலில், கோடிக்கணக்கானவர்களுக்கு 'ஹார்ட் அட்டாக்'கை வரவழைத்த ஹர்ஷத் மேத்தா, கடைசியில், தானா சிவில் ஹாஸ்பிடலில் 'ஹார்ட் அட்டாக்'கிலேயே போய்ச் சேர்ந்து விட்டாரே? இரண்டு மணி நேரம் இதய வலியால் துடித்தும், உடனடியாக சிகிச்சையளிக்கப்படவில்லை என்கிறார் வக்கில் மஹேஷ் ஜேத்மலானி. மேத்தா மேலிருக்கும் கிரிமினல் வழக்குகளெல்லாம் கோவிந்தாவாகி விட்டாலும், சிவில் வழக்குகள், சம்பந்தப்பட்டவர்கள் மேல் தொடருமாம்.

தொடர்ந்து வெற்றியைக் குவித்துக் கொண்டிருக்கும் 'லகானு'க்கு லேட்டஸ்ட் 'ஃபான் கிளப்' உருவாகியிருப்பது... மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள்... ஆப்கானிஸ்தானில்! இந்திய அரசு உதவிக் கொண்டிருந்த உணவு, உடை, மருந்து இத்யாதிகளுடன், ஆமீர்கான், ஒரு நல்லிணக்க தூதாக, 'ஃப்ரீ'யாக ஒரு லகான் ப்ரிண்டை அனுப்பியிருக்கிறார். அவ்வளவுதான்... அங்கேயும் ஸுப்பர் ஹிட்டாகிவிட்டது; போரால் போரடித்துப் போன மக்கள் மத்தியில், லகானுக்கு அமோக வரவேற்பு. ஆனால்... யார் யாரையோ குஷிப்படுத்தத் தெரிந்த ஆமீர்கான், தன்னுடன் ஜோடியாக நடித்த கிரேஸிசிங்கை வருத்தப்பட வைத்து விட்டாரே! பிரிட்டானியா டீமுடன், லகான் டீம் மும்பையில் ஆடிய 'லைவ்' மாட்சுக்கு, தம்மை அழைக்கவில்லையே என்று அம்மணிக்கு ஒரே வருத்தம்!

வருத்தமும் மகிழ்ச்சியும் மாறி மாறிதான் வரும் போலும். அதுதான் தலைப்பிலேயே 'கபி குஷி கபி கம்' என்று போட்டு விட்டார்களோ? கரன் ஜோஹார் இயக்கியிருக்கும் இந்த நட்சத்திரக் குவியல் படத்தை முதலில் 'ஆஹா, ஓஹோ, ஷாருக், அமிதாப்புக்கெல்லாம் புத்துயிர் ஊட்டியிருக்கிறது' என்று பாராட்டினார்கள். அப்புறம், குறைந்தது அரை டஜன் கைகுட்டைகளை எடுத்துப் போனால் தான் படம் பார்க்க முடியும்... அவ்வளவு அழுகை என்றார்கள். பிறகு படத்தில் எக்கச்சக்க தேசிய உணர்ச்சி என்றார்கள். இப்போதோ, 'ஐயோ, நம் நாட்டின் மானமே கப்பலேறி விட்டது! கஜோலின் பையன், லண்டனில் நம் தேசிய கீதத்தைப் பாடுவதாக இருக்கும் காட்சியை உடனே கத்தரிக்க வேண்டும்; இல்லாவிட்டால்...!' என்று கலாட்டா செய்கிறார்கள். தேசிய கீதத்தை இயக்கும்போது எல்லோரும் மரியாதையாக எழுந்து நிற்க வேண்டுமென்பது நியதி: ஆனால் தியேட்டரில் படம் பார்ப்பவர்கள் கால் மேல் கால் போட்டுக் கொண்டல்லவா உட்கார்ந்திருக்கிறார்கள்? இது அவமரியாதை என்கிறார்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள். முடிவு எப்படியோ... குஷியா? 'கம்'மா?



• தாக்கரேவுக்கு 75

- ஜெயஸ்ரீ ராஜ்

அன்றைய நாள் குறித்த பதிவுமில்லாமல் முன்னால் நடந்தது, நடக்குமோ என்று ஐயப்படுவது என்று நினைத்த மாதிரி எழுதுவது கொஞ்சம் விசித்திரமாக இருந்தபோதும் வேறு வழியில்லை. இதை வாசிக்கக் கிடைக்கிற யாராவது இது நாட்குறிப்பா என்று யோசிக்கவும் சந்தேகிக்கவும் கூடும். எழுதும் போது எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது.

2

மினி தொடர்

தமயந்தி

நேற்று இரவு எழுதிக் கொண்டிருந்த போது எனக்குள் நிலவிய மனநிலையும் அது குறித்த உணர்வும் இதுவரை ஏற்பட்டதில்லை. அது மிக முக்கியமானதாகத் தோன்றுகிறது. எழுதி முடித்தபோது விரல்கள் மரத்திருந்தன. கண்கள் சோர்வாயிருந்தன. உடலின் கணுக்களில் சோர்வை மீறின வலியிருந்தது. எழுதி முடித்தப் பிறகு அந்த நான்கு பக்கங்களைக் கிழித்துக்கூட போட்டு விடலாமென்று தோன்றிற்று. மூளையினுள் ஒரு விசித்திரக் குள்ளன் தோன்றி 'கோழை கோழை' என்றான். அவனது சிவப்புநிற குல்லாவும் மஞ்சள் நிற மேல்சட்டையும் கூட விசித்திரமாயிருந்தன.


அப்பாவின் கட்சித் தலைவர் காலையில் வீட்டுக்கு வந்திருந்தார். அப்பா அவரை வரவேற்றதில் அத்தனை உற்சாகமில்லை என்று தோன்றிற்று. இதற்கு முன் ஓரிரண்டு முறை அவர் வீட்டுக்கு வந்தபோது அப்பா மிகுந்த உற்சாகத்துடன் ஒவ்வொரு விஷயத்தையும் அணுகினார். தலைவர் உட்கார்வதற்கென்று ஒதுக்கப்பட்டிருந்த நாற்காலி கூடுதலாக ஒருமுறை துடைக்கப்பட்டது. இன்று அவராகவே ஒருநாற்காலியை இழுத்து உட்கார்ந்தார். இயல்பாக நாற்காலி இடுக்கிலிருந்த ஒரு நூலை வலது கையால் இழுத்து கீழே வீசினார்.

"ஆபீஸ் பக்கம் வர்றதில்லே?" என்றார் அப்பாவைப் பார்த்து.

"வர முடியலை. வேற ஜோலி சிலது



சங்கரியின் நாட்குறிப்பு



வந்துருச்சு."

"சங்கரி இருக்கா?"

"ம்."

"கூப்பிடுமோய்."

அப்பா கூப்பிடுவதற்குள் தலைவர் முன் வந்து நின்றேன். "எப்டிருக்கே?" என்றார் விட்டத்தைப் பார்த்து. நான் எதுவும் பேசாமல் நின்றேன். அவர் இடது காலின் மேல் வலது காலைப் போட்டுக் கொண்டு அப்பாவைப் பார்த்து, "கேஸெல்லாம் தேவையா? நீங்க சொல்லப் படாதா?" என்றார். அப்பாவும் அசையாது உட்கார்ந்திருந்தார். "அந்த பாஸ்கரன் பய ஒரு தீவிர வாதி. தீவிரவாதினா தெரியுமாப்பா?

'பொடோ' வந்தா உள்ள போவக் கூடிய ஆளு. புரியுதில்லே?'' என்றார் மிரட்டும் வகையில்.

''அரிசி விலை ஏறிருச்சு போல.'' என்றேன். அவர் கொஞ்சம் ஆச்சர்யமாக கண்களை விரித்துப் பார்த்து, "பஸ் கட்டணம் கூடத்தான் ஏறிருச்சு. தெரியுமில்லே?" என்றார்.

"சட்டக் கல்லூரி மாணவர்கள் மேல போலீஸ் தடியடி நடந்திருச்சு" என்றேன்.

''ஊரெல்லாம் ஸ்டிரைக் நடக்குது. தெரியும்.''

"கேஸை வாபஸ் வாங்கற வரைக்கும் விடமாட்டாங்கனு நெனைக்கறேன்."

"அரிசிலயும் மாணவர் மேலயும் கை வச்சா பிரச்னைதான்" என்று சிரித்தார். "நல்லா பேசுற."

"டீ சாப்பிடுறீங்களா?"

''தண்ணி மட்டும் கொடு. அல்சர் வந்ததுலருந்து காப்பி தண்ணி சாப்பிடுறத விட்டாச்சு.''

நான் எழுவதற்குள் அப்பா உள்ளே போய் பெரிய செம்பில் நீரும் தம்ளரும் கொண்டு வந்தார். தண்ணீரை அண்ணாந்து குடித்தபடி. "அந்த ரமணிப் பயல நம்பாத. எங்கனாச்சும் கடனகிடன வாங்கிக்கிட்டுத் திருப்பிக் கொடுக்காம அடி வாக்கியிருப்பான்" என்றார் நெஞ்சில் வழிந்திருந்த நீரைத் துடைத்தபடி.

"பொடோ சட்டம் வந்தா எப்படி பயனாகும்னு தெரியலை. ஏற்கெனவே சிவசுப்பிரமணியத்தை நிறைய சார்ஜ்ல உள்ள வச்சிருக்கு" என்றேன்.

அவர் என்னை உற்றுப் பார்த்து விட்டு, ''அப்ப நான் கௌம்பறேன்'' என்றார். ''அடிக்கடி வாங்க'' என்றேன். அப்பாவின் கைகளைப் பிடித்துக் குலுக்கி படியிறங்கினவர், "ஸ்ரீதரனுக்கு உம்மேல எந்தக் கோவமுமில்ல" என்றார்.

ஸ்ரீதரனின் முன் கதையை வசந்தாதான் என்னிடம் சொன்னது. கிருஷ்ணாபுரம் கோயிலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னால் போனபோது மத்தியானம் ஒரு மர நிழலில் படுத்திருந்த பாஸ்கரன், ''அது எதுக்கு இப்ப? யார் யார் வச்சுருக்கானு முன் கதைச் சுருக்கம்?'' என்றான். வசந்தா கொஞ்ச நேரம் அமைதியாகிப் பிறகு கிசுகிசுப்பான குரலில் "நம்ம சிவன்கோவில் தெரு மல்லிகா இல்லே அவதான்" என்றாள்.


மல்லிகாவை நான் பார்த்திருக்கிறேன். அவளைப் போலவே இரு பிள்ளைகளுடன் பஜார் தெருவில் எதிர்படும்போது புன்னகைப்பாள். வருஷத்திற்கு ஒருமுறை அவள் கணவன் வெளிநாட்டிலிருந்து வருவான். அவ்வாறான சமயங்களில் மல்லிகாவின் முகத்தில் நிறைய சந்தோஷமிருக்கும். "அவர் வந்திருக்கார்" என்பாள் புன்னகையுடன். அவளது மற்ற நேரத்து வெறும் வெற்றுப் புன்னகைகள் நினைவில் வந்து போகும் வசந்தாவின் குற்றச்சாட்டோடு மல்லிகாவைத் தொடர்புபடுத்த முடியாமல் இந்த நிமிஷம்கூட மனம் குழம்பிப் போகிறது. தனியாக இருக்கும் பெண்கள் குறித்த மற்றவர்களின் அக்கறை கொஞ்சம் மலைப்பாயிருக்கிறது.

சுவரின் மேலே ஒரு மரப்பல்லி விளக்கை நோக்கி நகர்ந்தபடியே இருக்கிறது. தேன்மொழியால் ஒரு பல்லியின் ஊருதலைக் கூட சகித்துக் கொள்ள இயலாது. முதலைகள்கூட அவளுக்குப் பிரம்மாண்ட உருவாகத்தான் தோன்றுகின்றன.

"பார்த்து சங்கரி. உன்னையும் பா கரனையும் சேர்த்துப் பேசுறாங். வசந்தாட்ட வீட்டுச் செலவுக்குக்கூட எதுவு கொடுக்கரதில்லனு ஊர்ல பேச்சு."

வேலூரின் இன்னொரு பக்கம்!

வேலூர் நகரச் சிறப்பிதழ்!



* புதிய தொழில்களுக்கு வாய்ப்புள்ள நகரமா... - வேலூர்?
* வேலூர் கோட்டை சமூக விரோதிகளின் புகலிடமா?
* வரலாற்றுப் பக்கங்களில் வேலூரின் பங்களிப்புக்கு மகா பஞ்சமா?
* தோலாடைக் கழிவுகள் தொடரும் பயங்கரமா?
* வேலூர் சிறையில் போதைப் பொருள் வியாபாரமா?

- உங்களின் பெருமைமிக்க நகர் பற்றி நீங்கள் கண்டது, கேட்டது, பார்த்தது, படித்தது எல்லாவற்றையும் உடனே எங்களுக்காக எழுதி அனுப்புங்கள்! கடைசி தேதி வரை காத்திருக்க வேண்டாம். கடைசி தேதி : 31.1.2002.

"ஊரெல்லாம் வசந்தாக்கள் இருக்கறாங்க போல."

"நாலு பேர் பேசுறத அலட்சியப்படுத்தாத சங்கரி. பேரு கெட்டுரும்."

ரமணி மனைவியின் கறுத்த முகம் நினைவுக்கு வந்தது. "படிப்பறிவு இல்லாம நாசமா போயிட்டோம். அரிஷ்டம்னு குமரி மாவட்டத்து சாராயத்துக்கு லைசன்ஸ் வாங்கப் பார்த்தார். கிடைக்கல. பசி. சாராயம் காய்ச்சினா புள்ளங்க சாப்பிட்டுச்சு. புத்தியிழந்து போனோம். கீழத்தெரு சம்முவம் எந்தம்பி முறை. கண் போயிருச்சு தாயி. 'லட்சுமி இப்படி ஆயிருச்சேனு' அவம் பொஞ்சாதி அழுவுறா. உசிரு பூடுங்குறாப்ல குல் நடுங்குது. ஆஸ்பத்திரிக்குப் போனா பத்துப் பதினைஞ்சி உடம்பு. ஐயோ ஐயோனு அலறல்."

கண்கள் நேற்றைய தினம் போல் சோர்வடையத் தொடங்குகின்றன. அந்த மரப்பல்லி விளக்கினருகே வந்தமர்ந்த பூச்சிகளை லாகவமாக, பெரும் போராட்டங்களின்றி விழுங்குகின்றது. மழை வருகிறாற்போல் மண் வாசனை காற்றின் திசையெங்கும் அலை பாய்கிறது. விரல்களில், நமுத்துப் போகிறாற்போல குளிரில் இறுக்கம் தொனிக்கும் உணர்வு மேவுகிறது. அப்பா எழுந்து வெளிக்கதவைத் திறந்து பாத்ரூம் போகிறார். மின்னலொன்று சுவர் கதவு திறந்த இடைவெளியில் பளிச்சென்று கடந்து போனது. எங்கோ வெடிச் சப்தம் கேட்கிறது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் புது வருடம். நாடாளுமன்றத்தினுள் துப்பாக்கிச்சூடு நடத்தினவர்கள் தொடர்பாக சில நாட்களுக்கு முன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹாசிப்பாய் நோன்புக் கஞ்சி கொடுத்தபடி "தேசத்துல இதுநா வரை இப்படி நடந்ததில்ல" என்றார், சம்பவம் நடந்த அன்று. காங்கிரஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறை சொன்னது. மதுரை வரை பஸ்ஸில் போய் வந்த மங்கம்மா, "டிக்கெட் அம்பது ரூவா ஆயிடுச்சு தாயி. மீனாட்சிய மாசம் ஒருக்கா போயிப் பார்த்தா மனசுக்கு நிம்மதியாயிருக்கும். ஒரு தடவ போய் வந்தா நூறு ரூவா முழுசா போயிருது. ம்" என்று பெருமூச்சு விட்டது நினைவுக்கு வருகிறது. அப்பா உள்ளே வந்து கதவைத் தாழ் போடுகிறார். இடி பெரியதாக இடித்ததும் மின்சாரம் திடீரென்று போயிற்று. "அப்பா" என்கிறேன். பதிலில்லை.

(தொடரும்)



"விலைவாசி மனுசன எப்படில்லாம் மாத்திடுச்சு!"

"என்னவாம்?"

"கல்யாண மண்டபத்துல மொய் எழுதற இடத்துல விலைவாசிப் பட்டியல் வச்சுருக்காங்க!"

- அம்பை தேவா



"வசந்த நிவாஸ்ங்கிற உங்களோட வீட்டுப் பேரை ஏன் 'வசந்தபவன்'னு மாத்திக்கிட்டீங்க?"

"என் மகளைப் பெண் பார்க்க வர்றவங்கள்லாம் திருப்தியா டிஃபன் சாப்பிட்டுப் போறதோடு சரி. நான் என்ன பண்றது சொல்லுங்க...?"

- சீர்காழி ரேவதி

"'லோ பட்ஜெட்' படம் கேள்விப் பட்டிருக்கேன்... அதென்ன 'லோ லோ பட்ஜெட்' படம்?"

"பட அதிபர் தர வேண்டிய பணத்துக்காக வேற 'லோ'ன்னு அலைய வேண்டியிருக்கும்!"

- விசு



* ஓசாமா பின் லேடன் படம் வரையலியா?





* என்ன பேசிக்கிறீங்க? எந்த படத்துக்குப் போகலாம்னா? எந்த புஸ்தகம் வாங்கலாம்னா



* இன்னிக்கு என்ன தகவலுங்க? (குட்டிப் பையனுக்குத்தாங்க!)



* ஏங்க, ஒருத்தரு கூடவா வர





* புஸ்தகத்தை வாங்காமயே படிச்சுடுவார் போலிருக்கு!

படிப்பும் சிரிப்பும்!

— சாரு

படங்கள்: வெங்கடேஷ்



* புஸ்தகம் வாங்கிப் படிக்கவேண்ணா பாவமில்லே, ஆப்பிள் ஜூஸ் குடி!



* அறுசுவை அரசின் கான்டீனில்தான் எக்கச்சக்க கூட்டமாம்!





* காலி நாற்காலியைக் கண்டு பயந்துடமாட்டேன்!



* ஐயோ, ஹைகின்பாதம்ஸ் ஆபீஸ் இல்லீங்க, இது புக்ஃபேர் என்ட்ரன்ஸ்!



* இந்த ஸ்டால்ல சினிமா பாட்டு கேட்கும்னு நினைச்சீங்களா...!

அவர் தும்மினால் துணுக்கு, கனைத்தால் கட்டுரை, இருமினால் இரண்டு பக்க பேட்டி என்று பத்திரிகைகள் விழுந்து விழுந்து வெளியிட்ட காலம் ஒன்று உண்டு. இன்று டி.எம்.எஸ்ஸுக்கு அவருடைய குரல் ஒன்றே பிரதிநிதி. They continue to stir nostalgia. இருந்தாலும் சௌந்தர்ராஜன் என்ற மனிதரின் வாழ்க்கையைப் பற்றி இன்றைய தலைமுறையினருக்கு அதிகம் தெரியாது. அவர் முறையான சங்கீதம் பயின்றது இரண்டே வருடங்கள்தான் என்பதும் கதா காலட்சேபம் செய்த தந்தைக்குப் பின் பாட்டுப் பாடித்தான் இசைத் துறைக்கு வந்தார் என்பதும் ஜெயா பேட்டியில் அவர் சொல்லித்தான் தெரிந்திருக்கும். திரைப் பாடல்களில் முதலில் ஸ்வரத்தை மட்டும் பழகிக் கொண்டு பிறகுதான் பாட்டைப் பாடினாராம். பாடுவதற்கு முன், படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்குப் போய், கதையின் சூழ்நிலை, பாட வேண்டிய கட்டம் முதலானவற்றை நேரில் தெரிந்து வைத்துக் கொள்வது தன் வழக்கம் என்றார். (இன்றைய பாடகர்களுக்காகச் சொன்னதோ?)

பேட்டிக் கண்ட சுதாங்கன் அகழ்வாராய்ச்சி நிபுணர். Use all the brains you have and all the brains you can borrow என்ற அறிவுரையைப் பின்பற்றி, டி.எம்.எஸ்ஸுக்கே மறந்துவிட்ட பல செய்திகளைத் தோண்டித் துருவிக் கைவசம் வைத்திருந்தார். உதாரணத்துக்கு ஒன்று : 1. டி.எம்.எஸ். 'தேவகி' என்ற படத்தில் பரதேசிப் பண்டாரமாக நடித்து முதன்முதலாகப் பாட்டுப் பாடினார். டைட்டிலில் அவர் பெயரை 'பிச்சைக்காரன் சௌந்தர்ராஜன்' என்று போட்டிருந்தார்கள்!



* சாலமன் பாப்பையா

அடுத்தடுத்து இரண்டு நாள் நடைபெற்ற போதிலும் enjoyable நிகழ்ச்சி - டி.எம்.எஸ்.ஸின் பாட்டைப் போலவே.



* டி.எம்.எஸ்.

பல வருடமாக சன் டீவியின் ஆஸ்தான பேச்சாளராகத் திகழ்ந்து வருகிறார் சாலமன் பாப்பையா. அவருடைய திருக்குறள் சிற்றுரைகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு.

ஒரு நல்ல நாட்டுக்கு அழகு என்னென்ன என்பதைக் கூறும் குறளை விளக்கியவர், செறுபகை, உட்பகை குறித்துச் சொன்னது சுவாரஸ்யமாக இருந்தது. வெளிநாட்டிலிருந்து வரும் பகைதான் கொடியது என்றவர், 'கடைக்குப் போகிறோம். நேற்றுவரை இரண்டு ரூபாய்க்கு விற்ற பொருளை இன்று பத்து ரூபாய் என்கிறார்கள். இந்தத் திடீர் விலை உயர்வுதான் உட்பகை,' என்று குறிப்பிட்டார்.

என்ன செய்ய? இது ஒரு நச்சுச் சுழல். One man's wage rise is another man's price increase என்பது பொருளாதார அரிச்சுவடி.

சிறிது கால இடைவெளிக்குப் பின்

தும்மினால் துணுக்கு, கனைத்தால் கட்டுரை!

வினோத்

ஆலிஷாவின் புதிய ஆல்பம் வெளி வந்திருக்கிறது. ஸ்டார் நியூஸ்காரர் அவரைப் பாராட்டிவிட்டு, ஆல்பத்திலிருந்து ஒரு பாட்டைப் பாடிக் காட்டும்படி கேட்டுக் கொண்டார். 'இஷ்க்கு ஹை' (என்பது போல ஒலித்தது) பாடினார் ஆலிஷா. பின்னணியில் வாத்திய இரைச்சல் இல்லாமல் பாடியதால் கேட்கச் சுகமாயிருந்தது. சற்றே கிசுகிசுப்பான குரல் கவர்ச்சி சேர்க்கிறது.

ஆலிஷாவை 'பேபி டால்' என்று எல்லாரும் குறிப்பிடுவதாகக் கூறினார் ஸ்டார்க்காரர். பொம்மை முகம் இருப்பதால் அப்படிச் சொல்லியிருக்கலாம். அடுத்து, 'உங்களை இந்திய மடோனா என்கிறார்கள்' என்றார். ஆலிஷா மறுக்கவில்லை. இருக்கட்டும். In the future every one will be famous for 15 minutes என்று சில அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

'**மோ**ட்டார் பைக்கின் சப்தம் கேட்டாலே போதும், எங்கள் ஜனங்கள் குடிசைக்குள் ஓடி ஒளிந்து கொள்கிறார்கள். போலீஸ் வருகிறது என்று பயம். எந்த வழக்கிலாவது குற்றவாளி கிடைக்கவில்லை என்றால் இவர்களில் ஒருவரைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள்.'

இவ்வாறு சொன்னவர் பனை, தென்னை தொழிலாளர் சங்கத்தின் தலைவரான எம்.என். ராஜா (ஜெயா) பரிதாபமான செய்தி.

கள் இறக்க அனுமதிக்கப்பட்டால் இந்த அவல நிலை தீரும் என்பது இவருடைய வாதம். தொழிலாளருக்கும் வருமானம், அரசாங்கத்துக்கும் நிதி என்று புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொன்னார். ஆந்திராவிலும் கேரளாவிலும் கர்னாடகாவிலும் கள் இறக்குவது சட்டபூர்வமான, பயனுள்ள தொழிலாக இருக்கும் போது, தமிழ்நாட்டில் மட்டும் தடை ஏன்? என்கிறார்.

தமிழக அரசும் அந்த வழியில் ஆலோசித்து வருவதாக வதந்தி உலவுகிறது. எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன் ராஜாஜி கள்ளுக்கடை மறியல்கள் நடத்தினார். ஆனால், prefer a loss to a dishonest gain என்று நம்பியவர் அவர். இன்றைய ஆட்சியாளர்களுக்கு அதெல்லாம் கட்டுப்படியாகாது.

ராஜ் டி.வியின் பத்தரை மணி ஆங்கிலச் செய்தியில் ஓரிரு மாதங்களுக்கு முன்பிருந்த அழகு குறைந்திருக்கிறது. அதே ஆழம் - அதே அலசல் இருப்பது உண்மையே. ஆனால் ஆப்கானிஸ்தான் நிலைமை, டெல்லிக்கு விஜயம் செய்யும் மேனாட்டாரின் கருத்து, பாகிஸ்தான் பயங்கரம், அமெரிக்காவின் கண்ணோட்டம், பிரிட்டிஷ் பிரதமரின் அணுகுமுறை - இப்படிப்பட்ட 'அன்னிய' செய்திகளின் ஆக்கிரமிப்பு அதிகரித்து விட்டதால், ஹிந்துவில் தலையங்கத்துக்குப் பக்கத்தில் வரும் கட்டுரையைப் படிக்கிற மாதிரி இருக்கிறது. மீதியுள்ள இரண்டு மூன்று நிமிடங்களில், போனால் போகிறதென்று தமிழ்நாட்டுச் செய்திகளும் சொல்கிறார்கள்.

இதற்குக் காரணம் என்னத்தையாவது விமரிசனம் பண்ணப் போய், என்னத்தையாவது வம்பை விலைக்கு வாங்கிக் கொள்வானேன் என்ற ஜாக்கிரதையுணர்வாக இருக்கலாம். It is much safer to obey than to rule என்று நினைக்க ஆரம்பித்து விட்டார்கள் போலிருக்கிறது. ●

“எங்க பிழைப்பைக்

— குமுறுகிறார் நிஷா

“காதல் எல்லோருக்குள்ளேயும் இருக்கு. எல்லாருமே ஒவ்வொருத்தரைக் காதலிச்சுட்டுதான் இருக்காங்க. ஆனா கல்யாணத்துக்கப்புறம் மனைவி, புருஷனையும், புருஷன் மனைவியையும் காதலிக்கிறதுதான் பெஸ்ட். என்ன சொல்றீங்க?

— அண்ணாநகர் பரமகுடி



ரெஸ்டாரெண்டில் ஐஸ்கிரீமைச் சாப்பிட்டுக் கொண்டே சக தோழிகளிடம் இப்படி லெக்சரடித்துக் கொண்டிருந்தார் சின்னத்திரை நிஷா.

“அட அசத்திட்டீங்களே...” என்று பின்னாலிருந்து குரல் கொடுத்துவிட்டு முன் பக்கம் சென்றால், முகத்தில் விழுந்த தலைமுடியை வலக்கையால் கோதியபடி வெட்கச் சிரிப்புச் சிரிக்கிறார்.

“ஊரு, நகரம், நாடு, உலகம் பூரா காதல் பத்திதான் பேசறாங்க. நான் எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னேன்” என்றவர், தோழிகள் பக்கம் திரும்பி அறிவுரையைத் தொடர்ந்தார்!

“இப்பல்லாம் பொண்ணுங்க ‘போல்டா’ இருந்தாதான் பிழைக்க முடியும். மனசுல துணிச்சல் வேணும். அதே நேரத்தில் கலாசாரத்தையும் பண்பாட்டையும் மீறக் கூடாது. அப்பதான் வாழ்க்கை நல்லா அமையும்...” என்று மேலே பேசப் போனவரை பெரிய கும்பிடு போட்டு அமர்த்தினோம். (என்ன செய்ய? தொடர்கள் பாதிப்பு!)

“ஏதோ ஒரு கேரக்டர் மனசுக்குள்ள கிடந்து அரிச்சுக்கிட்டே இருக்குன்னு முன்னால சொன்னீங்களே?” என்றதும் சீரியஸாகி தொடங்கினார்.

“மூன்றாம் பிறைல ஸ்ரீதேவி பண்ணிருப்பாங்களே, அந்த மாதிரி ஒரு கேரக்டர் பண்ணினா வாழ்க்கையில போதும்ங்க... ரொம்ப சந்தோஷமா இருக்கும். ஆனா டீ.வி. தொடர்ல நடிச்சுகிட்டு அதெல்லாம் சாத்தியமான்னுதான் புரியலை” என்றவரிடம் “உங்க நடிப்புத் திறமைக்கு வாய்ப்பு நிச்சயம் தேடி வரும்” என்று ஆறுதல் சொன்னோம்.

“சித்தியில ஸ்வேதா கேரக்டர் பண்ணினதுக்குப் பிறகு, தொடர் முடிஞ்சுட்டாலும், மக்கள் மனசுல நான் இருந்துட்டுத்தான் இருக்கேன். வடபழனியில ஷாப்பிங் போனா, டிரெயின்ல ட்ராவல் பண்ணினா ஸ்வேதா ஸ்வேதான்னு அன்பா பேசறாங்க. அந்த மாதிரி நேரத்துல மனசுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? புல்லரிச்சுப் போயிடறேன்!” என்று மெய்சிலிர்த்த நிஷா, தற்போது

கங்கா யமுனா சரஸ்வதி, காவியாஞ்சலி, தெலுங்கு தொடர்கள் என்று பிஸியாக இருக்கிறார்.

நடிப்புத் தவிர இனிமையாக பாடவும் ஆடவும் செய்வாராம்!

"பாட்டுப் பாடறேன் கேட்கறீங்களா?" என்று ஆரம்பித்ததுமே "ஐயோ... உங்க பேச்சே இவ்வளவு இனிமையா இருக்கே, பாடலும் இனிமையாத்தான் இருக்கும்" என்று கிலோ கணக்கில் ஐஸ் வைத்துவிட்டு ஐஸ்கிரீமை பார்த்தால்...



கெடுக்கலாமா?"

காலியாகியிருந்தது!

"சினிமா நடிகைகள் எல்லாம் டீ.விக்கு வந்துட்டாங்களே... நீங்க சினிமாவுக்குப் போகலையா?"

"சான்ஸ் கிடைச்சா போகமாட்டோமா என்ன? சினிமா நடிகைகள் டீ.விக்கு வர்றதால எங்களுக்குத்தான் பாதிப்பு – சம்பள தொகையிலயிருந்து எல்லாத்துலயும்! அவங்க பண்ற கேரக்டரை நாங்க பண்ண முடியாதுதான். அதுக்காக நாங்க முன்னேற வேண்டாமா? எங்க பிழைப்பைக் கெடுக்கலாமா?" என்றவரிடம் "தொடர்னா கண்ணீரும் சோகமும்தான்கிற மாதிரி ஆகிப்போச்சே..." என்று ஆரம்பித்தால், "வாழ்க்கையில நடக்கிறதைத்தான் தொடர்ல காண்பிக்கிறாங்க. பெரும்பாலானவங்களோட வாழ்க்கையில சந்தோஷத்தை விட கண்ணீர்தான் அதிகமா இருக்கு. அதனாலதான் இப்படின்னு நினைக்கிறேன்" என்கிறார்.

நிஷா என்றால் இந்தியில் இரவு என்றும், கன்னடம், தெலுங்கில் போதையென்றும் அர்த்தமாம்!

இவருக்கு கவிதைப் படிப்பதில் ரொம்ப ப்ரியமாம். எப்போதோ படித்த, யாரோ எழுதிய ஒரு கவிதை இப்போதும் மனத்துக்குள்ளேயே இருக்கிறதாம். அந்தக் கவிதை: "பூக்கள் இருக்கும் இடமெல்லாம் நானிருப்பேன், பூவாக நீயிருப்பாயா?"

"அட, நீங்க எப்ப கவிதையெழுதப் போறீங்க?"

"போதும்ங்க நாட்டுல நிறைய கவிஞர்கள் இருக்காங்க... இதுல நான் வேறயா?" அதுவும் சரிதான்!

— சலாம்ஜி

அட்டை வண்ணப்படம்: ஆல்பர்ட்



சுமி சூப்பர் மார்க்கெட்

இரண்டு நெய்யப்பம் + நிகா!

ரீவிக்ஸா 'எங்கே போய்ட்டே சுமி?'ன்னு கேட்டு உருகி உருகி எழுதின, எழுதாத அத்தனை பேருக்கும் முதற்கண் தேங்க்ஸ்.

நான் எங்கேயும் போகலைன்றதையும் கல்கி ஆசிரியர் குழுதான் என்னை ஓரங்கட்ட முடிவு செஞ்சதுன்றதையும் சொல்லிடறேன்.

அப்படி ஓரங்கட்டினப்போ உட்கார்ந்து ஒரு புக் படிச்சேன். அதிலேருந்து ஒரு பகுதி:

கல்லங்குளம் கல்பாத்தி அருகில் ஒரு தேவி க்ஷேத்ரம். அங்கே கச்சேரி செய்தால் இரண்டு ரூபாய் பணமும் இரண்டு நெய் அப்பமும் கொடுப்பார்கள். "எனக்குப் பணம் வேண்டாம். இன்னும் இரண்டு அப்பம் கொடுங்கோ" என்பேன் நான். எனக்குத் தனியாக நெய் அப்பம் பொரித்துத் தருவார்கள். வெகு ருசியாய் இருக்கும்.

எழுதினது யாருன்னு நினைக்கறீங்க...? பாலக்காட்டுக்காரர்ன்றது புரிஞ்சிருக்கும். கண்டுபிடிக்க முடியலைன்னா கடைசி பாரா வர வரைக்கும் காத்திருக்கணும் மனசுல ஆயோ?



• இன்னும் இரண்டு நெய்யப்பம்

மனசுல ஆகாத நிறைய காட்சிகளோட ஒரு டாகுமென்டரி படம் பார்த்தேன். The saga of a poetன்னு பாரதியாரைப் பற்றி சாஹித்ய அகாடமி தயாரிச்ச படம்.

கார்த்திகேசு சிவத்தம்பி, பாரதியார் எப்படி ஒரு இலக்கிய டர்னிங் ப்பாயின்டுன்னு பேசினார். நடு நடுவே பாரதியாரோட மார்பளவு சிலைகளைக் காண்பிச்சாங்க. அப்புறம் அவரோட கவிதைகளின் கையெழுத்துப் பிரதிகள். கொஞ்சம் தெருக்கூத்து, நவீன ஓவியம், பரத நாட்டியம், கர்னாடிக் மியூசிக், எல்லாத்துலயும் பாரதியார் இன்ஃப்ளுயன்ஸ் நேரடியாவோ மறைமுகமாவோ இருக்குன்றதைக் எஸ்டாப்லிஷ் பண்ண ரொம்ப கஷ்டப்பட்டிருக்காங்க. முயற்சியைப் புரிஞ்சுக்க முடியற அளவுக்குப் பாராட்ட முடியலை.

ஒட்டுத்துணி வேலை மாதிரி அங்கங்கே பளிச்சுனு இருக்கு. ஆனா தொடர்ச்சியில்லை. எங்கேருந்து எங்க போறோம்ன்றது புரியலை. பெண் விடுதலை பற்றிச் சொல்ல வரும்போது ஒரு மிடில் ஏஜ்ட் அம்மாவும் இளம் பெண்ணும் மொட்டை மாடியில கும்மியடிக்கற காட்சி வருது; பழைய சினிமாலேருந்து பாரதி பாட்டுக்கு குமாரி கமலா ஆடின நாட்டியம் கிளிப்பிங்ஸ் வருது; திடீர்னு கரும்புச் சாறு பிழியற காட்சி வருது; மாந்தோப்பில் நிறைய காய்ச்சு தொங்கற வளமையும் செழுமையும் ரொம்ப நேரத்துக்கு வருது; யோகம் பற்றின கவிதைக்கு ஒருத்தர் பிராணாயாமம் செய்யற காட்சியை நேரடியா காட்டறாங்க. எப்போ குறியீடு காட்சி வரும், எப்போ நயமான காட்சி வரும், எப்போ விட்டரலான காட்சி வரும்னு சொல்ல முடியலை. டைரக்டர் கௌதமனிக்கு எல்லா கலையிலயும் நல்ல டேஸ்டும் ஈடுபாடும் இருக்கறதே கொஞ்சம் டிஸ்அட்வான்டேஜ் ஆயிடுச்சுன்னு நினைக்கறேன். இன்னும் எளிமையாவும் நேரடியாவும் சொன்னா நிறைய பேருக்குப் போய்ச் சேருமே!

ரோட் ஸேஃப்டி பத்தி ரொம்ப அக்கறையோட எளிமையா கையேடு தயார் பண்ணி, ஒவ்வொரு ஸ்கூலா போய் குழந்தைங்களுக்கு விளக்கி விநியோகமும் பண்ணிக்கிட்டிருந்தார் விஜயராகவன். இவர் சென்னை நகர காவல்துறையில் சீஃப் டிராஃபிக் வார்டனா இருந்தவர். சென்ட்ரல் கவர்ன்மென்ட் இவருக்கு அவார்ட் அறிவிச்சது. ஆனா அதை வாங்கறத்துக்குள்ள விஜயராகவன் காலமாயிட்டார். இப்போ அவர் அச்சிட்ட நிறைய புக்ஸும் போஸ்டர்களும் அவர் குடும்பத்தார்கிட்டே

இருக்காம். அதை வினியோகிக்க, தக்க நபர்களோட உதவியும் ஆதரவும் இருந்தா சௌகரியம்னு சொல்றாங்க திருமதி விஜயராகவன். (e-mail : brat.xl@yahoo.com)

கடந்த 2001 வருஷத்துல எந்த ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை எடுத்துக்கிட்டு முந்தைய ஆண்டோட ஒப்பு நோக்கிப் பார்த்தாலும் அந்த டைமுக்குள்ள 2001ல நடந்த சாலை விபத்துகள் அதிகம்னு போலீஸ் புள்ளி விவரம் வெளியிட்டிருக்கு. காரணம், அ) சாலை விதிகள் மீறப்படுவது, ஆ) மோசமான சாலைகள்.

இந்தப் போக்கு காரணமா, மெடிகல் ஃபீல்ட்ல ஏற்கெனவே உதயமாயிருக்கற ட்ராமா கேர் (trauma care), ஆக்ஸிடன்ட் கேர் மாதிரியான ஸ்பெஷலைசேஷனோட ரோட் ஆக்ஸிடன்ட் கேர்னு ஒரு கிளைப் பிரிவு வந்தாலும் ஆச்சர்யப்படறதுக்கில்லை...

பேஷன்ட்களுக்குக் கடவுள் நம்பிக்கை யிருந்தால், அவங்களுக்குச் சிகிச்சை அளிக்கற டாக்டர்கள் அவங்களுக்காக பிரார்த்தனை செய்யலாமாம். அதனால சிகிச்சை சீக்கிரமா பலன் அளிக்க வாய்ப்புகள் இருக்குன்னு மெடிகல் ஜர்னல்ஸ்ல இப்போ புது தியரி அறிமுகமாயிருக்கு... ரோட் ரூல்ஸை மதிக்காதவங்க ஹெல்மட் போட்டுக்காம டூ வீலர் ஓட்டறவங்க – இவங்களுக்காக டாக்டர்ஸ் மட்டும் பிரார்த்தனை செஞ்சா போதாது. உலகமே சேர்ந்துதான் பிரார்த்தனை பண்ணணும்!

ஓ.கே! லாஸ்ட் பாரா வந்தாச்சு! நெய்யப்ப விரும்பி யாருன்னு கண்டுபிடிக்காதவர்களுக்கு... : வித்வான் கே.வி. நாராயணஸ்வாமி. 'அரியக்குடியின் பிரதான சிஷ்யர்' என்ற தலைப்பில் அவர் வாழ்க்கைக் குறிப்புகளின் தொகுப்பு அவருடைய பவழ விழாவையொட்டி வெளியாகியிருக்கு. தன்மை ஒருமையில் கே.வி.என். எழுதியிருக்கிற நினைவலைகள் ரொம்ப சார்மிங் அன்ட் சிம்பிள். ஒரு மனிதருக்கும் அவர் சிந்தனைக்கும் அவர் கலைக்கும் எத்தனை நெருக்கமான தொடர்பு இருக்குன்றதைக் காட்டுது. கே.வி.என். பானைக்குள் தலையை விட்டுக் கொண்டு மணிக்கணக்காக பாடியது (அந்த நாதம் கேட்க நன்றாக இருக்கும்); சினிமாவில் நடித்தது (படம் நான்கு நாட்கள் தான் ஓடியது. பாலக்காடு திரை அரங்கில் எங்கள் குடும்பம் மட்டும்தான் படம் பார்த்தோம்); அரியக்குடியிடம் குருகுலவாசத்திலிருந்தபோது திடுமென்று வார்தாவில் காந்தி ஆசிரமத்துக்கு ஓடிப் போனது; திரும்பி வந்தது... என்று மிக சுவாரஸ்யமான தகவல்கள் கே.வி.என் சொல்பவை. இந்த ஒரு கட்டுரையைத் தொடர்ந்து பழம் பெரும் இசை கிரிடிக் நீலம், கே.வி.என் பற்றி எழுதிய விஷயங்கள்... விஷயங்கள் ரொம்ப குறைவு ரெபடிஷன் ரொம்ப அதிகம் என்றாலும் நீலமோட ஓல்ட் வொர்ல்ட் தமிழ் அங்கங்கே ரசிக்க வைக்குது:



• டாகுமெண்டரியில் சிலதம்பி



• பரதம்

பல்லவிக்காக எடுத்துக் கொண்ட கனராகத்தை நன்கு விசிறி, மூன்று ஸ்தாயிகளிலும் படரவிட்டுப் பாடினார். தானமும் அழகுற அளவுபட தொடர்ந்தது. பக்கத்தில் மணி ஐயர் ம்ருதங்கத் துணையாக வாசித்ததால் மிகுந்த கவனத்தோடும் நிகாவோடும் லய அம்சங்களைச் சாதுரியமாக நிதானித்து, சோர்வோ கணக்கமோ ஏற்படாதவாறு பல்லவியைப் படு கச்சிதமாக வழங்கினார்...

கே.வி.என்னின் பல்லவி போல் அவர் பயாக்ரஃபி ஒன்றை யாராவது நன்கு விசிறி படரவிட்டு எழுத முன்வருவார்களா...? ஆனால் ஒரு நிபந்தனை – நிகா தெரிந்து எழுத வேண்டும்!

— சுமி



மஞ்ச காட்டு மைனா!

கோவை அன்னூர் அருகேயுள்ள மத்திய நாற்றங்கால் பண்ணையில் தொழில் நுட்ப உதவியாளராகப் பணிபுரியும் சு.பாரதிதாசனுக்குப் பறவைகள் என்றால் உயிர். விடுமுறை தினங்களில் காடுகள், மலைகள் என்று பறவைகள் பார்க்க கிளம்பிவிடுவார். படத்தில் நீங்கள் பார்ப்பது அவர் 'கிளிக்'கியவைதாம். 'மஞ்சள் காட்டு மைனா' தெரியுமா? என்றோம். ''அப்படீன்னா?'' என்கிறார் பாரதிதாசன் அப்பாவியாக.

- திருநாவு

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


ரத்னா ஸ்டோர்ஸ் (ஃபர்ம்
சிவா காம்ப்ளக்ஸ்
பாண்டிபஜார்
புரசைவாக்கம்
2002
ஒப்பற்ற
விற்பனை
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
edding Set
புதிய ஆண்டினை எங்களின் அனுகூலமான கவனிப்புடன் ஆரம்பியுங்கள். ரத்னா ஸ்டோர்ஸ் (ஃபர்ம்)க்கு விஜயம் செய்யுங்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசித்தி பெற்ற பிராண்ட்களின் பொருட்களை குறைந்த சலுகை விலையில் வாங்குங்கள்.
Introducing RATHNA FURNITURES
Introducing 9-in-1
VCD, Mp3, ACD, CASSETE, RADIO, AMPLIFIER, KAROKE, EQUALIZER, DETACHABLE BOX WITH REMOTE.
PLAYER ONLY
Rs. 3900/- only
ONE YEAR WARRANTY
With best Complements from
HOTEL SIVAPRIYA
PH : 04542 - 41226 /27/28/29
KODAIKANAL
HOTEL VALLEY VIEW THREE STAR
PH : 04542 - 40181/82/83/84
KODAIKANAL
Bring this cutting and Avail 20% Discount on Tariff
We Welcome Citibank Cards and all major Credit Cards
Shop open on Sundays
லிஃப்ட் வசதி உண்டு
பாண்டி பஜார்
www.rathnastores:firm.com
புரசைவாக்கம்
சிவா காம்ப்ளக்ஸ், 91, பாண்டிபஜார், தி.நகர், சென்னை -17. போன் : 4342942/2952, 4329909/9990/9000/9900/9009/7200/7300
சிவா காம்ப்ளக்ஸ், 199, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600
போன் : 6417171, 6614565, 6614949, 6651199